விலை ரூபா 20 பக்கங்கள் 32

# உதயன்

சுடர் 31 கதிர் 034 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 14, புதன்கிழமை 30.12.2015




## வடக்குக்கு ஒதுக்கிய நிதி திரும்பிச் செல்லும் நிலை

### 38 சதவீதம் மாத்திரமே செலவு

யாழ்ப்பாணம், டிசெ. 30

வடக்கு மாகாணத்தில் இந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான நிதிக் கூற்று அறிக்கை ஒக்ரோபர் மாதத்தின் பின்னர், வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் வெளியிடப்படவில்லை. அத்துடன், ஒக்ரோபர் மாத இறுதிவரை வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 38 சதவீதம் மாத்திரமே செலவு செய்யப்பட்டுள்ளது. பக். 27

## ஜனவரி 8 முதல் நல்லாட்சி வெற்றி வாரம் பிரகடனம்

கொழும்பு, டிசெ. 30

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்று ஒரு வருடம் நிறைவடைவதை முன்னிட்டு எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதி முதல் ஒரு வாரத்தை தேசிய நல்லாட்சி வெற்றி வாரமாக அரசு பிரகடனம் செய்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே பக். 27

## சொன்னதை மறுக்கின்றார் செல்வம் அடைக்கலநாதன்

யாழ்ப்பாணம், டிசெ. 30

மக்கள் பேரவையில் எதிரிகள், துரோகிகள் என்றும், அதில் ஒருபோதும் இணையமாட்டோம் என்றும் நேற்றுமுன்தினம் தெரிவித்த ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் நேற்று அதனை மறுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எதிரிகள் – துரோகிகளுடன் தமிழ் மக்கள் பேரவை – ஒருபோதும் இணையோம் பக். 27

### வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில்

# 700 ஏக்கர் காணி ஆரவாரமின்றி நேற்று விடுவிப்பு

### இன்று முதல் மக்கள் பார்வையிட முடியும்



யாழ்ப்பாணம், டிசெம்பர் 30

வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசமாக இருந்த 7 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 701.5 ஏக்கர் காணி நேற்று விடுவிக்கப்பட்டது. எதுவித ஆரவாரமுமின்றி, இந்தக் காணி விடுவிப்பு இடம்பெற்றது. விடுவிக்கப்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இன்று முதல் எந்தத் தடையுமின்றிப் பார்வையிட பக். 29

பற்றையாகக் காணப்படும் விடுவிக்கப்பட்ட காணிகள் | விடுவிக்கப்பட்ட பகுதிகளில் கூடிய சம்பந்தமில்லாதவர்களால் பதற்றம் | விடுவிக்கப்பட்ட வலி.வடக்கில் மக்களின் பொருள்கள் களவு

விரிவு பக். 09

## தரம் 1 அனுமதி ஜனவரி 14 இல்

கொழும்பு, டிசெ.30

அடுத்த வருடம் முதலாம் ஆண்டுக்குப் புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் தேசிய தினமாக ஜனவரி மாதம் 14 ஆம் திகதியைக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இவ்வாறு இணைத்துக் பக். 27

### முச்சந்தி முரளி



பொங்கலுக்கு ஏற்பாடுகள் தடல்புடல் தான் பாருங்கோ...

## மக்கள் பேரவை கூட்டத்துக்கு சென்றோரிடம் விளக்கம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ. 30

மட்டக்களப்பு சிவில் சமூகத்தின் அனுமதியின்றி அந்த அமைப்பின் பெயரைப் பயன்படுத்தித் தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில் பங்கெடுத்தவர்களிடம் விளக்கம் கோரப்படும் பக். 28

## மார்ச் ஜெனிவா அமர்வுக்கு முன் இலங்கை வருகிறார் ஹூசைன்

### வடக்கு–கிழக்குக்கும் பயணம்

ஜெனிவா, டிசெ.30

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வுக்கு முன்னர், பெப்ரவரி மாதத்துக்குள் அதன் ஆணையாளர் சையிட் அல் ஹூசைன் இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்வார் என்று ஜெனிவாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பயணத்தின்போது, அவர் வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கும் செல்வார் எனவும் அவை குறிப்பிட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர், ஐ.நா. மனித



உரிமை ஆணையாளர் சையிட் அல் ஹூசைனை இலங்கைக்கு வருமாறு, மைத்திரிபால சிறிசேன அரசு அழைப்பு விடுத்திருந்தது.

கடந்த செப்ரெம்பர் மாதம் நடந்த ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடருக்கு முன்னர் அவர் இலங்கை வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், இலங்கை பக். 27

## ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் கடத்தியவர்கள் குறித்தும் உரிய விசாரணை நடத்துமா தமிழ் மக்கள் பேரவை?

### பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி

யாழ்ப்பாணம், டிசெ. 30

தமிழ் மக்கள் பேரவை நீதியான செயற்பாடுகளை முன்னெடுக்கும் என்றால், கடந்த காலங்களில் அரசின் ஒட்டுக்குழுக்களாக இயங்கிய ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் புளொட் ஆகிய அமைப்புக்களால் கொல்லப்பட்ட – கடத்தப்பட்ட தமிழ் மக்கள் தொடர்பிலும் முன்னாள் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் தனியான உபகுழு அமைத்து விசாரணை நடத்துமா? என்று குறித்த ஒட்டுக் குழுக்களால் பாதிக்கப்பட்டு இன்று வரையில் நீதியை எதிர்பார்த்திருக்கும் மக்கள் கேள்வியை எழுப்பியுள்ளனர். பக். 27

## படகு விபத்தில் மற்றுமொரு மீனவரும் சாவு

வடமராட்சி, டிசெ. 30

பருத்தித்துறைக் கடலில் படகு விபத்தில் காணாமற் போன மற்றைய மீனவரின் சடலம் நீண்ட தேடுதலின் பக். 27

## ஜூன் முதல் வாரத்தில் உள்ளூராட்சித் தேர்தல்

### அரசு நேற்று அறிவிப்பு

கொழும்பு, டிசெ.30

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் கலப்புத் தேர்தல் முறை மூலம் எதிர்வரும் ஜூன் மாத முதல் வாரமளவில் இடம் பெறும் என அரசு அறிவித்துள்ளது. பக். 27




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்ட மீனவரை புறக்கணிக்கிறார் டெனீஸ்வரன்

### மீனவ சமாசத்தினர் குற்றச்சாட்டு அடியோடு மறுக்கிறார் அமைச்சர்

யாழ்ப்பாணம், டிசெ.30

யாழ்.மாவட்ட மீனவர்களின் குறைநிறைகள் தொடர்பில் வடமாகாண மீன்பிடி அமைச்சர் டெனீஸ்வரன் இதுவரை சந்திப்புக்களை மேற்கொள்ளவில்லை என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை அமைச்சர் டெனீஸ்வரன் அடியோடு மறுத்துள்ளார். சுயநலத்துடன் கருத்து வெளியிடுவதை நிறுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்று நடைபெற்றது. அதிலேயே வடக்கு அமைச்சர் மீது இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டது.

அங்கு மேலும் தெரிவிப்பட்டதாவது-

தமிழ் அரசியலில் எங்கள் சமூகத்துக்கென தனி இடம் உண்டு. ஆனால் இதுவரை எங்களை வடக்கு மீன்பிடி அமைச்சர் சந்திக்கவில்லை. எங்கள் பிரச்சனைகள் தொடர்பில் கேட்டறியவில்லை.

அவர் மன்னார் மாவட்டத்துக்கே அதிக பங்களிப்புச் செய்கிறார். அவர் மன்னார் மீன் பிடி அமைச்சர் இல்லை. மாறாக வடக்கு மீன்பிடி அமைச்சர் என்பதை நாங்கள் நினைவூட்ட விரும்புகிறோம். அத்துடன் அவரைச் சந்திப்பதற்கு பகிரங்கமாக அழைப்பும் விடுக்கின்றோம் எனத் தெரிவித்தனர்.

சம்மேளனத்தினரின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அமைச்சர் பா.டெனீஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்ட போது:

யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தினரின் குற்றச்சாட்டுக்களை நான் அடியோடு மறுக்கிறேன். அத்துடன் எனது கடுமையான கண்டனத்தையும் வெளியிடுகின்றேன்.

சர்வதேச மீனவர் தினத்தில் கூட நான் சம்மேளனங்களின் தலைவர்களைச் சந்தித்தேன். அப்போது இவர்கள் எங்கே சென்றிருந்தார்கள்? முதலில் இவர்கள் எழுந்தமானமாக கதைப்பதை நிறுத்த வேண்டும். இணையத்தைக் கூடப் பல தடவைகள் சந்தித்திருக்கின்றேன்.

மீன்பிடி என்பது எனக்கு கீழ் வரும் விடயம் அல்ல. நன்னீர் மீன்பிடி என்பதே எனக்கான அதிகாரத்தின் கீழ் வருகின்றது. இருந்தாலும் மீன்பிடி தொடர்பிலும் நான் பல செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளேன். சுயநலத்துடன் கருத்து வெளியிடுவதை முதலில் அவர்கள் நிறுத்தவேண்டும். மீனவர் பிரச்சினை தொடர்பில் நான் பேசாமல் இருக்கவில்லை. ஜனாதிபதியைக் கூட சந்தித்துப் பேசியிருக்கிறேன்.

குறிப்பாக இந்திய இழுவைப் படகு, தடைசெய்யப்பட்ட மீன்பிடி, மீனவ கிராமிய அமைப்பு போன்ற பல விடயங்களை உள்ளடக்கியனவாக அமைந்திருந்தன. ஆனால் அவற்றுக்கு மன்னார் மாவட்டத்தில் ஒரு அமைப்பு மட்டுமே பதில் வழங்கியிருந்தது.

அசமந்தமாக இருந்துவிட்டு குற்றச்சாட்டு தெரிவிப்பது சரியா? இதனால் தான் எங்கள் நாடு இந்த நிலையில் உள்ளது. இந்திய இழுவைப் படகு விடயம் தொடர்பாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தினரின் கட்டடத்திலேயே சந்தித்திருக்கின்றேன். அவர்கள் தற்போது வெளியிட்ட கருத்தை நான் அடியோடு மறுக்கிறேன் என்றார்.

(ற-ஐ-10)

# மகளுக்கு அனுப்பிய கடிதம் மீள தந்தைக்கே கிடைத்தது

### தபால் திணைக்களத்தின் அசமந்தம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

மகளுக்கு அனுப்பிய கடிதம் ஒரு வாரத்தின் பின்னர் மீண்டும் தந்தைக்கே கிடைக்கப் பெற்றுள்ளது. இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர் அச்சுவேலிப் பகுதி தபால் நிலையத்தைத் தொடர்பு கொண்ட போது கடிதம் கொழும்பிலிருந்து திருப்பியனுப்பப்பட்டது என்று தெரிவித்துள்ளனர்.

கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு பிரான்சில் வாழும் தன்னுடைய மகளுக்காக, முகவரியிடப்பட்டு அச்சுவேலிப்பகுதியைச் சேர்ந்த தந்தையால்சாதாரணதபால்ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனினும் உரிய கடிதம் குறித்த முகவரியைச் சென்றடையாமல் கடித உறையில் முகவரி மற்றும் அடையாள இலக்கம் என்பன கிழிக்கப்பட்ட நிலையில் அனுப்பிய முகவரியில் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடிதம் கொழும்பிலிருந்து திரும்பி அனுப்பப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் கடித உறையில் கொழும்பு வரை சென்று திரும்பியதற்கான தடய ஆதாரங்கள் காணப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பாக யாழ் பிரதம தபால் நிலையத்தினரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, கடிதம் சேதப்படுத்தப்பட்டது தொடர்பான முறைப்பாடு கிடைத்துள்ளது என்று தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக தபால் நிலைய முறைப்பாட்டு அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்படும். விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட முடியாத போதும், விசாரணைகள் முடிவடைந்ததன் பின்னர், கடிதம் அனுப்பப்பட்டதில் அலுவலகத் தவறுகள் ஏற்பட்டிருந்தால் இது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தனர். (ற-ஐ-ரி5)

# பரிசளிப்பு விழா நாளை

பளை, டிசெ.30

பளை தர்மக்கேணி அ.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் வே.செல்வகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொள்வார். (ற-ஐ-9)

# உயிர்காப்பு அங்கிகள் வழங்கப்படாததால் உயிராபத்துடன் தொழில் செய்யும் நிலை

### கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.30

கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தில் உயிர்காக்கும் அங்கிகள் வழங்கப்பட்டும், அவை இன்னமும் மீனவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவில்லை. அதனால் மீனவர்கள் உயிராபத்துக்கு மத்தியில் தொழில்புரிய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. - இவ்வாறு யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தினர் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

வடக்கு மாகாண மீனவர்கள் பல்வேறு பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். தற்போது தொழிலின் போது மீனவர்கள் உயிரிழக்கும் சம்பங்கள், விபத்துக்குள்ளாகும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன. இந்த நிலையில் மீனவர்களுக்கு உயிர் காக்கும் அங்கிகள் அவசியமாகின்றன. ஒரு தொகுதி உயிர்காக்கும் அங்கிகள் அரசால் வழங்கப்பட்ட நிலையில், ஏனைய அங்கிகள் நீரியல் வளத்திணைக்களத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

உயிர்காக்கும் அங்கிகள் இருந்தால் மீனவர்களின் உயிரைக் காப்பாற்ற முடியும். அத்துடன் காலநிலை சீரின்மையை கருத்தில் கொண்டாவது மயிலிட்டி துறைமுகத்தை விடுவிக்க உரிய தரப்பினர் முன்வர வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது-

அத்துடன் புயல் நேரங்களில் படகுகளைக் கரை சேர்த்து பாதுகாக்க துறைமுகம் அவசியம். அதிலும் மயிலிட்டி துறைமுகம் மீனவர்களுக்கானது. இதை விடுவித்துத் தரும்படி பல தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்தோம். எங்களது கோரிக்கையை வடக்கு அரசு கூட செவிமடுக்கவில்லை. நல்லாட்சியிலும் எங்கள் சமூகத்துக்கு விடிவு கிடைக்கவில்லை. இதனைவிட நெடுந்தீவு என்ற அழகிய தீவு அழிந்துவரும் நிலையில் உள்ளது. இது தொடர்பில் சூழலியலாளர்களும் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். எச்சரித்துள்ளனர். இதற்கு கரையோரச் சுவர்கள் அமைக்கப் படாததும் அமைந்துள்ள கரையோர தடுப்புச் சுவர்கள் அழிவடைந்து வருவதும் முக்கிய காரணங்களாகின்றன.

இது தொடர்பிலும் உரிய அமைச்சு கவனமெடுக்கவில்லை. வரவு -செலவுத் திட்டத்திலும் கரையோர மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை. கரையோர வெளிச்சவீடுகள் தொழிலுக்கு அவசியம். முனை வெளிச்ச வீடு உட்பட முக்கியமான வெளிச்சவீடுகள் அனைத்தும் படையினர் வசம் உள்ளன. இவற்றை விடுவிக்கவும் உரிய தரப்பினர் முன்வரவில்லை.

சுண்டிக்குளம் முதல் பொன்னாலை வரையான கரையோர வீதிகளைத் திருத்த எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. தேர்தல் காலத்தில் மட்டும் போலி வாக்குறுதிகளை வழங்கி வாக்குகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

அத்துடன் இந்திய இழுவைப் படகு விவகாரத்தில் இந்திய - இலங்கை அரசுகள் இணைந்து தீர்வு பெற முயற்சிக்க வேண்டும். அதைவிடுத்து இரு நாட்டு மீனவர்களையும் மோதவிடும் நடவடிக்கையில் அரசு ஈடுபடக் கூடாது.

இலங்கைத் தமிழர்களின் தொப்புள்கொடி உறவு இந்தியத் தமிழர்கள். எமக்காகக் குரல் கொடுப்பவர்கள் அவர்கள். கடந்த காலத்தைப் போன்ற கண்துடைப்புப் பேச்சை விடுத்து ஒழுங்கான பேச்சு மூலம் தீர்வு காண முடியும்.

30 வருட கால உள்நாட்டுப்போரால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் அவர்களுக்கான வங்கிக் கடன்களை ரத்துச் செய்ய வேண்டும். அவர்களால் குறித்த பணத்தை செலுத்த முடியாத அளவுக்குள்ளது அவர்களின் இழப்புக்கள். இந்த நிலையில் மீனவர்கள் உயிரை மாய்த்துக்கொள்ளும் சம்பவங்களும் நடைபெறுகின்றன. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்படாதது தொடர்பில் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ரமேஷ் கண்ணாவைத் தொடர்பு கொண்டு கேட்டபோது: .

எரிபொருள் மானியத்துக்குப் பதிலாகவே மாற்று வலை உபகரணத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. இதன் கீழ் பதிவு செய்யப்பட்ட படகு உரிமையாளர்களுக்கு ஒரு சோடி உயிர் காக்கும் அங்கிகள், வலை உபகரணங்கள் வழங்கப்படும்.

யாழ். மாவட்டத்தில் 2 ஆயிரத்து 600 பதிவு செய்த பயனாளிகள் உள்ளனர். இவர்களில் ஆயிரத்து 543 பயனாளிகளுக்கான பெயர்ப்பட்டியலும், அனுமதியும் தலைமை அலுவலகத்தில் இருந்து கிடைக்கப்பெற்றன.

அதன்படி முதற்கட்ட விநியோகங்கள் நிறைவடைந்துள்ளன. இந்த நிலையில் மிகுதிப் பேருக்கான பெயர்ப் பட்டியலும் வழங்குவதற்கான அனுமதியும் கிடைக்கப்பெறவில்லை. இதனால் தான் குறித்த உயிர் காக்கும் அங்கிகளை வழங்க முடியவில்லை. அவற்றை வழங்கி மீனவர்கள் உயிர்காக்க நாங்களும் தயாராகவே உள்ளோம் என்றார். (ற-ஐ-10)

## ஊடகவியலாளர் மீதான தாக்குதல் சந்தேகநபருக்கு பிணை அனுமதி

வவுனியா, டிசெ.30

வவுனியா நகரில் கடந்த வியாழக்கிழமை ஊடகவியலாளர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நேற்று அடையாள அணிவகுப்புநடைபெற்றதுடன், கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வவுனியாவில் போக்குவரத்துக்கு இடையூறாகும் வகையில் வர்த்தக நடவடிக்கைகள் இடம் பெற்று வந்தன. இதனால் அவ்வாறான வர்த்தக நடவடிக்கைகளை நிறுத்துமாறு வவுனியா நகரசபை தெரிவித்தது. இதன்படி நகரசபை ஊழியர்கள் கடந்த வியாழக்கிழமை அதற்கான நடவடிக்கைகளையும் மேற் கொண்டனர்.

இதன்போது அங்கு வர்த்தகர்கள் நகர சபை ஊழிர்கள் இடையே முரண்பாடு ஏற்பட்டது. அங்கு செய்தி சேகரித்துக் கொண்டிருந்த ஊடகவியலாளர் ஒருவர் மீது அங்கிருந்த வர்த்தகர் ஒருவர் தாக்குதல் மேற்கொண்டார்.

இதனையடுத்து நேற்று நீதிவான் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடைபெற்றதுடன், ஊடகவியளாளர் மீது தாக்குதல் மேற்கொண்டார் என்று சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட நபரை 25 ஆயிரம் ரூபா சரீர பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ற-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்தியங்களின் கூட்டு என்பதில் விளக்கமில்லை

சொல்கிறார் வடக்கு முதல்வர்

யாழ்ப்பாணம், டிசெ. 30
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையில் பிராந்தியங்களின் கூட்டு என்ற அடிப்படையில் தீர்வு காணப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் பிராந்தியங்களின்கூட்டுஎன்பதற்கு அரசியல் ரீதியான விளக்கம் - வியாக்கியானம் எதுவும் இல்லை என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ் மக்கள் பேரவையின் இரண்டாவது கூட் டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை, யாழ்.பொது நூலகத்தில் இடம்பெற்றது. இதன்போது அரசியல் தீர்வு தொடர்பில் உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டது. இதன் போதான விவாதத்தில் கருத்துத் தெரிவிக் கையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நாடாளுமன்றத் தேர்தலின்போது, தமது தேர்தல் அறிக்கையில் பிராந்தியங்களின் கூட்டு என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருந்தது.

இந்த வார்த்தைக்கு அரசியல் ரீதியான விளக்கம் - வியாக்கியானம் இல்லை. இதனால் இதனூடான தீர்வு என்பது எதனைக் குறிக்கின்றது என்பது தெரியாது.

சமஷ்டி அடிப்படையிலான தீர்வுத் திட்டமே முன்வைக்கப்பட வேண்டும். அதற்குரிய வகையிலேயே எமது செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும். சமஷ்டி தொடர்பில் சிங்கள மக்கள் மத்தியில் குழப்பங்கள் நிலவு கின்றன. அதனைத் தெளிவுபடுத்தும் நடவடிக்கையையும் நாம் முன்னெடுக்க வேண்டும். இவ்வாறு முதலமைச்சர், இந்தப் பேரவைக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்துள்ளார். (த-5)

# 2015 இலங்கைக்கு ஜனநாயக வெற்றி

*ஜோன் கெரி கருத்து*

வோஷிங்டன், டிசெ.30
2015ஆம் ஆண்டு இலங்கையிலும் உலகின் ஏனைய சில நாடுகளிலும், மிகவும் முக்கியமான ஜனநாயக வெற்றிகள் கிடைத்திருப்பதாக, அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டு நிறைவடையும் நிலையில், பொஸ்டன் குளோப் இதழுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே ஜோன் கெரி இவ்வாறு கூறியுள்ளார்.

கொந்தளிப்பும், துன்பங்களும் இருந்த போதிலும், கடினமான பிரச்சினைகளையும் சமாளிக்க உலக சமூகம் ஒன்றிணையும் என்ற நம்பிக்கையைத் தந்த ஆண்டாக 2015 ஆம் ஆண்டு அமைந்திருக்கிறது.

இலங்கை, நைஜீரியா, பர்மா, வெனிசுவேலா உள்ளிட்ட நாடுகளில் மிகவும் முக்கியமான ஜனநாயக வெற்றிகள் கிடைத்திருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த-வ)

**ஆண்/பெண் விற்பனையாளர் தேவை**
ஆங்கில அறிவும் கணினி அறிவும் கொண்ட யாழ். மாநகர சபை அண்மையாக இருத்தல் வேண்டும்.
வேலை நேரம்:- 8.00am-5.30pm
213, இராமநாதன் வீதி, திருநெல்வேலி
(யாழ் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக)
தொடர்பு: 0770444496

நியத்த ஜய
423
29-12-2015
மஞ்சள்
11 34 49 57 F
எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ. 19,311,280/-

லக்கின
இம்முறை தனயோகம் உங்களுடையதா?
29.12.2015
1922
நீலம்
29 32 49 58
வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,000,000/-

# ஆடைகள் இல்லாமல் வீதிகளில் செல்வதையா விரும்புகிறீர்கள்?

*விமர்சகர்களிடம் ஜனாதிபதி கேள்வி*

கொழும்பு, டிசெ.30
இசை நிகழ்ச்சி ஒன்றில் இடம்பெற்ற சம்பவம் குறித்து தான் வெளியிட்ட கருத்துத் தொடர்பில் சேறு பூசுகின்றனர் எனக் குற்றஞ்சாட்டியுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஆடைகள் இன்றிவீதியில்செல்வதையாவிரும்புகின்றார்கள் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்தவாரம் கொழும்பில் இடம்பெற்ற உலகப் புகழ்பெற்ற பாடகரான என்ரிக் இக்லேசியஸ் கலந்துகொண்டிருந்த இசை நிகழ்ச்சியைக் காணவந்திருந்த, சில பெண்கள் மிகவும் கீழ்த்தரமாக நடந்து கொண்டிருந் ததாகவும், இளம் சமூகத்தைத் தவறாக வழி நடத்தக் கூடியதாக இருந்ததென்றும் ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேன அண்மையில் அம்பாறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அதிருப்தி வெளியிட்டிருந்தார்.

இந்த நிகழ்ச்சியை காணச் சென்ற பெண்ணொருவர், பாடகரின் மீது தனது உள்ளாடையைக் கழற்றி வீசுவது போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றதைக் காணமுடிந்தது என்றும் ஜனாதிபதி மைத்திரி அம்பாறையில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் குறிப்பிட்டதுடன், இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு இனி இடமில்லை என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பையடுத்தே அதற்கு எதிராகச் சில தரப்பினரால் குரல் எழுப்பப்பட்டு வருகின்றது. இந் நிலையில், இது குறித்து நேற்று மீண்டும் கருத்து வெளியிடுகையில், அண்மையில் இசை நிகழ்ச்சி ஒன்றில் இடம்பெற்ற சம்பவம் குறித்து தான் வெளியிட்ட கருத்துத் தொடர்பில் இணையத்தில் சேறு பூசும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் இவ்வாறு சேறு பூசுவதால் எனக்கு ஏதும் நேராது என்றும் சுட்டிக்காட்டிய அவர், இந்த நாட்டில் கலாசாரச் சீரழிவே ஏற்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இவ்வாறு சேறுபூசும் நபர்கள் கோரிக்கைவிடுப்பது ஆடைகள் இன்றி வீதியில் செல்லவா என்றும், இந்த விடயத்தால் நாட்டின் கலாசாரம் எவ்வளவு குறைத்து மதிப்பிடப்படும் எனவும் தான் அவர்களிடம் கேள்வி எழுப் புவதாக ஜனாதிபதி மைத்திரி மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-சி)

**வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்**



கடந்த 02.12.2015 புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்
**தில்லையம்பலம் சின்னத்துரை** (போதகர் துரையர்)
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.12.2015) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 02.01.2016 சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுத் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
அன்னாருக்கு வைத்திய உதவி வழங்கியவர்களுக்கும், வெளிநாடுகளிலிரு... அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் ... புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு. குடும்பத்தினர்.

**வேலை வாய்ப்பு**




✔ கணனி இயக்குநர்
✔ புத்தகம் கட்டுநர்
✔ பழக விரும்புவோர்
✔ உதவியாளர்கள்
இருபாலரும் விண்ணப்பிக்கலாம் 29.12.2015 - 31.12.2015
யாழில் கொழும்பு பிறிண்டேர்ஸ்
666.கே..கே.எஸ் வீதி யாழ். 0771974875

புத்தி சாதுரியமான மாணவச்செல்வங்களின் மதி நுட்பமான
**ஞானோதய அக்கடமி**
சங்கத்தானை, சாவகச்சேரி
A/L 2018 A/L Day Class
★ கலை ★ வர்த்தகம் ★ கணிதம் ★ உயிரியல்
★ தொழில் நுட்பம் (செயன் முறைப் பயிற்சிகளுடன்)
★ B.A பட்டப்படிப்பு வகுப்புகள் ★ ஆண்டு 09, 10, 11 வகுப்புக்கள்
ஆரம்பம்: 01.01.2016 வெள்ளி காலை 09.00 மணி
அனுபவமும் திறமையும் வாய்ந்த யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை.
நிர்வாகம்.

**சேவைநலன் பாராட்டும் பிறந்த தின வாழ்த்தும்**
Best Wishes



தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளையில் முகாமையாளராகக் கடமையாற்றி இன்று (30.12.2015) சேவையிலிருந்து இளைப்பாறும்
**திரு. நியூட்டன் ஜெனநாதன்**
அவர்களை மனமுவந்து பாராட்டுவதுடன் அவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைய வேண்டுமென வாழ்த்துகின்றோம்.
முகாமையாளரும், உத்தியோகத்தர்களும்,
தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரி கிளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஊடகவியலாளர்களைத் தாக்கியவர் பொன்சேகா

## தாய்நாட்டுக்கான ராணுவம் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.30
போர் இடம்பெற்ற காலத்தில் ஊடகவியலாளர் கீத் நொயரை பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா உள்ளிட்ட குழுவினரே தாக்கியதாக தாய்நாட்டுக்கான இராணுவம் அமைப்பு குற்றஞ்சுமத்தியுள்ளது.
கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலார் சந்திப்பில் அந்த அமைப்பின் இணைப்பாளர் மேஜர் அஜித் பிரசன்ன இதனைத் தெரிவித்தார்.
கீத் நொயரை சரத்பொன்சேகா உள்ளிட்ட குழுவினர் தாக்கியமைக்கான சாட்சியங்கள் உள்ளதாக, கடந்த 2008ஆம் ஆண்டு ஜுலை மாதம் 8ஆம் திகதி நாடாளுமன்றில் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்ததாக அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். எனினும், இவர்கள் இன்று சுதந்திரமாக வெளியில் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.
ஆனால் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட விடுதலைப் புலிகளுக்கு உதவியுள்ளமை குறித்து, அவரது மனைவி சந்தியாவின் வாக்குமூலத்திலிருந்து தெரியவருவதாக மேஜர் அஜித் பிரசன்ன குறிப்பிட்டார்.
எனினும், ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற் போனமை தொடர்பில் விசாரணை நடத்தும் அரசு, ஊடகவியலாளர் கீத் நொயர் தொடர்பில் விசாரணை நடத்தத் தயக்கம் காட்டுவதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (த்)

# சிகிரியாவில் புராதன பகுதி உடைந்து வீழ்ந்ததில் சேதம்

கொழும்பு, டிசெ.30
சிகிரிய குகை ஓவியங்களுக்கு மேலுள்ள புராதன கட்டுமான பகுதியொன்று, நேற்று முன் தினம் திங்கட்கிழமை உடைந்து வீழ்ந்துள்ளது.
குகை ஓவியங்களுக்கு மேலாக காணப்படும் சுமார் ஒன்றரை அடி உயரமான பகுதியே இவ்வாறு உடைந்து வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், ஓவியங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.
குறித்த பகுதியைச் சீரமைக்கும் பணி தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தொல்பொருளியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
உள்ளூரின் உலக அதிசயமெனக் கருதப்படும் சிகிரியக் குகை ஓவியத்தைக் காண, வருடத்தின் அனைத்துக் காலப்பகுதியிலும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்தோர் அங்கு பார்வையிடச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த்)

* பல் முக சீராக்கல்
(Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை
(Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் டெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)

### வேலைவாய்ப்பு

இலங்கையில் அமைந்துள்ள நிறுவனங்களுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆண்,பெண்கள் தேவை. வயது 18-55 சம்பளம் OT யுடன் 35000/-சாப்பாடு இலவசம். தேவைப்படும் பிரதேசங்கள் யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, மன்னார்,வவுனியா, திருகோணமலை மற்றும் சகல பிரதேசங்களுக்கும். வருகை தரும் நாளில் சேர்க்கப்படுவீர்கள்.
தொடர்புகளுக்கு. 076 541 2260
145/161, People's Park
Pittokoddawa.
(சி.28061) (13.15)



### வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை 2016 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டம்

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் 2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் மீண்டும் வரும் வருமானமாக ரூபா 72,923,850.00வும் மீண்டும் வரும் செலவினமாக ரூபா 62,255,945.00வும் மானியம் உட்பட மூலதனச்செலவினமாக 21,667,900.00 ரூபா ஆகவும் வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு 380ஆம் இலக்க 21.12.2015 ஆம் திகதிய நிர்வாககட்டளை மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுகந்தி கிஷோர்,
செயலாளர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

# புதிய கட்சியை உருவாக்குவேன்

## எச்சரிக்கிறார் மகிந்த ராஜபக்ச



கொழும்பு,டிசெ.30
கட்சிகளில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை இடைவிலக்கினால், அவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்துப் புதிய அரசியல் கட்சியை உருவாக்குவேன். அதனைஎவராலும்தடுக்க முடியாது என முன்னாள் ஜனாதிபதியும் நாடளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
ஊருபொக்க ஹெரகஸ்மண்டிய பிரதேசத்தில் சுதந்திரக் கட்சியின் அலுவலகம் ஒன்றைத் திறந்து வைத்து ஊடகவியலாளர்களுக்குக் கருத்துரைக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,
தற்போதைய சூழ்நிலைகளைப் பார்க்கும்போது புதிய அரசியல் கட்சி ஒன்று உருவாகாது எனக் கூறிவிட முடியாது. கட்சிகளில் இருந்து விலக்கப்படுகின்றவர்களுக்கு, செல்வதற்கு ஓர் இடம் ஒன்று தேவையாகவுள்ளது. அத்துடன் வலுவான எதிர்க்கட்சியை உருவாக்கும் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. அரசுக்குச் சரியான வழியைக் காட்ட வலுவான எதிர்க்கட்சி அவசியம்.
அதேவேளை, எதிர்க்கட்சியில் உள்ள நாடளுமன்ற உறுப்பினர்கள், அரசுடன் இணையத் தயாராக இருப்பது குறித்து என்னால் எதுவும் சொல்ல முடியாது. கட்சியைக் காட்டிக் கொடுத்தவர்கள் இன்று அரசியலில் இருக்கின்றனர் என்றார். (த-ஐ)


குழு வகுப்புக்கள்
தொடர்பு: 077 834 0848
077 847 5072
தரம் 6 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக்கு ஆங்கில மொழி மூலமும்,தமிழ் மொழி மூலமும் கணித,விஞ்ஞானம் மற்றும் ஆங்கில (Group Classes) குழு வகுப்புக்கள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகவுள்ளன.

தேவை
தொடர்பு: 077 907 6843
நல்லூர்ப் பகுதியில் அமைந்துள்ள சிற்றுண்டிச் சாலைக்கு பெண்காசாளர் தேவை.
(தகைமை O/L) (67095) (14,15)

காணி தேவை
தொடர்பு: 077 996 1712
கல்வியங்காடு டச் றோட் அல்லது இராச வீதி அதன் சுற்றாடல்களில் 2 அல்லது 3 பரப்புக் காணி தேவை.
(67181)(12.15.16)

பணிப்பெண் தேவை
தொடர்பு: 075 520 0693
வயதானவர்களைப் பராமரிக்கவும் வீட்டு வேலைகளைச் செய்யவும் பணிப் பெண் ஒருவர் தேவை.
(67180)(12.15.16)

ஆசிரியர்கள் தேவை
ஆங்கில மொழிமூல Group Classes நடத்துவதற்கு ஆசிரியர்கள் தேவை. நேரடியாக தொடர்பு கொள்ளவும்.
Beefort International School
136, Navalar Rd, Jaffna.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாட்டிறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு எடுப்பதில் குத்தகைக்காரர் பின்னடிப்பு

## உள்ளூராட்சிச் சபைகள் திண்டாட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

வட மாகாணத்தில் உள்ள மாட்டிறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு விடுவதில் உள்ளூராட்சி சபைகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனஎன்றுதெரிவிக்கப்படுகின்றது. மாட்டிறைச்சிக் கடைகள் குத்ததைவிடுவதுதொடர்பான அறிவித்தல்கள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுகின்ற போதிலும், குத்தகைக்கு எடுக்க இறைச்சிக் கடை நடத்துவோர் பின்னடித்து வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

> “காதடையாளம் இடப்பட்ட மாடுகளையே இறைச்சியாக்குவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கால் நடை வைத்தியரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.”

இறைச்சிக்கடைகளைவருடாந்தம் குத்தகைக்கு விடுவதற்கான அறிவித்தல் வெளியானதும் பலர் முண்டியடித்து உரிய படிவங்களைப் பெற்று போட்டியிட்டு குத்தகைக்கு விண்ணப்பம் செய்வர். பலத்த போட்டியின் அடிப்படையில் குத்தகையாளர் தெரிவு செய்யப்படுவர். ஆனால் 2016 ஆம் ஆண்டுக்கான இறைச்சிக் கடைகள் குத்தகைக்கு விடுவது தொடர்பாக இரண்டுக்கு மேற்பட்ட அறிவித்தல்கள் உள்ளூராட்சிச் சபைகளால் பத்திரிகைகளில் வெளியாகிய போதிலும் படிவங்கள் எடுக்கக் குத்தகையாளர்கள் முன்வராதநிலை காணப்படுகிறது.

இதனால் பல உள்ளூராட்சி சபைகளில் அடுத்த வருடம் மாட்டிறைச்சிக் கடைகள் இயங்காதிருக்கும் நிலைமை ஏற்படலாம் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

இது தொடர்பாக இறைச்சிக் கடைகள் குத்தகையாளர்களிடம் கேட்ட போது, காளை மாடுகள் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது என்று தெரிவித்தனர்.

இந்த மாடுகள் வயதில் 18 மாதங்களுக்குமேற் பட்டவையாகவும்கால் நடைவைத்தியரால்நோயற்றமாடுகள் என பரிந்துரை செய்யப்பட்டு காதில் இலக்கத் தகடு பொருத்தப்பட்டதாகவும் இருக்க வேண்டும் என பொதுச் சுகாதார பரிசோதகர்களால் அறி வுறுத்தப்படுகின்றது. அவ்வாறான மாடுகளைப் பெற்றுக் கொள்வதில் இறைச்சிக் கடை நடத்தும் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருவதாக அவர்கள் கூறினார்கள்.

இதனால் அடுத்த வருடம் மாட்டிறைச்சிக் கடைகளைக் குத்தகைக்குப் பெறுவதற்குத் தாம் முயற்சிக்கவில்லைஎன்றும்அவர்கள்தெரிவித்தனர்.

மாதாந்தம் உள்ளூராட்சி சபைக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் , மாடுகள் கொள்வனவு செய்வதில் ஏற்படும் வாகனச் செலவு, தரகுக் கட்டணம் உட்படப் பல்வேறு செலவுகள் ஏற்படுகின்றன. இவற்றைக் கருத்தில் கொண்டு அடுத்த வருடத்துக்கான இறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு எடுப்பதைத் தவிர்த்துள்ளோம் என வும் அவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை சில உள்ளூராட்சி சபை யொன்றின் மாடுகளை வெட்டக் கூடிய கொல்கள வசதி இல்லாத நிலை காணப்படுகிறது. இந்த நிலையில் வேறு உள்ளூராட்சி சபையொன்றின் கொல்களத்தில் மாடு களை வெட்டிக் கொண்டு வருவதில் ஏற்படும் அசெள கரியங்களாலும் மாட்டிறைச்சிக் கடைகளை குத் தகைக்கு எடுப்பதற்கு பின்னடிக் கின்றனர் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் கேட்ட போது:

அரசால் 2013 ஆம் ஆண்டு விடுக்கப்பட்ட “மாடுகளுக்கு குறியிடல் தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்” தொடர்பான சுற்றறிக்கை மூலம் காதடையாளம் இடப்பட்ட மாடுகளையே இறைச் சியாக்குவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கால்நடை வைத்தியரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிபந்தனையைச் செயற்படுத்த வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு. உள்ளூராட்சி சபைகளின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில்உள்ள இறைச்சிக் கடைகளில் வெட்டப்படும் மாடுகளை கால் நடை வைத்தியரின் பரிந்துரையின் பின்னரே வெட்ட அனுமதிக்க வேண்டும்.

யாழ். மாநகரசபை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள இறைச்சிக் கடைகளுக்கு கால் நடை வைத்தியரின் அனுமதிக் கடிதத்தைப் பெற்ற பின்னரே மாடுகளை வெட்ட பொது சுகாதார பரிசோதகர்களால் வெட்அனுமதி வழங்கப்படுகிறது.

மாடுகளின் உரித்தை உறுதிப்படுத்துவது, மாடுகள் திருடப்படுவதைத் தடுப்பது, திருட்டு மாடுகள் வெட்டுவதைத் தடுப்பது போன்ற விடயங்களைக் கருத்தில் கொண்டு அரச சுற்றறிக்கையின் பிரகாரம் பொது மக்களின் நலன் கருதி நாம் செயற்படுகின்றோம்.-என்றார். (ற-ஐ-9)

## பாடசாலைகளில் சிரமதானம் செய்யுமாறு அறிவுறுத்து

சாவகச்சேரி, டிசெ.30

தென்மராட்சிப் பிரதேச பாடசாலைகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் போன்றவற்றைச்சிரமதானம் மூலம் துப்புரவு செய்யுமாறு சாவகச்சேரி சகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

பிரதேசத்தில் டெங்குத் தொற்று அதிகமாகக் காணப்படுவதால், மாணவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களின் வளாகங்களைச் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யுமாறு சுகாதாரப் பகுதியினர் பாடசாலை அதிபர் களையும் தனியார் கல்வி நிலையங்களின்உரிமையாளர்களையும் கேட்டுள்ளனர்.

(ற-ஐ-9)

## தொழில் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ.30

இலங்கை தொழில் பயிற்சிஅதிகாரசபையின் சுன்னாகம் மற்றும் கந்தரோடை ஆகிய தொழில் பயிற்சி நிலையங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள அலுமினியம் பொருத்துநர், விவசாய இயந்திர உபகரணங்கள் திருத்துநர் கற்கை நெறிகளுக்கானவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தின், முதலாம் மாடியில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகத்தில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னராகப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு இலங்கை தொழில் பயிற்சிஅதிகாரசபையின் யாழ்ப்பாண உதவிக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ற-ஐ-ரி5)

# கடையில் திருடிய பெண்களிடம் பொலிஸ் பாணியில் விசாரணை

## விசாரித்தவர்களும், திருடியவர்களும் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், டிசெ.30

மானிப்பாய்ப் பகுதியில் அன்பளிப்புப் பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனமொன்றுக்குள் புகுந்து பொருள்களைத் திருடிய பெண்களை, பாதுகாப்புக் கமராவின் உதவியுடன் இனங்கண்ட கடை உரிமையாளர்கள், திருடிய பெண்களை மானிப்பாய்க்குக் கடத்தி வந்து பொலிஸ் பாணியில் விசாரணை செய்துள்ளனர். விசாரணை செய்த நான்கு நபர்கள் மற்றும் திருடிய பெண்கள் நால்வரையும் எதிர்வரும் ஜனவரி மாதம் 11ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

கடந்த வாரம் மானிப்பாய்ப் பகுதியில் உள்ள குறித்த விற்பனை நிலையத்துக்குள் நுழைந்த சாவகச்சேரி மற்றும் நுணாவில் பகுதியைச் சேர்ந்த குறித்த பெண்கள் அங்கிருந்த அன்பளிப்பு பொருள்களைத் திருடியிருந்தனர் என்று தெரிவிக்கப்படு கின்றது.

இந்தத் திருட்டுச் சம்பவம் அங்கு பொருத்தியிருந்த பாதுகாப்புக் கமராவில் பதிவாகியிருந்தது. கமராவில் பதிவாகியிருந்த காணொலியை குறித்த கடையின் உரிமையாளர் தனது முகப்புத்தகத்தில் தரவேற்றம் செய்திருந்ததுடன், திருட்டுடன் தொடர்புடைய குறித்த பெண்களை இனங்கண்டு தருமாறு கோரியிருந்தார்.

இந்த நிலையில் குறித்த காட்சிகளைப் பார்த்த நபர் ஒருவர் திருடிய பெண்களை இணங்கண்டு கடை உரிமையாளருக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு எதுவும் பதிவு செய்யாத கடை உரிமையாளர் தானே நேரடியாக விசாரணைகளை முன்னெடுக்க முற்பட்டுள்ளார்.

இதற்காக கடை உரிமையாளரும், இன்னும் சிலரும் சாவகச்சேரிப் பகுதியில் உள்ள குறித்த பெண்களின் வீடுகளுக்குச் சென்று, தாம் பொலிஸ் புலனாய் வாளர்கள் எனக் கூறி மிரட்டி அவர்களை விசாரணை செய்ய வேண்டும் என மானிப்பாய்க்கு அழைத்து வந்துள்ளனர்.

குறித்த பெண்களைக் காலை 8 மணிக்கு அழைத்து வந்து மாலை 6 மணி வரை கடைக்குள் பூட்டிவைத்து, நான்கு நபர்கள் விசாரணை என்ற பெயரில் துன்புறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் குறித்த பெண்களின் உறவினர் ஒருவரால் பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கமான 1919க்குத் தகவல் வழங்கப்பட்டது. அதையடுத்து இந்தத் தகவல் மானிப்பாய் பொலிஸார், மற்றும் சிறுவர் நன்னடத்தை பிரிவுக்கும் வழங்கப்பட்டது.

உடனடியாகசம்பவ இடத்துக்கு வந்த மானிப்பாய்ப் பொலிஸார், திருட்டில் ஈடுபட்ட பெண்கள் நால்வரையும் கடையில் இருந்து மீட்டதுடன் பொலிஸ் புலனாய்வாளர்கள் எனக் கூறி விசாரணை செய்த கடையில் இருந்த நால்வரையும் கைது செய்தனர்.

குறித்த கடை உரிமையாளருக்கு எதிராக கடத்தல் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டதுடன், ஏனைய மூவரும் பொலிஸார் எனக் கூறி மோசடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்த பொலிஸார், திருடிய பெண் களையும் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தினர். இதன் போது நீதிவான் எஸ்.சதீஸ்தரன் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டார். (ற-ஐ-107)

# கிணற்றில் வீழ்ந்து சிறுவன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ.30

விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் கைகழுவுவதற்கு கிணற்றடிக்குச் சென்ற போது, பாசிவழுக்கி கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளான். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சின்னமடு, புளியங் கூடல் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மதனகேசவன் கபிசன் (வயது-5) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

தந்தை வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில் தாயார் குழந்தையை சிறிய தாயுடன் விட்டுவிட்டு வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார். வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் திடீரென காணாமல் போயுள்ளான்.

சிறுவனைத் தேடிய உறவினர்கள் கிணற்றை எட்டிப் பார்த்த போது, நீரில் மூழ்கிய நிலையில் சடலமாக சிறுவன் காணப்பட்டுள்ளான். சம்பவ இடத்துக்குச் சென்ற ஊர்காவற்றுறைப் பொலிஸார் கிணற்றில் இருந்து சடலத்தை மீட்டுள்ளனர். (ற-ஐ-107)

## இருவர் காயம்

மழைபெய்துகொண்டிருந்த வேளையில் வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்துடன்மோட்டார்சைக்கிள்மோதியதில் இருவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றது.

ஏ-9 வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் கைதடி-நுணாவில் வைரவர் கோவிலுக்கு அருகில் வீதி யோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஹையஸ் வாகனத்துடன்மோதி விபத்துக்குள்ளானது. (ற-ஐ-9)


# மனமுவந்த பாராட்டு

1. கலாபூசணம் - அரச விருது - 15.12.2015
2. கலை ஞானச்சுடர் விருது - நல்லூர் பிரதேச செயலகம் - 17.12.2015



செல்வி

## மலர் சின்னையா

(SLEAS II, M.Ed, J.P.)

முன்னை நாள் அதிபர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை. கற்றலில், கற்பித்தலில், நிர்வாகத்தில் சமூகவியல், அரசியலில் பல்வேறு உயர்பட்டங்கள் பன்னிரண்டு பெற்று, சிறப்புமிகு கற்பித்தல் மற்றும் நிர்வாகச் செயற்பாட்டுடன், தனது உயிர்ப்பு மிக்க புத்தாக்கப் படைப்புக்களால் மேற்படி இரு விருதுகளையும் இவ்வாண்டு பெற்றுக்கொண்ட எமது மேன்மை மிகு ஆசான் மலர் சின்னையா அம்மா அவர்களை மனதாரப்பாராட்டுகின்றோம்.

மேலும் பற்பல படைப்புக்களைச் சமூகத்திற்கு அவர் வழங்கவேண்டுமென வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:

அன்பு மிகு மாணவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவஞ்சலி

6 ஆம் ஆண்டு | 41 ஆம் ஆண்டு

மண்ணில்
03.05.1922



மண்ணில்
16.03.1927



விண்ணில்
05.01.2010

விண்ணில்
22.12.1974

அமரர் கணபதிப்பிள்ளை
சபாரத்தினம்
திதி: அபரபட்ச பஞ்சமி
(30.12.2015)

திருமதி கனகாம்பிகை
சபாரத்தினம்
திதி: பூர்வபட்ச நவமி
(19.12.2015)

பெற்றெடுத்தீர் இவ்வுலகில் ! பாசத்தோடு எமை வளர்த்து
கல்வியோடு கலைகள் தந்து பெருமையோடு வாழ வைத்தீர் !
உங்கள் நினைவுகளுடன் மகிழ்ச்சியில் திளைத்திருந்தோம் !
துயரத்தில் நிமிர்ந்து நின்றோம் ! ஆனாலும் அம்மா ! பப்பா !
மீண்டும் உங்கள் பிள்ளைகளாய்
வாழ வரம் வேண்டுகின்றோம் !

"திலகவாசம்"
தபாலக வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
இல.05 ,கல்லடி வீதி,
சாவகச்சேரி.


# ரூ.30 கோடி பெறுமதியான தங்கத்தை இவ்வருடம் கைப்பற்றியது சுங்கப் பகுதி

கொழும்பு.டிசெ.30

இந்த வருடம் சட்டவிரோதமாக இந்த நாட்டுக்குள் எடுத்து வரப்பட்ட 20 கோடி ரூபா பெறுமதியான ஒரு தொகுதி தங்கம் மற்றும் இந்த நாட்டில் இருந்து கடத்திச் செல்வதற்கு முயற்சிக்கப்பட்டிருந்த 10 கோடி ரூபா பெறுமதியான ஒரு தொகுதி தங்கம் உட்பட 30 கோடி ரூபா பெறுமதியான தங்கம் சுங்கப் பகுதியினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவற்றில் சட்டவிரோதமாக இந்த நாட்டுக்குள் எடுத்து வரப்பட்டிருந்த 19 கோடியே 51 லட்சத்து 69 ஆயிரம் ரூபா பெறுமதி கொண்ட 39.141 கிலோ கிராம் தங்கத்துடன் 48 சந்தேக நபர்கள் கட்டுநாயக்க சுங்கப்பகுதியில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்களிடமிருந்து அபராதமாக ஒரு கோடி ரூபா அறவிடப் பட்டிருந்ததாகச் சுங்கப் பகுதியின் ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

இதனிடையே, சட்ட விரோதமாக நாட்டில் இருந்து கடத்திச் செல்வதற்கு முயற்சிக்கப் பட்டிருந்த 9 கோடியே 78 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதி கொண்ட 20.872 கிலோகிராம் கொண்ட தங்கத்துடன், 24 சந்தேக நபர்கள் சுங்கப் பகுதியினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு 11 லட்சத்து 90 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டிருந்ததாகச் சுங்கப் பகுதி ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

(த-22)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு
16. 08.1942

உதிர்வு
30.11.2015



30.11.2015 திங்கட்கிழமை அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் முத்தையா அருந்தவநாதன்

(உரிமையாளர்- ஓட்டோ சப்ளையர்ஸ் சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம்)

அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (30.12.2015) புதன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.*

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு உதவிகள் புரிந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அன்பு நெஞ்சங்களுக்கும் மலர்வளையம், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம், பதாகைகள் மூலம் துயர் பகிர்ந்தவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் உடன் கருமங்கள் ஆற்ற உதவி செய்தோருக்கும் உலகில் பல பாகங்களிலிருந்து தொலைபேசி மூலமாக அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறிய உள்நாட்டு, வெளிநாட்டு அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்

34/6, செட்டித் தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்



### செகநாதர் மகாலிங்கம் (சங்கானை)

சிங்கப்பூர் வைரவர் கோவில் வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செகநாதர் மகாலிங்கம் நேற்று (29.12.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செகநாதர் -சீதவன் தம்பதியரின் மகனும், ரத்தினத் தின் கணவரும், ஐங்கரன் (கனடா), பிரதீபன் (சாயி மணிகூடு, சித்தன்கேணி), சுபாகரன் (சாயி மல்ரி சென்ரர், சித்தன்கேணி), சுகிர்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஹரிஹரனின் (மதுபான விற்பனைநிலையம், சங்கானை) மாமனும், விபூசனா, அருஷன், விபூசிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2015) புதன்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


சிங்கப்பூர் வைரவர் கோவில் வீதி,
சங்கானை. 076 622 9591

தகவல்: குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### தம்பு ஐயாத்துரை (J.P)



பிறப்பு
02.01.1937

இறப்பு
29.12.2015

தேவரையாளி கௌரி இல்லத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு ஐயாத்துரை நேற்று (29.12.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், ஸ்ரீநந்தனா தேவியின் கணவரும், விக்னேஸ்வரன் (அப்பன் - யாழ். பீச் ஹோட்டல் உரிமையாளர்), கௌரி, காலஞ்சென்ற சண்முகேஸ்வரன் (கண்ணன்) மற்றும் வாசுகி, யோகேஸ்வரன் (குமரன்-திக்கம் வடிசாலை காசாளர்), யோகநந்தனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அரியரத்தினம், முரளிதரன், சந்திரலிங்கம் (பிரான்ஸ்), யோகேஸ்வரி, பிரதீனா, சுலோசனா ஆகியோரின் அன்பு மாமனும், சுலக்சனா, சுவிதா, சுமிதா, பிரியங்கா, பிறேமிலா, ரஜனிகாந், நிமல்ராஜ், பானுராஜ், விஜய், பிறேம்ராஜ், அபிராமி, லோஜிதா, லதுர்சிகா, ஜதுவர்சன், நிதுஷன், சித்தார்த் ஆகியோரின் பேரனும், சாதர்சா, சானியா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2015) புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக் காக பங்கு வேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கௌரி இல்லம்,
தேவரையாளி.
T.P. No:077 236 7422

(67192)(10.17)

தகவல் :
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக் கடனை அறவிட சட்ட நடவடிக்கைகள்

## தேசிய வீடமைப்பு அதிகார சபை முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், டிசெ.30
யாழ்.மாவட்டத்தில் வீடு கட்டுவதற்கு, திருத்தி அமைப்பதற்கு பெற்ற கடனை உரிய காலத்துக்குள் மீளச் செலுத்தாமல் காலம் கடத்தி வருபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தேசிய வீடமைப்பு அதிகார சபை தீர்மானித்துள்ளது.
அதற்கமைவாக முதற்கட்டமாகப் பத்துப் பேருக்கு எதிராக யாழ்.நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப் பட்டுள்ளன.
யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வீடு கட்டுவதற்கும், திருத்துவதற்குமெனக் குறிப்பிட்ட

> “முதற்கட்டமாக பத்துப் பேருக்கு எதிராக யாழ்.நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப் பட்டுள்ளன.”

தொகைப் பணம் பயனாளிகளுக்கு கடனாக வழங்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட காலத்துக்குள் தவணை அடிப்படையில் பணத்தை மீளச் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.
அதிகார சபையின் நிபந்தனைகளுக்கமைய பணத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் பலர் உரிய காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தாமல் காலம் கடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இவர்களிடமிருந்து பணத்தை வசூலிக்கும் வகையில் முதற்கட்டமாக பத்துப்பேருக்கு எதிராக யாழ்.நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப் பட்டுள்ளன. (ற-ஜ-115)

## அஞ்சல் பணியாளருக்கு வருடாந்த இடமாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 30
வடக்கு மாகாணத்தில் அஞ்சல் அலுவலகப் பணியாளர்களுக்கான வருடாந்த நியமன அடிப்படையிலான இடமாற்றங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.
தென்னிலங்கையைச்சேர்ந்த அலுவலகர்கள் வடக்கில் பணிபுரிவதற்கு போர்க் காலத்தில் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. போருக்குப் பின்னரான காலப்பகுதியில் இந்த அலுவலர்களின் கடமைப் பணிகள் சீராக்கப்பட்டுள்ளமையால், இவர்களுக்கான ஒருவருட பணி நியமனங்கள் மற்றும் இடமாற்றல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
2016 ஆம் ஆண்டில் ஏ-9 வீதியுடன் இணைந்துள்ள அஞ்சல்அலுவலகங்களுக்கு தென்னிலங்கையைச் சேர்ந்த அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
அத்துடன் அஞ்சல் அலுவலகங்களில் கடமையாற்றும் அஞ்சல் அதிபர் தரம் இரண்டைச் சேர்ந்த அலுவலர்களுக்கு, தரம் ஒன்று சேவைக்கான பதவி உயர்வுடன் இடமாற்றல்கள் வழங்கப்பட்டுள்ளன.
அஞ்சல் அலுவலகர்கள் தம்முடைய பணி இடமாற்றல்நியமனங்களைநான்கு வருடத்துக்கு ஒரு முறை விருப்பத்தெரிவின் அடிப்படையில் மேற்கொள்ள முடிவதால் இதுபோன்ற இடமாற்றல்கள் வழமை போல் இந்த வருடமும் நடைபெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-ரி5,9)

## கலாசார, விளையாட்டு உத்தியோகத்தருக்கான நேர்முகத் தேர்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.30
கலாசார உத்தியோகத்தர் தரம் மூன்று மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர் வகுப்பு மூன்று தரம்மூன்றுபதவிகளுக்கு ஆள்சேர்ப்புக்கான நேர்முகத்தேர்வுகள் நடத்தப் படவுள்ளன.
கலாசார உத்தியோகத்தர் தரம் III பதவிக்காக, மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் கடந்த நவம்பர் 22 ஆம் திகதி நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 20 பேருக்கான நேர்முகத் தேர்வுகள், எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி வடமாகாண கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளன.
விளையாட்டு உத்தியோகத்தர் வகுப்பு மூன்று, தரம் மூன்று, பதவிகளுக்கு ஆள் சேர்ப்புக்காக மாகாண பொதுச்சேவைஆணைக் குழுவால், இந்த மாதம் 19 ஆம் திகதி நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 46 பேருக்கான செயன்முறைப்பரீட்சைகள் எதிர்வரும் ஜனவரி 2ஆம் திகதி, வவுனியா கல்வியியல் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.
அத்துடன் இவர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் வடமாகாண கல்வி அமைச்சில் எதிர்வரும் ஜனவரி 4ஆம் திகதியும் நடைபெறவுள்ளன்.
இந்தப் பதவிகளுக்கு நடத்தப்பட்ட திறந்த் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த நேர்முகப் பரீட்சார்த்திகளுக்கான கடிதங்கள் வட மாகாண கல்வி அமைச்சால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-ரி5)

## கடல் கொந்தளிப்புக் காரணமாக அம்புலன்ஸ் படகு மூழ்கியது




யாழ்ப்பாணம், டிசெ.30
அனலைதீவு நோயாளர் சேவைக்கெனத் தருவிக்கப்பட்ட அம்புலன்ஸ் மோட்டார் படகு, குறிகாட்டுவான் துறைமுகத்தில் கடலில் மூழ்கிய நிலையில் அதனை நெடுந்தீவு பல நோ.கூட்டுறவுச் சங்கப் படகு மீட்டுள்ளது.
அனலைதீவுக்குப் புதிய அம்புலன்ஸ் படகு ஒன்றை வழங்கும் பொருட்டு குறிகாட்டுவானுக்கு எடுத்து வரப்பட்ட இந்தப் படகு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கடல் கொந்தளிப்பின் காரணமாகச் சரிந்து கடலில் மூழ்கும் நிலைக்குள்ளானது.
வடக்கு மாகாண சபையின் ரூபா 55 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட்ட இந்தப் படகின் கட்டுமானப் பணிகள் சரியான முறையில் இடம்பெறாததாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
விரைவில் சேவைக்கு விடப்பட இருந்த இந்தப் படகு அதிர்ஷ்டவசமாகத் தனது உண்மை நிலையை வெளிப்படுத்தி விட்டது என்றும் சேவையின்போது இது போன்ற விபரீதம் ஏற்பட்டிருந்தால் உயிராபத்துக்கூட இடம்பெற்றிருக்கும் எனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ற-ஜ-7)

## 14 குற்றங்களுக்கே இந்த வருடம் பதில்

### பொலிஸ் ஆணைக் குழுவின் மாகாணப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.30
வடக்கு மாகாணத்தில் இந்த ஆண்டு தேசிய பொலிஸ் ஆணைக் குழுவில் பதிவு செய்யப்பட்ட குற்றங்களில் 14 குற்றங்களுக்கான பதில்கள் பெறப்பட்டுள்ளன என்று தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் மாகாணப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.
இந்த ஆண்டு பொலிஸ் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட 18 முறைப்பாடுகள் தொடர்பாக குற்றப்பதிவுகள் ஆணைக் குழுவில் மேற்கொள்ளப் பட்டுள்ளன.
இந்த முறைப்பாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில், பதில்கள் பெறப்பட்டு 14 குற்றங்கள் தொடர்பான முடிவுகள் எட்டப்பட்டுள்ளன. மிகுதிநான்குகுற்றமுறைப்பாடுகள் மட்டும் சரியான பதில்கள்பெறப்பட முடியாத நிலையில்உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த ஆண்டு பொலிஸ் நிலையங்களில் முறைப்பாட்டை ஏற்க மறுத்தமை, குற்றம் தொடர்பான முறைப்பாடு செய்ய வந்தவர்களைத் தாக்கியமை, முறையற்ற விதத்தில் செயற்பட்டமை மற்றும் அதிகார துஷ்பிரயோகங்கள் என்பவை தொடர்பான முறைப்பாடுகளே இவ்வாறு பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-ரி5)

## வங்கிச் சேவைகள் நாளை முற்பகலுடன் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,டிசெ.30
வருட இறுதி நாளான நாளை முற்பகலுடன் தமது வங்கிச் சேவைகள் இடை நிறுத்தப்படும் என்று வங்கிகள் அறிவித்துள்ளன.
நாளை முற்பகல் 10.30 மணியுடன் சில வங்கிகளும், முற்பகல் 11.30 மணி யுடன் சில வங்கிகளும் தமது வங்கி நடவடிக் கைகளை இடை நிறுத் தும் என்று அறிவித்துள்ளன. (ஜ-9)

## நெடுந்தீவில் பனம்பொருள் உற்பத்தியை அடுத்த வருடம் அதிகரிக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.30
நெடுந்தீவில் பனம் பொருளிலான பொருள்களைக் கூடுதலாக உற்பத்தி செய்ய ஊக்குவிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை பனை அபிவிருத்திச் சபை மேற்கொள்ளவுள்ளது.
அடுத்த வருடம் அதற்கான புதிய செயற்றிட்டங்கள் அறிமுகப் படுத்தப்படும். - இவ்வாறு சபையின் தலைவர் மா.கணபதிப் பிள்ளை தெரிவித்தார்.
நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெற்ற கற்பகக் கானகப் பனை விதை நடுகைக்கான உதவி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டுஉரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இந்தப் பிரதேசத்தில் பனம் பொருளில் உற்பத்தி செய்யப் படும் பொருள் களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க பனை அபிவிருத்திச் சபை முழுமையான நடவடிக் கைகளை மேற்கொள்ளும்.
அதனைவிட பிரதேசத்தில் உள்ள பனம் உற்பத்திப் பயனாளிகளுக்கு கைப்பணிப் பயிற்சியை வழங்குவதற்கு அதற்கான வசதியும் ஏற்படுத்தப்படும்.
பனையால் சூழப்பட்ட இந்தப் பிரதேசத்தில் பனம் உற்பத்தியை ஊக்குவிக்கவும், அடுத்த 2016 ஆம் ஆண்டில் உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.
பனையால் பெறப்படும் உற்பத்திப்பொருள்களை மேலும் அதிகரித்து மக்கள் அவற்றை பயன்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (ற-ஜ-17)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியான திட்டத்தின் மூலமே வட்டுவாகல் பாலம் திருத்தம்

## வீதி அபிவிருத்தி அதிகார சபையின் முல்லை. நிறைவேற்று பொறியியலாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு,டிசெ.30

முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலத்தைத் தனி ஒரு திட்டத்தின் மூலமாகப் புனரமைப்பு செய்வதற்கான தயாரிப்பு வேலைகள் முன்னெடுக்கப் படுகின்றன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் முல்லைத்தீவு மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் குகானந்தன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கிய அம்சமான வட்டுவாகல் பாலம் போரின் போதும், அதன் பின்னரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகியிருந்தது.

அண்மையில் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்காலும் குறித்த பாலமானது மிகவும் பாதிப்புக்குள்ளான நிலையில் விவசாயிகள், கடற்றொழிலாளர்களையும் பெரிதும் பாதித்தது.

குறித்த பாலத்தை உடனடியாகப் புனரமைப்புச் செய்யவேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட மக்கள் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

> “பாலத்தை உடனடியாகப் புனரமைப்புச் செய்யவேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட மக்கள் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.”

கடந்த மாதம் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது வட்டுவாகல் பாலத்தின் புனரமைப்புக்கு நிதி கிடைக்கவில்லை என்றும், பாலம் புனரமைப்புச் செய்வதற்கு ஆயிரம் மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகின்றது என்றும் குறிப்பிட்டிருந்த முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், நிதி கிடைக்கும் பட்சத்தில் குறித்த பாலம் புனரமைக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தின் புனரமைப்புத் தொடர்பான செயற்றிட்டம் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் முல்லைத்தீவு மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது-

பாலம் புனரமைப்புத் தொடர்பான மூன்று திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதுவரை குறித்த பாலப் புனரமைப்புக்கான நிதி ஒதுக்கப்பட வில்லை. அபிவிருத்திக்காக வெளிநாட்டில் இருந்து கிடைக்கும் நிதியையே எதிர்பார்த்துள்ளோம். வட்டுவாகல் பாலமானது நீண்ட பாலம் என்பதால் இதனை தனி ஒரு திட்டத்தில் புனரமைப்பதற்கான தயாரிப்பு வேலைகளை நாம் தற்போது முன்னெடுத்துள்ளோம். - என்றார். (ற-ஐ-21,102)

## ஒற்றுமையோடு கல்வி கற்று நாட்டுக்குச் சேவையாற்றுங்கள்

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் மாணவர்களுக்கு அறிவுரை



மன்னார், டிசெ.30

மாணவர்கள் இனவாதத்துக்கும், மதவாதத்துக்கும் அடிபணியாது ஒற்றுமையுடன் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, எதிர்காலத்தில் எமது மாவட்டத்துக்கும், இந்த நாட்டுக்கும் சேவை செய்யும் ஒரு நல்ல பிரஜையாக உருவாகவேண்டும்.- இவ்வாறு வட மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் தெரி வித்தார்.

மன்னார் மற்றும் மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட 250 மாணவர்களுக்கான பாடசாலை அப்பியாசக் கொப்பிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. அந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

செல்வங்களிலே சிறந்த செல்வம் கல்விச் செல்வம். அந்த வகையில் ஒவ்வொரு மாணவர்களும் தமது கற்றல் செயற்பாடுகளில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும்.

மாணவர்கள் எந்தவித வேறுபாடுகளும் இன்றி ஒரே குடையின் கீழ் செயற்பட வேண்டும். இதன் போது தான் இந்த நாட்டில் எதிர்கால சமூதாயம் மிகவும் ஒளிமயமான சமுதாயமாகச் செயற்படும்.

ஆகவே மாணவர்கள் கல்வி, கலை, கலாசார நிகழ்வுகளில் ஒற்றுமையுடன் பங்கெடுத்து தமது எதிர்காலத்தைத் துய்மையாக்கிக்கொள்ள வேண்டும்.- என்றார். (ற-ஐ-56)

## சமுர்த்தி உத்தியோகத்தர் வீதி விபத்தில் உயிரிழப்பு

மன்னார்,டிசெ.30

நானாட்டான் – வங்காலை பிரதான வீதியில் இடம் பெற்ற வாகன விபத்தொன்றில் சமுர்த்தி உத்தி யோகத்தர் ஒருவர் உயிரிழந்தார். இவர் இரு பிள்ளைகளின் தந்தையாவார்.

மன்னார் வங்காலைக் கிராமத்தைச் சேர்ந்த குறித்த சமுர்த்தி உத்தியோகத்தர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை நானாட்டான் பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு விட்டு, மீண்டும் வங்காலையில் உள்ள தனது வீடு-நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோதே விபத்தில் சிக்கியுள்ளார்.

இதன் போது வங்காலை வீதியூடாக நானாட்டான் நோக்கிச் சென்று கொண்டிருந்த பட்டா ரக வாகனத்துடன் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் குறித்த சமுர்த்தி உத்தியோகத்தர் சம்பவ இடத்



திலேயே உயிரிழந்துள்ளார். அவரது மோட்டார் சைக்கிள் கடுமையாகச் சேதமடைந்துள்ளது.

குறித்த பட்டா ரக வாகனத்தின் சாரதியை மன்னார் பொலிஸார் கைது செய்த நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-56)



வவுனியா மாவட்டத்தில் உள்ளூராட்சி திணைக்களங்களின் கீழ் இயங்கும் 120 சனசமூக நிலையங்களுக்கு நேற்று நிதியுதவி வழங்கப்பட்டது. வட மாகாண சபையின் உறுப்பினர்களின் குறித்தொதுக்கப்பட்ட இந்த நிதி, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பி.எம். அசங்க காஞ்சன குமார தலைமையில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. நிகழ்வில் வட மாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், எம். தியாகராசா, எம்.பி நடராசா, தர்மபால செனவிரத்தின, ஜயதிலக உட்பட உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களும் கலந்து கொண்டனர். (ற-ஐ)

## தமிழ்த் தேசிய இளைஞர் கழக 3ஆவது கூட்டம் வவுனியாவில்

வவுனியா,டிசெ.30

தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் 3 ஆவது பொதுக்கூட்டம், கழகத்தின் தலைவர் சு.காண்டீபன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினராக வவுனியா உதவி மாவட்ட செயலாளர் நா.கமலதாசன், கழகத்தின் ஸ்தாபகரும் வவுனியா நகர சபையின் முன்னாள் உப நகர பிதாவுமான க.சந்திரகுலசிங்கம், கழகத்தின் ஆலோசகர்களில் ஒருவரான் ஓய்வு பெற்ற அதிபர் பரஞ்சோதி, வேப்பங்குளம் பிள்ளையார் தே[illegible] மதகுரு கஜேந்திர [illegible] சேவைகள் அதிகாரி அஜித் சந்திரசேன, இளைஞர் கழக மாவட்ட சம்மேளன தலைவர் அமுதவாணன், இளைஞர் கழக மாவட்ட சம்மேளன பொருளாளர் முகிலன், கலைஞர் மாணிக்கம் ஜெகன், ஆசிரியர் சந்திரமோகன், கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள், புதிதாக கழகத்தில் இணைந்த உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கடந்த ஆண்டில் கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள், வேலைத்திட்டங்கள், செயற்பாடுகள் தொடர்பாகவும் எடுத்துரைக்கப்பட்டது. தொடர்ந்து புதிய நிர்வாக சபைக்கான தெரிவு இடம் [illegible]ன ஆத[illegible] உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (ற-ஐ-21,402)

## பழக் கடையில் திருடியவர் பொலிஸாரிடம் சிக்கினார்

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா,டிசெ.30

வவுனியா ஹொறவப் பொத்தான வீதியிலுள்ள, சூசைப்பிள்ளையார்குளம் செல்லும் சந்திக்கு அருகிலிருக்கும் பழங்கள் விற்பனை செய்யும் கடை ஒன்றில் பணம் மற்றும் சிகரட் போன்றவற்றை திருடிக் கொண்டு சென்றவரை அதிகாலை ரோந்தில் சென்ற பொலிஸார் கைது செய்துள்ளனர். அந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் நடந்துள்ளது.

குறித்த பழங்கள் விற்பனை செய்யும் நிலையத்தை ஒரு பெண், தனது சகோதரனின் உதவியுடன் நடத்தி வருகின்றார். அதிகாலை ஒரு மணியவில் தனது வியாபார நடவடிக்கைகளை முடித்துக் கொண்டு கணக்குகளை சரிபார்த்து விட்டு கடையுடன் இணைந்திருக்கும் தனது படுக்கையறைக்குச் சென்று விட்டார்.

மழை பெய்து கொண்டிருந்த சமயம் கடையின் முன்பக்கம் இந்த கம்பி நெற்றைப் பிரித்துக் கொண்டு உள்நுழைந்த திருடன் அங்கிருந்த பணம், சிகரெட், கைத்தொலைபேசி மீள் நிரப்பும் அட்டை என்பனவற்றையும் சில பற்றுச்சீட்டுகள் என்பவற்றையும் திருடிக் கொண்டு சென்றுள்ளார்.

குறித்த நபர் வீதியில் சென்றபோது அந்த வீதியில் அதிகாலை பொலிஸார் ரோந்து சென்றுள்ளனர். திருடன் பொலிஸாரைக் கண்டதும் ஓட ஆரம்பித்துள்ளார். பொலிஸார் திருடனைத் துரத்தி மடக்கிப் பிடித்து வவுனியா பொலிஸ் நிலையத்துக் கொண்டு சென்றனர்.

அதிகாலை திருட்டு இடம் பெற்றதை அறிந்த குறித்த பெண் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார். அதையடுத்து பொலிஸார் கைது செய்யப்பட்ட திருடனிடமிருந்து பணம், சிகரெட், மீள் நிரப்பு அட்டை என்பனவற்றை மீட்டுக்கொடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றையாகக் காணப்படும் விடுவிக்கப்பட்ட காணிகள்

யாழ்ப்பாணம், டிசெ.30
வலி. வடக்கின் உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து வீதிப் போக்குவரத்து இடம்பெற்றதற்கான பாதைகளோ, வீடுகள் இருந்ததற்கான எல்லைகளோ இன்றி எல்லாப்






தற்போது விடுவிக்கப்பட்டுள்ள ஏழு கிராம சேவகர் பிரிவுகளும் பற்றைக் காடுகளாகக் காட்சியளிக்கின்றன.
மக்கள் அந்தப் பகுதியில் வாழ்ந்தமைக்கான எந்த அடையாளங்களையும் காண முடியாத நிலையில், ஆங்காங்கே தகரக் கொட்டகைகள் காணப்படுகின்றன. அவற்றில் இராணுவத்தினர் காணப்படுகின்றனர். பல வீடுகள் தரைமட்டமாக இடித்தழிக்கப்பட்டு மண்ணோடு மண்ணாகக் குவித்து விடப்பட்டிருக்கின்றன.

பிரதேசங்களும் ஒரே மாதிரியாக வானுயர் காட்டு மரங்களுடன் காட்சியளிக்கின்றன.
இராணுவ வாகனங்களின் போக்குவரத்து இடம்பெற்ற பாதைகள் மாத்திரம் மணல் தரவைகளாகக் குண்டும் குழியுமாக மழை நீர்த் தேக்கங்களாக நீண்டு செல்கின்றன.
1990 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்ட இந்த பிரதேசங்கள் 25 வருடங்கள் கழிந்துள்ள நிலையில், விடுவிக்கப்பட்டுள்ளன.(ற-ரி2)

## விடுவிக்கப்பட்ட பகுதிகளில் கூடிய சம்பந்தமில்லாதவர்களால் பதற்றம்

### பொலிஸாரின் தலையீட்டால் கட்டுப்பாட்டுக்குள் வந்தது நிலைமை

யாழ்ப்பாணம், டிசெ.30
வலி.வடக்கில் நேற்று விடுவிக்கப்பட்ட பகுதிக்குள் சுன்னாகத்தில் இருந்து மூன்று சக்கர மோட்டார் வாகனத்தில் வந்தவர்களுக்கு என்ன வேலை என்றும் களவெடுப்பதற்காக வந்தார்களா என்று அதிகாரிகள் கேட்டதை அடுத்து, அங்கு நின்றவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.
தெல்லிப்பழை பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்ததை அடுத்து நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.
பி.ப. 2 மணியளவில் வந்த தெல்லிப்பழை பிரதேச செயலாளர் அங்கு நடைபெற்று கொண்டிருந்த களவு நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தினார்.
தெல்லிப்பழையில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுடைய பகுதிக்குள் முன்று சில்லு மோட்டார் வாகனத்தில் வருபவர்களே களவுகளில் ஈடுபடுகின்றனர் எனவும், யாராவது இன்று (நேற்று) விடுவிக்கப்பட்ட பகுதிக்குள் வந்து பொருள்களை களவெடுக்க முற்பட்டால் கைது செய்யப்படுவீர்கள் எனவும் பிரதேச செயலாளரால் அங்கு நின்றவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.
இந்தநிலையில் நேற்றே விடுவிக்கப்பட்ட பகுதிக்குள் இருந்து குறித்த மோட்டார் சைக்கிளில் ஒருவர் வந்திருந்தார். அவரை பிடித்து யார் எங்கிருந்து வந்தாய் என்று விசாரித்த போது மோட்டார் சைக்கிளில் வந்த குறித்த நபர் சுன்னாகத்திலிருந்து வந்தேன் என்றும், விடுவிக்கப்பட்ட இடத்தை சும்மா பார்ப்பதற்காக வந்தேன் என்றும் தெரிவித்தார்.
அதனால் கோபமடைந்த அரச அதிகாரிகள் சுன்னாகத்தில் இருக்கும் உங்களுக்கு இங்கு காணி இல்லை என்றால் களவு எடுக்கவா வந்தீர்கள் வந்தீர்கள் என்று கேட்டதை அடுத்து, அந்த நபர் உட்பட அங்கு நின்றவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு, கைகலப்பு வரை சென்றது. அதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த தெல்லிப்பழை பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவரப்பட்டது. (ற-21)





# விடுவிக்கப்பட்ட வலி. வடக்கில் மக்களின் பொருள்கள் களவு

### படையினர் முன்னிலையில் அங்கு சென்ற சிலர் அடாவடி

யாழ்ப்பாணம், டிசெ.30
வலி. வடக்கில் நேற்று விடுவிக்கப்பட்ட இடங்களில் உள்ள பொது மக்களது வீடுகளில் இருந்த பொருள்கள், தளபாடங்கள் இராணுவத்தினர் கண்முன்னே களவாடப்பட்டன.
வலிகாமம் வடக்குப் பிரதேசத்துக்குட்பட்ட சுமார் 700 ஏக்கர் வரையிலான மக்கள் குடியிருப்புப் பகுதி நேற்று திடீர் என விடுவிக்கப்பட்டது.
அங்கு முகாமிட்டிருந்த இராணுவத்தினர் தங்களுடைய முள்கம்பி வேலிகளைப் பிடுங்கி, முகாம்களையும் அகற்றினர். இதன் போது பொதுமக்களோ, ஊடகவியலாளர்களோ யாரும் புதிதாக விடுக்கப்பட்ட பகுதிக்குள் செல்ல வேண்டாம் எனவும், இராணுவத்தினர் அங்கிருந்து சென்றதன் பின்னரே குறித்த பகுதிக்குள் செல்லலாம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.
இந்த நிலையில் நேற்று நண்பகல் வேளையில் விடுவிக்கப்பட்ட பகுதிக்குள் இராணுவத்தினருடைய பிரசன்னம் சற்று குறைவடைந்ததும், சிலர் குறித்த பகுதிக்குள் நுழைந்து அங்கு நின்ற ஒரு சில இராணுவ அதிகாரிகளின் கண் முன்னே விடுவிக்கப்பட்ட பகுதிக்குள் உள்ள பொதுமக்களின் வீடுகளில் உள்ள நிலை, யன்னல், தகரம், நீர் இறைக்கும் குழாய், போன்ற பொருள்களையும், விறகுகளையும் களவாடிச் சென்றனர்.





சுமார் 2 மணி நேரம் இராணுவத்தினரால் குறித்த செயற்பாடு தடுத்து நிறுத்தப்படாத நிலையில், ஏராளமான பொருள்கள் அங்கிருந்தவர்களால் களவாடிச் செல்லப்பட்டன. (ற-ஜ-21)

# காணி விடுவிப்பு செய்தி சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.30
வலி. வடக்கின் உயர் பாதுகாப்பு வலயத்தில் நேற்று விடுவிக்கப்பட்ட பிரதேசங்களையும், அங்குள்ள தற்போதைய நிலைவரங்களைப் பார்வையிடுவதற்கும் ஒளிப்படம் எடுப்பதற்கும் ஊடகவியலாளர்களுக்கு அனுமதியில்லை என்று இராணுவத்தினர் தெரிவித்தனர்.
அத்துடன் இந்தப் பிரதேசங்களுக்குள் இன்றைய தினம் (நேற்று) உட்பிரவேசிக்க முடியாது எனவும் குறிப்பிட்டனர்.
இதன் போது ஊடகவியலாளர்கள், நில விடுவிப்பு தொடர்பில் அறியத்தரப்பட்டதன் அடிப்படையில் நாங்கள் இந்த விடயங்களை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டிய கடப்பாடு உண்டு. அதனை மதித்து எங்களைப் புகைப்படம் எடுப்பதற்கு அனுமதியளிக்க வேண்டும் என்று அங்கிருந்த கயசிங்கே என்ற இராணுவ உயரதிகாரியிடம் தெளிவுபடுத்தினர்.
இராணுவத்தினர் காணி விடுவிப்பு பணியில் ஈடுபடுவதை புகைப்படப் பதிவு செய்ய முடியாது. இது இராணுவ மேலிடத்தின் உத்தரவு. இதனை மீற முடியாது. பார்வையிடுவதானால் வீதியோரமாக நின்று பார்வையிட்டுச் செல்லுங்கள் என்று இராணுவத்தினர் தெரிவித்தனர்.
இதற்கு மத்தியிலும் ஊடகவியலாளர்கள் புகைப் படங்களைப் பதிவு செய்திருந்தனர்.
(ற-ஜ-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயுள்வேத மருத்துவத்தை ஊக்குவிக்க அரசு தயார்

### ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு



கொழும்பு, டிசெ 30

நாட்டில் ஆயுள்வேத மருத்துவ முறையை மேம்படுத்துவதற்குத் தேவையான சாதகமான அனைத்துத் திட்டங்களையும் வழங்குவதற்கு அரசு தயாராகவுள்ளதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மஹரகமயில் அமைந்துள்ள இலங்கை ஆயுள்வேத மருந்துக் கூட்டுத் தாபனத்தின் புதிய தாவரச்சாறு உற்பத்திச் சாலையை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி

எமது நாட்டின் சுதேச உள்நாட்டு செயற்பாடுகள், திட்டங்கள், உற்பத்திகளுக்கு முன்னுரிமை வழங்கி அவற்றை ஊக்குவிப்பதன் மூலம், நாட்டை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்ல முடியும். அத்துடன், எங்களது பாரம்பரியங்களையும் நம்பிக்கைகளையும் நாம் எப்பொழுதும் பாராட்டிப் புகழடையச் செய்வதன் மூலமே, எமது உள்நாட்டுச் சந்தைகளை சர்வதேச சந்தைகளுடன் போட்டியிட வைக்க முடியும்.

முன்னைய காலங்களில் இவ்வாறான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை, ஆகையால் எமது நாட்டு நிபுணர்களின் திறன் மற்றும் ஊக்கச் செயற்பாடுகள் மறைக்கப்பட்டும் மறக்கப்பட்டும் விட்டன. எனினும் தற்போதும் கூடப் பலரிடத்தில் இவ்வாறான பல திறமைகள் மறைந்திருப்பதை எம்மால் அவதானிக்க முடிகிறது.

எங்களது பாரம்பரிய சுதேச வைத்திய முறை பற்றி பேசும்போது இப்பொழுதும் கூட அதற்கென்று தனியானதொரு இடம் அனைவரிடத்திலும் உண்டு. அவற்றை இனங்கண்டு ஊக்குவிப்பது அவசியமான ஒன்று எனத் தெரிவித்தார். (த)

## நாரந்தனைப் படுகொலை வழக்கின் அழைப்பாணை தனிச் சிங்களத்தில்

யாழ்ப்பாணம், டிசெ.30

நாரந்தனையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது ஈ.பி.டி. பியினர் மேற்கொண்டதாகக் கூறப்படும் தாக்குதல் தொடர்பான வழக்கின் அடுத்த தவணைக்கான அழைப்பாணை சாட்சிகளுக்குத் தனிச் சிங்களத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2001 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆம் திகதி தேர்தல் பரப்புரைக்காகச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது நாரந்தனையில் வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை தற்போது திருகோணமலை மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

குறித்த வழக்கின் அடுத்த தவணைக்கான திகதியாக ஜனவரி 7ஆம் திகதி குறிக்கப்பட்டு ஆறு சாட்சிகளுக்கும் அழைப்பாணைகள் தனிச் சிங்களத்தில் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

மேற்படி வழக்கின் சாட்சிகளாக மாவை சேனாதிராசா, எம்.கே.சிவாஜிலிங்கம், கமல் ஜோதிபாலா, சிவராசா, நவரட்ணம் கனேஸ்வரன், எஸ். நல்லநாதன் ஆகியோர் சாட்சிகளாக அழைக்கப் பட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் கூட்டமைப்பைச் சேர்ந்த இருவர் உயிரிழந்ததுடன் 23 பேர் படுகாயமடைந்திருந்தனர்.

இதேவேளை, குறித்த வழக்கு இறுதியாக கடந்த ஒக்ரோபர் 13 ஆம் திகதி திருகோண மலை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவேளை குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பின்னர் பிணையில் விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-101)

# புதிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தித் தீர்வு

### மனோ கணேசன் அழைப்பு



கொழும்பு, டிசெ 30

இப்போது உருவாகியுள்ள புதிய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி நாம், எமது பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஒரு தொகுதி மலையக சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களுடன் தமது இல்லத்தில், புதிய அரசமைப்புத் தொடர்பில் நடைபெற்ற கலந்துரையாட லின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கூட்டணி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முழு நாடாளுமன்றத்தையும், அரசியல் நிர்ணய சபையாக மாற்றும் யோசனையை முன்வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனவரி ஒன்பதாம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்ற உள்ளார். இந்தச் சூழ்நிலையில், புதியஅரசமைப்பைத்தயாரிக்கும் தேசிய செயற்பாட்டில் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் பதினாறு இலட்சம்தமிழ்மக்கள்தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணி பொறுப்புணர்வுடன்செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்திடும்- மற்றும் முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்திடும் கட்சிகளுடன் இணைந்து உத்தேச அரசமைப்பில் நாம் பிரதிநிதித்துவம் செய்திடும் மக்களின் அபிலாசைகளையும் உள்ளடக்கிடும் பணிகளை நாம் அமைதியாகயும், காத்திரமாகவும் செய்து வருகிறோம். இதற்கான ஆரம்ப கட்டப் பிரதிநிதிகளை சம்பந்தப்பட்ட குழுக்களில் தற்சமயம் நாம் நியமித்துள்ளோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக அமைச்சரவை அனுமதியுடன் உருவாக்கப்பட்டுள்ள அமைச்சரவை உப- குழுவினால், எதிர்கால நாடாளுமன்றத் தேர்தல்முறை தொடர்பில் ஆராய்ந்து உரிய ஆலோசனைகளை சமர்ப்பிக்கும் நோக்கில், "தேர்தல் முறைமை குழு" நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவுக்குச் சமூகச் செயற்பாட்டாளர் பி. முத்துலிங்கம் எம்மால் நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல் நாடு முழுக்கப் பயணித்து பொதுமக்களிடமும், சமூக அமைப்புகளிடமும் இருந்து, புதிய அரசமைப்புத் தொடர்பில் கருத்துகளை உள்வாங்கி அவற்றை ஆராய்ந்து எமது அமைச்சரவை உப-குழுவுக்கு சமர்ப்பிக்கும் நோக்கில், "பொதுப் பிரதிநிதித்துவக் குழு" நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவுக்குத் தலைவராக பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். விஜயச்சந்திரன் எம்மால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை தற்சமயம் ஒத்தி வைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறும்போது, எமது மக்களின் பிரதிநிதித்துவங்கள் நியாயமான முறையில் நிர்ணயிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் முகமாக புதிய உள்ளூராட்சி வட்டார எல்லைகளை வகுத்து அவற்றை உள்ளூராட்சி வட்டார மீள்நிர்ணயக் குழுவுக்கு சமர்ப்பிக்க நாம் முடிவு செய்துள்ளோம்.

இது தொடர்பில் எமது கூட்டணியின் நிபுணர் குழு, கண்டி, நுவரெலியா, கொழும்பு, பதுளை, களுத்துறை, கேகாலை, மாத்தளை, கம்பஹா, புத்தளம், மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்குப் பயணித்து, கட்சிப்பணியாளர்கள் மற்றும் பொதுமக்களது கருத்துகளை உள்வாங்கி பணிகளை முன்னெடுக்கும்.

தற்போது கண்டி, நுவரெலியா, மாத்தளை, பதுளை ஆகிய மாவட்ட பணிகளை முடிவுக்குக் கொண்டு வந்துள்ள இக்குழு, ஏணைய மாவட்டங்களுக்கு எதிர்வரும் நாள்களில் பயணிக்க உள்ளது. இந்த நிபுணர் குழுவில், பி. முத்து லிங்கம், எஸ். விஜயச்சந்திரன், ஆர். ரமேஷ், வி. நந்தகுமார் ஆகியோரை நாம் நியமித்துள்ளோம்.

அதேவேளை, மலையக தமிழ் மக்கள் உள்ளடங்கலான வடக்கு-கிழக்குக்கு வெளியே ஏழு மாகாணங்களில் வாழும் பதினாறு இலட்சம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைத் தொகுத்து அவற்றை உத்தேச புதிய அரசியலமைப்பில் உள்வாங்கச் செய்யும் முகமாக, ஒரு நிபுணர் குழுவை நியமிக்க முடிவு செய்துள்ளோம்.

ஜனவரி முதல் வாரமுடிவில் நடைபெற உள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அடுத்த செயற்குழுக் கூட்டத்தின்போது இந்தக் குழு குறித்து அறிவிக்கப்படும்.

அதேவேளை, உத்தேச புதிய அரசமைப்பில், வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் உள்வாங்கப்படுவது தொடர்பில் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இது நடைபெறும் வேளையில், இந்திய வம்சாவளி மக்களின் தேவைப்பாடுகள் குறித்தும், எமது கூட்டணிக்கு ஒத்துழைப்பு வழங்க தாம் தயார் என்ற கருத்தைத் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் என்னிடம் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் வாழும் தமிழ் மக் கள் மத்தியில் பரஸ்பர ஒத்துழைப்பை உருவாக்கும் நல்ல ஒரு கருத்து இதுவாகும். இதை நாம் வரவேற்கிறோம். அதேவேளை முஸ்லிம் மக்களின் அபிலாசைகள் உள்வாங்கப்படும் முயற்சிகளுக்கும் நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். இன்னொரு போராட்டம், இன்னொரு போர் ஆகியவற்றுக்காக இனி நாம் காத்திருக்க முடியாது. இப்போது உருவாகியுள்ள புதிய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி நாம் எமது பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

## புலிகள் சுட்டுவீழ்த்திய அன்ரனோவ்; ஜனவரி 12 முதல் வழக்கு விசாரணை

கொழும்பு, டிசெ 30

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் வில்பத்து சரணாலயத்தில் வைத்துச் சுட்டு வீழ்த்தப்பட்ட அன்ரனோவ்-32 விமானம் தொடர்பான வழக்கை, ஜனவரி 12ஆம் திகதி முதல் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் விசேட மேல் நீதிமன்ற நீதிபதி ரேமாஸ் வரணாதிபதியே மேற்கண்ட [illegible] நேற்றுமுன்தினம் [illegible] பிறப்பித்தார்.

[illegible] இடம்பெற்று 15 வருடங்களுக்குப் பின்னர், இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துகொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பலாலியிலிருந்து இரத்மலானைக்குப் பயணித்துக் கொண்டிருந்த அன்ரனோவ்-32 விமானம்வில்பத்துசரணாலயத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலில் தலாவ வீரவெவ பிரதேசத்தில் சுட்டு வீழ்த்தப்பட்டது.

2000ஆம்ஆண்டுமார்ச்மாதம் 20ஆம் திகதி இந்தத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது.

இதனால், ரஷ்யா விமானி மற்றும் பாதுகாப்புப் படையினர் உள்ளிட்ட 31 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம், தொடர்பான வழக்கு, விசேட வழக்காகக் கவனத்தில் கொண்டு இவ்வாறு விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளது.

சந்தேகநபர்களான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசதுரை ஜெகன் மற்றும் சிவலிங்கம் ஆகிய தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் [illegible] அன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (த)

## நாட்டைவிட்டு வெளியேற மகிந்தவுக்குத் தடையாம்

கொழும்பு, டிசெ 30

உறுப்பினர்களுக்கு நல்லாட்சி அரசு நாட்டை விட்டு வெளியேறத் தடை விதித்துள்ளதாகவும் அந்தப் பட்டியலில் தனது பெயரும் சேர்க்கப் பட்டுள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித் துள்ளார்.

மாத்தறை மாவரல ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பூஜை வழிபாடொன்றில் கலந்துகொண்ட அவர், அங்கு ஊடகவியலாளர்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் பயங்கரவாதத்தைத் தோற்கடித்துப் பெற்றுக்கொண்ட வெற்றியை தென்பகுதி மக்களை விட, வடபகுதி மக்களே இன்று அதிகம் அனுபவித்து வருவதாக குறிப்பிட்ட அவர், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட ஒரு வருட காலத்தில் எதுவும் நடைபெறவில்லையென குறிப்பிட்டார்.

அத்துடன், இன்னும் மூன்று மாத காலப்பகுதியில் பொருள்களின் விலை பெருமளவில் உயர்வடையும் என்றும், அரசு மற்றவர்களை விமர்சிப்பதை விடுத்து மக்களுக்கான நிவாரணங்களை வழங்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து உறுப்பினர்களை வெளியேற்றினால் அவர்களைக் கொண்டு பலமான புதிய கட்சியொன்று உருவாக்கப்படுமென பிறிதொரு நிகழ்ச்சியில் மகிந்த கூறியதாக, சர்வதேச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணா, டக்ளஸின் ஒத்துழைப்பு எங்களுக்குக் கிடைத்தால் நல்லது

## இப்படி அழைப்பு விடுக்கின்றார் பேரவையின் இணைத் தலைவர் விக்கி

கொழும்பு, டிசெ 30

கருணா, டக்ளஸ் ஆகியோரின் ஒத்துழைப்பு தமிழ் மக்கள் பேரவைக்குக் கிடைத்தால் தங்களுக்கு நல்லதாக இருக்கும் என்று தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரும், வடக்கு மாகாண முதலமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். பொதுநூலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதிகளுள் ஒருவராக இருந்து அவ்வமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டவரும் பின்னர் மகிந்த அரசில் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகி பிரதி அமைச்சர் பதவி வகித்தவருமான கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் மற்றும் ஈ.பி.டி.பி. கட்சியின் பொதுச் செயலாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தமிழ் மக்கள் பேரவையில் இணைக்கப்படுவது தொடர்பில் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தனது பதிலில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எமக்கு அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியமானது. இதனை நாங்கள் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டி வருகின்றோம்.

இந்த நிலையில், எங்களுடைய கருத்துகளுக்கு வித்தியாசமான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றார்கள் என்பதற்காக அவ்வாறான கருத்துகளைக் கொண்டிருப்பவர்களை எதிரிகளாக நாம் பார்க்கமுடியாது.

எனவே, நாங்கள் எங்களுடைய பணியைத் தொடர்ந்தும் செய்வோம். அவர்களுடைய (கருணா, டக்ளஸ்) ஒத்துழைப்பு தமிழ் மக்கள் பேரவைக்குக் கிடைத்தால் எங்களுக்கு நல்லதாக இருக்கும். ஆனால், தமிழ் மக்கள் பேரவைக்கு ஒரு கொள்கை இருக்கின்றது. அந்தக் கொள்கை விடயத்தில் நாங்கள் சற்றும் நெகிழ்வுத் தன்மையைக் காட்டப்போவதில்லை- என்றார். (கு)

> "நாங்கள் எங்களுடைய பணியைத் தொடர்ந்தும் செய்வோம். அவர்களுடைய (கருணா, டக்ளஸ்) ஒத்துழைப்பு தமிழ் மக்கள் பேரவைக்குக் கிடைத்தால் எங்களுக்கு நல்லதாக இருக்கும். ஆனால், தமிழ் மக்கள் பேரவைக்கு ஒரு கொள்கை இருக்கின்றது."

# போதைக்கு எதிரான தூதர் பதவியை கைவிடுமாறு சங்காவுக்கு அழுத்தம்

## என்றிக் இசை நிகழ்ச்சியின் எதிரொலி



கொழும்பு, டிசெ 30

என்றிக் இசை நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்கள் தண்டிக்கப்பட வேண்டுமெனவும், போதைப் பொருளுக்கு எதிரான தூதுவர் பதவியிலிருந்து குமார் சங்கக்கார விலகவேண்டுமெனவும் போதைப்பொருளுக்கு எதி ரான நடவடிக்கையாளர்கள் அழுத்தம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் போதைப்பொருளை இல்லாதொழிப்பதற்குப் பல செயற்றிட்டங்களை முன்னெடுத்துவரும் அரசு, அண்மையில் குமார் சங்கக்காரவைப் போதைப் பொருளுக்கு எதிரான தூதுவராக நியமித்தது.

ஆனால் அண்மையில் குமார் சங் கக்கார மற்றும் மஹேல ஜெயவர்த்தன ஆகியோர் பணிப்பாளர்களாக உள்ள லைவ் இவென்ட் நிறுவனத்தின் அனுசரணையில், கொழும்பில் நடத்தப்பட்ட இசை நிகழ்ச்சியில் போதைப் பொருள் பரிமாறப்பட்டுப் பெரும் கலாசாரச் சீரழிவுகள் இடம்பெற்ற தாகக் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், குறித்த தூதுவர் பதவிக்கு சங்கக்கார உரித்துடையவரல்லர் எனவும், அவர் தமது பதவியில் இருந்து விலக வேண்டுமென்னவும் அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, குறித்த இசை நிகழ்ச்சியானது கொழும்பு மாநகர சபையின் அனுமதியின்றி நடத்தப்பட்டதாகவும், இதனால் 20.9 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள நகர சபை, குறித்த நட்டத்தை நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்கள் ஈடுசெய்யத் தவறும் பட்சத்தில் அதற்கெதிராக வழக்குத் தொடரப்படுமெனவும் எச்சரித்துள்ளது.

இத்தாலியப் பாடகரான என்றிக் இக்லேஸியசை வரவழைத்து நடத்தப்பட்ட குறித்த இசை நிகழ்ச்சி யில் கலாசாரச் சீரழிவுகள் இடம்பெற்றதாகக் குறிப்பிட்டு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கண்டனம் தெரிவித்திருந்ததுடன் ஏற்பாட்டாளர்களைத் திருக்கைவாலால் அடிக்க [illegible] ஆவேசமாகப் பொது [illegible] உரையாற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (கு)

## ஒளிப் படச் செய்தி



# கவனிப்பாரற்றுக் கிடக்கும் வீதி



சாவகச்சேரி மட்டுவில் தெற்குப் பிரதேச மக்களின் பிரதான வீதிகளில் ஒன்றாகக் காணப்படும் இலுப்பையடி வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளதால் பாடசாலை மாணவர்கள் உட்பட பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வீதியில் உள்ள 400க்கும் மேற்பட்ட குடும்பங்கள் உட்பட மட்டுவில் தெற்கு, மட்டுவில் வடக்கு உள்ளிட்ட மக்கள் தினமும் இவ்வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

பாடசாலை, முன்பள்ளி, ப.நோ.கூ.சங்கக் கிளை, வணிக நிலையங்கள், ஆலயங்கள் போன்றவை காணப்படும் இந்த வீதியில் பாடசாலை பஸ் சேவை உட்பட தினமும் நூற்றுக் கணக்கான வாகனங்கள் பயணித்து வருகின்றன.



மழை காலங்களில் வீதியெங்கும் உள்ள குண்டும்குழிகளிலும் வெள்ளம் காணப்படுவதால் நடந்து செல்லும் மாணவர்கள் உட்பட பொதுமக்கள் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(த-9)

# ஹிருணிகாவின் குடும்பத்துக்கு வழங்கிய வீட்டை ஒப்படைக்குக

## ஜனாதிபதி மைத்திரிபால பணிப்பு

கொழும்பு, டிசெ. 30

நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணி காவின் தாய் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு அரசால் வழங்கப்பட்ட வீட்டை அவர்கள் அரசுக்குத் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆலோசகராக இருந்த ஹிருணிகாவின் தந்தையான, பாரதலக்ஸ்மன் பிரேமச்சந்திர, கொலன்னாவையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் கொல் [illegible]

[illegible] அப்பொழுதிருந்த ராஜபக்ச அரசினால், ஹிருணிகாவின் தாய் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு கொழும்பு 7 இல் வீடொன்று வழங்கப்பட்டது. மேலும் அவர்களின் பாதுகாப்புக்கு விசேட ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. குறித்த குடும்பத்தினர் இன்னமும் அந்த வீட்டிலேயே உள்ளனர்.

இந்தநிலையிலேயே, அவர்கள் அங்கிருந்து வெளியேறி, அந்த வீட்டை அரசிடம் மீண்டும் ஒப்படைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஹிருணிகா நாடாளுமன்றத்துக்குத் தெரிவான தன் பின்னர் அங்கு வசித்ததற்கான வீட்டு வாடகையையும் அரசுக்கு வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஹிருணிகா இளைஞர் ஒருவரைக் கடத்திய செயலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டொன்று அண்மையில் வெளியாகியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இன ஒற்றுமை உருவாக மதச் சமத்துவமும் அவசியமே!

எந்த ஒரு மதமும், மற்றொரு மதத்தைக் கட்டுப்படுத்தவோ, கோட்பாடுகளை மூழ்கடிக்கவோ, பலவந்தமாகப் புகுத்தவோ, இடம் அளிக்க முடியாது.

இலங்கையில் மட்டுமன்றி, அனைத்துலக ரீதியிலும் இனங்கள், மதங்கள், மொழிகள் போன்றே, அனைவருக்கும் அவரவரது மதத்துக்கு உரிய அடையாளங்களும் மிகப் பிரதான மானவை.

அறிவைப் பெற்றுள்ள ஒரு சாரார், தமது அறிவை, சமூகத்தை வழிநடத்துவதற்குப் பயன்படுத்துகிறார்கள். அதேவேளை, இன்னொரு தரப்பினர், உலக அழிவை நாடிய தேவைக்காகப் பயன்படுத்துகிறார்கள். அந்த நிலை வருத்தம் அளிப்பதும், கண்டிக்கப்பட வேண்டியது மாகும்.

மேற்போந்த கருத்துக்களை வெளிப்படுத்தி உள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

பல்லின, பல்மத, பன்மொழி, பல்வகைப் பண்பாடுகள் கொண்ட பல நாடுகளில், பரஸ்பரம் ஒருவரது பண்பாட்டை மற்றவர் மதித்து நடக்கும் நிலைப்பாடு மேலெழுந்து வருகிறது.

அந்த வகையில், பல நாடுகள் தமது மதம் சார்ந்த அரசமைப்பை மாற்றி அமைத்து வருவது, கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். அதற்கான ஆகப்பிந்திய, அண்மைக்கால நடவடிக்கையாக, சான்றாக, நேபாள நாட்டைக் கொள்ளலாம். தமது நாடு இந்துமத நாடு என்ற நிலைப்பாட்டை மாற்றும் வகையில், அதன் அரசமைப்பை மதச்சார்பற்ற தேசத்தின் அரசமைப்பாக அமைத்துள்ளனர்.

மதங்களின் பெயர்களில் இன்னமும், உலகின் பல நாடுகளில் இனமோதல்கள், கலவரங்கள் நடைபெற்று வருவதை நாளாந்தத் தகவல்களாக அறிகின்றோம். மேற்கு நாடுகளில் இப்போது மேற்கொள்ளப்படும் இஸ்லாமிய தேசப் போராளிகள் குழுவின்(I.S.S)தாக்குதல்களை அதற்கான உதாரணங்களாகக் கொள்ளலாம்.

அது ஒரு புறமிருக்க--

இலங்கையிலும் கடந்த காலத்தில் ஆட்சியாளர்களின் அனுசரணையுடன், “ஆசியுடன்”, தமிழ் மக்கள் மீதான இனக்கலவரங்கள் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் சிறுபான்மை மக்களது வணக்கத் தலங்கள் இடிக்கப்பட்டமை இரகசியம் அல்ல. அதனால் பாதிக்கப்பட்ட தரப்புகள் கையறு நிலையில், கந்தறுந்து போன நிலைமை மேலுயர்ந்ததும் சரித்திரமாகி விட்டது!

அத்தகைய சூழமைவில், எங்கள் தேசத்தையும் நாகரிக வளர்ச்சியுற்ற ஒன்றாக இனம் காட்டும் ஆழமான அணுகுமுறைகள் தேவை.

இன்னொரு வகையில் நோக்கின், நாட்டின் நீடித்த நல்லிணக்கத்தை உண்டாக்குவதற்கான செயற்பாடுகள் இப்போதைய அரசின், ஜனாதிபதியின் பதவிக் காலத்தில் முளைக்க வேண்டும்.

ஒரு சமயத்தைப் பின்பற்றுவோர் ஏனைய சமயங்களை மதிக்கவும், சமயப் பொறையை உருவாக்கவும், நல்லிணக்க அரசு வழி செய்ய வேண்டும்.

இன ஒற்றுமைக்குச் சமாந்தரமாக, சமயப் பொறையும், பிற சமயங்களை மதிக்கும் பண்பும் மேலுயர வேண்டும். அது நாட்டின் சுபீட்சத்துக்கு பெரும் பங்களிப்பை நல்கும் என நம்பலாம்.

# குற்றம் புரிந்தவர் எவரானாலும் தண்டனையை எதிர்கொண்டே ஆகவேண்டும்

## -ஜனாதிபதி மைத்திரிபால

சண்டேரைம்ஸ் கட்டுரையில் இருந்து ரெங்கன்

இராணுவம் கடைப்பிடிக்கவேண்டியவிதி முறைகள் உண்டு. அதேபோல்ஒழுங்கு முறைகளும்உண்டு. சர்வதேச ஒப்பந்தங்களும் சட்டங்களும்கூட இருக்கின்றன. இவைகளைமீறிசெயற்படும்போது, அவைகளுக்கு பொறுப்பானவர்கள் மீது குற்றம் சுமத்தப்படவே செய்யும். எதிர்வரும்உள்ளூராட்சிமன்றத்தேர்தல்களை உத்தேசித்து அரசு தனது நிலைப்பாட்டை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் முயற்சிகளை எடுத்து வரும் அதேவேளை, சில தொழிற்சங்கங்கள் புதுவருடத்தில் அரசின் வரவு–செலவுத் திட்டத்தின் சில முக்கிய முன்மொழிவுகளுக்கு எதிராகப்போராட்டங்களில்இறங்கத் தம்மைத் தயார்படுத்தி வருகின்றன. இதில் அரசியல் பின்னணியும் இருக்கலாம் என்று புலனாய்வுத் தகவல்கள் எச்சரித்துள்ளன. இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்வதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தரப்பினர், புதிய கட்சி ஒன்றை உருவாக்கிக் கொள்ளத் திட்டமிட்டு வருவதாகக் கூறப்படுகின்றது. இந்தக் கட்சி, தொழிற்சங்கங்களின் போராட்ட காலத்தில் களமிறங்கி உள்ளூராட்சித் தேர்தலின்போது விரிவானதொரு எதிர்க்கட்சியாகத் தொழிற்படுவதற்கானநடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அறியமுடிகின்றது.

இது இவ்வாறு இருக்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த வாரம் ஒரு சிங்களமொழி ஊடகத்துக்கு அளித்துள்ள நேர்காணலில், தமது ஜனாதிபதிப் பதவிக் காலம் முடிவுற்றதன் பின்னர் தமது கட்சியின் சார்பில் பிரதமர் பதவிக்குத் தாம் போட்டியிடக் கூடும் என்பதை மறைமுகமாகத் தெரி வித்திருக்கிறார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டு பிரதம மந்திரியின் தலைமையில் அதிகாரங்கள் நிலை நாட்டப்படும் காலத்தில், இது நடைபெறுவதாக இருக்கும். அவர் அதனைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டாமல் விட்டாலும், எதிர்காலத்தில் என்ன நடக்கும்என்பதை இப்போதே எதிர்வு கூற முடியாது என்றார்.

ஜனாதிபதிப் பதவிக்கு நான் மீண்டும் ஒரு முறை போட்டியிடப் போவதில்லை என்று மட்டுமே கூறியிருக்கிறேன் என்று விளக்கினார். ஜனாதிபதிப் பதவியைப் பற்றித்தான் கூறியிருந்தேனே யன்றி, எனது எதிர்கால அரசியல் பற்றி அல்ல என்றார். எனது அரசியல் கோட்பாட்டைத் தொடர்ந்து [illegible] கூறினார்.

**ஜனாதிபதி-பிரதமர் கருத்து முரண்பாடு**

அவர் கூறியுள்ள கருத்துக்களில் சிலவற்றைப் பார்க்கையில் இன்றைய அரசைக் கொண்டு நடத்திவரும் ஜனாதிபதிக்கும்–பிரதமருக்கும் இடையில் கருத்து மோதல்கள் இருந்து வருவது புலனாகின்றது. அவர்கள் இருவரும் நாட்டிலுள்ள பெரிய கட்சிகள் இரண்டைப் பிரதிநிதித்துவம் வகிப்பதால் இவ்வாறான கருத்து முரண்பாடுகள் தவிர்க்க முடியாதவைதான். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில் நடத்தப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார். ஆனால் அடுத்த வருடப் பின்பகுதியிலேயே அந்தத் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். மேலும், தேர்தல்முறைசீர்திருத்தங்களின் பின்னரே அது நடைபெறும் என்பதும் அவர் கருத்தாக இருக்கின்றது. அவ்வாறான சீர்திருத்தங்கள் பற்றிய அரசமைப்பு வரைந்து முடிவதற்கு முன்பதாகவே அமைப்பு அவையினால் இறுதியாக்கப்படும் என்றும்– அவர் வலியுறுத்தினார்.


> “முன்னாள் ஜனாதிபதி தொடர்பான கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த ஜனாதிபதி சிறிசேன தனிப்பட்ட முறையில் எனக்கு எவருடனும் பிரச்சினை கிடையாது. எனது கோரிக்கை என்ன வென்றால் கட்சியின் நலனுக்காக அனைவரும்ஒன்றுசேரவேண்டும் என்பதே”

உள்ளூராட்சி மன்ற வட்டாரங்களின் எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், அவைகளுக்கு ஆட்சேபனைகள் கிளப்பப்பட்டமையால் வேறொரு குழு நியமிக்கப்பட்டது. அது பொதுமக்கள் கருத்தை கேட்டிருந்தது. 2 ஆயிரத்துக்கும் அதிகமான கருத்துக்கள் கிடைத்து அவை அனைத்தும் பரிசீலிக்கப்படவிருக்கின்றன. அதற்கு மூன்று அல்லது நான்கு மாதங்கள் தேவைப்படும். அதன்பிறகே தேர்தல்களை நடத்துவது சாத்தியம். பொதுவில் குறைந்தது ஆறு மாதம் பிடிக்கும் என்று நான் நம்புகின்றேன். எனவே அடுத்த வருடம் ஏப்ரலுக்குப் பிறகுதான் அது நிகழும் என்று ஜனாதிபதி கூறினார். அவர் மேலும் கூறுகையில், வரவிருக்கும் தேர்தலை நானும் பிரதமர் விக்கிரமசிங்கவும் எவ்வாறு நடத்தி முடிக்கப் போகிறோம் என்று பலரும் கேட்கிறார்கள். அதுதான் ஓர் ஜனநாயக நாட்டின் தனித்துவமான தன்மை. அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் மற்றும் ஜேர்மனி போன்ற ஜனநாயக நாடுகளின் நல்ல மரபுகளை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நானும் பிரதமரும் அவரவரது கட்சிக் கொள்கைகளின் அடிப்படையில் பரப்புரை இயக்கத்தை முன்னெடுப்போம். நாங்கள் தனிப்பட்ட விமர்சனங்களை முன்னெடுக்கப் போவதில்லை. மக்கள் முன் நாங்கள் வைக்கும் கொள்கை அறிக்கைகளின் மீது அவர்களின் தீர்ப்பை நாங்கள் கோரி நிற்போம்– என்றார்.

முன்னாள் ஜனாதிபதி தொடர்பான கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த ஜனாதிபதி சிறிசேன, தனிப்பட்ட முறையில் எனக்கு எவருடனும் பிரச்சினை கிடையாது. எனது கோரிக்கை என்ன வென்றால், கட்சியின்நலனுக்காக அனைவரும் ஒன்று சேரவேண் டும் என்பதே ஒருவர் கறுப்பாய் இருக்கிறார். அல்லது வெள்ளையாய் இருக்கிறார் என்பது எனக் குக் கவலை தராது என்றார்.

மேலும்வரவு–செலவுத்திட்டத்துக்கு எதிராக வாக்களித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தண்டிக்கப் படமாட்டார்கள்...

(13 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்றும்–கூறினார்.
2016 ஆம் ஆண்டானது, அரசின் சில முக்கிய நிகழ்ச்சி நிரல் தொடர்பான வாக்குறுதிகளுடன் மலர்கின்றது. புதியதான ஒரு தேர்தல் முறை; ஒரு புதிய அரசமைப்பு, அரச துறையினருக்கான ஒரு சம்பள அதிகரிப்பு மற்றும் தகவல் அறியும் சட்ட வரைவு போன்றவை அதில் சிலவாகும். இன்னொரு பக்கம் தொழிற் சங்கங்கள் போராட்டங்களுக்கு ஆயத்தமாகி வருகின்றன.
ரூபாவின் மதிப்பு, டொலரோடு ஒப்பிடுகையில் கீழ் நோக்கி சரிந்து கொண்டிருக்கின்றது. மற்றும் வேலையின்மை அதிகரிக்கிறது. நாட்டின் பொருளாதாரம் குறித்து சர்வதேச நாணய நிதியம் கவலை தெரிவித்து வருகின்றது.
ஊழல்கள் மற்றும் செல்வாக்குள்ள அரசியல்வாதிகளால் நடத்தப்படும் ஆள்கடத்தல்கள் தொடர்வதான குற்றச்சாட்டுக்கள் தொடர்கின்றன. இவை யாவும் வரப்போகின்ற உள்ளூராட்சித் தேர்தல்களின்போது அரசின் மக்கள் ஆதரவை வெளிப்படுத்தும் அரசியல் விடயங்களாக இருக்கப் போகின்றன.

**புலி உறுப்பினர் விடுவிப்புப் பிரச்சினை**

ஒருபக்கம் விடுதலைப் புலி உறுப்பினர்களை விடுதலை செய்கின்றீர்கள். மறுபக்கம் இராணுவ அதிகாரிகளை சிறையில் அடைக்கின்றீர்கள் என்று குற்றஞ்சாட்டப் படுவது பற்றி ஜனாதிபதி விரிவாகப் பதில் அளித்திருந்தார். அதன் சுருக்கம் வருமாறு–
விடுதலைப் புலிகள் சந்தேக நபர்களை விடுவிப்பது தொடர்பாகப் பேசுபவர்கள் தங்களைத் தாங்களே கண்ணாடியில் பார்த்துக்கொள்ள வேண்டும். 2009 இல் இருந்து 2014 வரை 12 ஆயிரம் புலி உறுப்பினர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் சிலருக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டிருந்தது. கருணாவை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் சாதாரண மனிதரா? கிழக்கில் 700 பொலிஸாரைக் கொன்றவர் அவர். அரந்தலாவையில் புத்தபிக்குமாரைக் கொன்றமைக்கும் பொறுப்பானவர். கிழக்கில் அவர்தான் புலிகளின் இராணுவத் தலைவராக இருந்தார் என்பது எமக்கும் தெரியும். முன்னைய அரசில் இணைந்து கொள்ள அவர் அனுமதிக் கப்பட்டார். சுதந்திரக் கட்சியின் உபதலைவர் பதவியும் வழங்கப்பட்டது. அமைச்சரவைப் பதவியும் வழங்கப்பட்டது. சுதந்திரக் கட்சியின் தேசியப் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் வழங்கப்பட்டது. பிள்ளையானை எடுத்துக்கொள்வோம். முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த அவர், அதற்கு முன் என்ன செய்து கொண்டிருந்தார் என்பது எமக்கு மிக நன்றாகவே தெரியும். கே.பி என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் எவ்வளவு சொத்துக்களை அனுபவித்தார் என்பதைப் பாருங்கள். ஆயுதங்களை விநியோகம் செய்வது, கப்பல்களை இயக்குவது, வெடிமருந்துகளைக் கொள்வனவு செய்வது எல்லாம் அவராலேயே செய்யப்பட்டுள்ளன. அவரை முன்னைய அரசு எந்தமுறையில் நடத்தியது? அவருக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரம், அவர் என்ன நிலையில் இன்று இருக்கிறார் என்பதைப் பாருங்கள். இப்பொழுது கருணா அம்மான் போன்றவர்கள் இல்லை. பாரதூரமான குற்றச்சாட்டுக்களைப் புரிந்தவர்கள் இருந்தால் அவர்களை எங்களால் விடுவிக்க முடியாது. இனி மேற்

> **“போரின் போது இராணுவ அதிகாரிகள் போர்க் குற்றம் புரிந்தமைக் கான குற்றச்சாட்டுக் கள் பற்றிய பிரச் சினை இருக்கின்றது. இராணுவம் கடைப் பிடிக்க வேண்டிய விதி முறைகள் இருக் கின்றன.”**

கொண்டும் சிறையில் இருக்கலாகாது என்று காண்பவர்களை விடுவிக்கின்றோம். அவர்களில் சிலர் பிணையில் விடுவிக்கப்படுகின்றனர். முழுச் சுதந்திரம் வழங்கப்படவில்லை. இது பழைய பொறுப்புக்களையும் பகைமையையும் ஒழிப்பதற்காக செய்யப்படும் காரியம். இரு தரப்பினரும் இதில் அர்ப்பணிப்பைச் செய்தாக வேண்டும்–என்றார்.

**இராணுவம் மீதான போர்க்குற்றம்**

போரின் போது இராணுவ அதிகாரிகள் போர்க்குற்றம் புரிந்தமைக்கான குற்றச்சாட்டுக்கள் பற்றிய பிரச்சினை இருக்கின்றது. இராணுவம் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் இருக்கின்றன. அதேபோல் போரின்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கமுறைகளும் உண்டு. அதேபோல் சர்வதேச ஒப்பந்தங்களும் சர்வதேச சட்டங்களும் உண்டு. இவைகளை மீறி செயற்படும் போது அவைகளுக்குப் பொறுப்பானவர்கள் மீது குற்றம் சாட்டப்படுவது உண்டு. பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுடன் கதைத்துப் பாருங்கள். இராணுவ ஒழுக்கங்களுக்கு மாறாக சட்டவிரோத செயல்கள் நடைபெற்றிருக்குமானால் தண்டனை வழங்கப்பட்டேயாக வேண்டும். காவலில் இருக்கும் இராணுவ அதிகாரிகள் மக்கள் மத்தியில் வெகுநாள்களாக நிலவி வந்துள்ள சில பிரச்சினைகளின் அடிப்படையிலேயே அவ்வாறு செயற்பட்டுள்ளார்கள். விசாரணைகள் வேண்டும் என்று பலமான குரல் எழுப்பப்பட்டு வந்துள்ளது. நாம் பதவியில் இல்லாதபோதே தேர்தலின்போது விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அவ்வாறு விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டால்தான் ஒத்துழைப்பு வழங்கப்பட முடியும் என்றும் எமக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எக்னெலிகொட விடயம், லசந்த விக்கிரமதுங்க படுகொலை, நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை போன்றவை நாட்டு மக்கள் மத்தியில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் விவாதிக்கப்பட்டுள்ள விடயங்கள். இவைகளுக்கான ஒரே வழி உண்மையைக் கண்டறிவதாகும்.
எவராவது குற்றம் செய்யாதவர் என்று கண்டறியப்பட்டால் எவராயிருந்தாலும் இறுதியில் விடுதலை செய்யப்படுவார். எவ்வாறாயினும் குற்றம் புரிந்திருந்தால் அவர் தண்டனையை எதிர்கொண்டேயாக வேண்டும். இதுதான் உலகம் முழுவதும் நடைபெறுகிறது. பாரபட்சமின்றி இவைகள் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். இவைகள் குறித்து இனத்துவேசம் அல்லது தேசப்பற்று உணர்வுகளைத் தூண்டக்கூடாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

## தந்தை செல்வா வீதி மக்களின் போக்குவரத்து இடர்கள் நீங்க வேண்டும்

மீள்குடியமர்ந்த தெல்லிப்பழை தந்தை செல்வா வீதியை அண்டியுள்ள பகுதி மக்கள், சீரான போக்குவரத்துச் சேவைகளைப் பெறமுடியாத நிலையில் தொடர்ந்தும் காணப்படுகின்றனர்.
இவர்கள் பஸ் சேவையைப் பெற வேண்டுமானால்; ஒரு கிலோ மீற்றர் தூரம் நடந்து தெல்லிப்பளைச் சந்திக்குள் செல்ல வேண்டும். இதனால் வயோதிபர்கள்,நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார், சிறுவர்கள் எனப் பலரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.
இந்தப் பகுதி மக்கள் போர் காரணமாக இடம்பெயர்ந்து சென்று பல்வேறு கஷ்டங்களை அனுபவித்த பின்னர் மீள்குடியமர்ந்துள்ளனர். இவர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது உரிய அதிகாரிகளின் கடமையாகும். மக்களின் அன்றாட வாழ்க்கையில் போக்குவரத்து வசதிகள் மிகவும் இன்றியமையாதவை. ஆனால் இவை இந்த மக் களை இன்னமும் சென்றடையாமை கவலை தரும் விடயமாகும்.
இந்த மக்கள் தமக்குரிய போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்த போதிலும், அது இன்னமும் நிறைவேற்றி வைக்கப்படவில்லை.
பஸ் சேவைகள் அம்பன் சந்தி வரைக்கும் அல்லது மகாஜனக் கல்லூரி வரைக்கும் இடம்பெறுமாயின், இந்த மக்கள் தமது போக்குவரத்து வசதிகளை ஓரளவு பெற்றுக்கொள்ள முடியும்.
மேலும் மழை காலங்களில் இந்த மக்கள் எதிர்கொள்கின்ற சிரமங்களையும் அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் கவனத்தில் கொள்ள வேண்டும். போரால் இடர்களை எதிர்கொண்ட இந்த மக்கள் மீள்குடியமர்ந்த பின்னரும் இடர்களை எதிர்கொள்வது எந்த வகையிலும் நியாயமாகாது.
ஆகவே இந்த மக்களின் கோரிக்கையைச் செவிமடுத்து அவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் அடுத்த ஆண்டில் இருந்தாவது செய்து கொடுக்கப்படுமாயின், மிகப்பெரிய உதவியாக இருக்கும்.
புதிய ஆண்டிலாவது தமக்கு விடிவு கிடைக்குமா? என்ற ஏக்கத்துடன் இந்த மக்கள் காத்திருக்கின்றனர்

**பா.தமிழினி, தந்தை செல்வா வீதி**

## ஞானவைரவர் வீதிக்கு விமோசனம் கிடைக்காதா?

தெல்லிப்பழை தந்தை செல்வா வீதிக்கு அருகில் உள்ள ஞானவைரவர் கோயில் வீதி மக்களால் பயன்படுத்த முடியாத நிலையில் தற்போது காணப்படுகின்றது.
மழை வெள்ளம் இந்த வீதியில் தேங்கி நிற்பதே இதற்கான பிரதான காரணமாகும். இங்கு மீள்குடியமர்ந்த மக்கள் போக்குவரத்துச் செய்வதில் தொடர்ந்தும் இன்னல்களை எதிர் கொண்டு வருகின்றனர். இங்கு அமைந்துள்ள வீதிகள் புனரமைக்கப்படுமாயின் அவர்களின் இன்னல்கள் ஓரளவு குறைவதற்கு வாய்ப்பு ஏற்படும். இதில் ஞானவைரவர் கோயில் வீதி பிரதான இடத்தை வகிக்கின்றது.
தினமும் மக்கள் பயன்படுத்துகின்ற இந்த வீதியை இனியாவது புனரமைத்து வழங்கினால் இந்தப் பகுதி மக்கள் பயன் அடைவார்கள்.

**த.சிற்றம்பலம், தெல்லிப்பழை**

## சுதுமலைப் பகுதியில் தேங்கி நின்ற வெள்ளம்

தேர்தல் காலத்தின்போது நானறிந்து வீடு வீடாக வாக்குச் சேர்த்து தேர்தலை நடத்தி களமிறங்கிய எவரும் வெள்ளத்தால் நாம் இடம்பெயர்ந்து இருந்த வேளையில் அந்த இடத்துக்கு வருகை தரவில்லை. எமது கிராம இளைஞர்கள் சிலரால் முன்னெடுக்கப்பட்ட முயற்சியின் மூலம் கொத்தலாவ வெள்ளவாய்க்காலைத் துப்புரவு செய்யும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும் போதிய உபகரணங்கள் இன்மையால் உரிய அதிகாரிகளின் உதவி வேண்டப்பட்டமையைத் தொடர்ந்து அவர்களின் பங்கு பற்றுதலுடன் சிறிதளவு வெள்ளம் வெளியேற்றப்பட்டு மீண்டும் குடியேறினோம்.
இந்த இடத்தில் தம் நலன் பாராது பிறர் நலன் பேணி உதவியவர்களுக்கு நன்றி.
இருப்பினும் கடந்த கால பிரச்சினைகள் காரணமாக சேர்.கொத்தலாவ வாய்க்காலினூடாக வெள்ளம் பாய்ந்து செல்லவில்லை. மேலும் அந்த வாய்க்காலைத் துப்புரவு செய்ய வேண்டிய தேவை உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு பெருந்தன்மையாக இனிமேல் கொட்டவுள்ள மழையிலிருந்து எம்மை விடுவித்து வெள்ளத்தைப் போக்குமாறு வேண்டி நிற்கின்றேன். சுதுமலை அம்மன் ஆலயத்தை சுற்றி தேங்கியுள்ள வெள்ளம் பாய்ந்தோட வழி செய்ய வேண்டும். தொற்று நோய்களுக்கு மக்கள் உள்ளாகும் நிலைமை வெகு தொலைவில் இல்லை. மீண்டும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பணம் வசூலிப்பதை நோக்காகக் கொள்ளாது தமது கடமைகளை நிறைவேற்ற வேண்டி நிற்கின்றேன்.

**பாதிக்கப்பட்டவர்கள் சார்பில், மானிப்பாய்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஐ.முபாறக்

# பயங்கரவாதம் என்பது ஓர் இனத்துக்கு உரியதல்ல



பயங்கரவாதம் என்பது ஓர் இனத்துக்கு மாத்திரம் உரித்தானது என்று சில சக்திகள் வரைவிலக்கணம் கொடுக்க முற்படுகின்றபோதிலும், உண்மை அதுவல்ல என்று நிரூபிக்கும் வகையில் உலகில் அவ்வப்போது பல சம்பவங்கள் நடக்கத்தான் செய்கின்றன.

எந்த இனத்தைச் சேர்ந்த மக்களுக்கும் பயங்கரவாதத்துடன் உடன்பாடில்லை. அன்பு, கருணை, மனிதாபிமானம் என்பது இனம், மதம் மற்றும் மொழி கடந்தவையாகும். ஆனால், அரசியல் இலாபம் தேட முற்படும் வல்லாதிக்க சக்திகளே இந்தப் பயங்கரவாதத்துக்கு ஓர் இனத்தை சொந்தக்காரர்களாக்க முற்படுகின்றன.

**உலகம் முழுவதும் பயங்கரவாதம்**

பல பயங்கரவாத அமைப்புகள் உலகம் முழுவதும் செயற்படுகின்றன. ஆனால், திட்டமிட்டுத் தெரிவுசெய்யப்பட்ட சில பயங்கரவாத அமைப்புக்களின் செயற்பாடுகள்

> பல பயங்கரவாத அமைப்புகள் உலகம் முழுவதும்செயற்படுகின்றன. ஆனால், திட்டமிட்டுத் தெரிவு செய்யப்பட்ட சில பயங்கரவாத அமைப்புக்களின் செயற்பாடுகள் மாத்திரமே உலகுக்குத் தெரியப்படுத்தப்படுகின்றன.

மாத்திரமே உலகுக்குத் தெரியப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு செய்வதற்கு மேற்கு நாடுகளும் அந்த நாடுகளின் கைக் கூலி ஊடகங்களுமே காரணம்.

ஓர் இனத்து எதிரான அநியாயத்தை அந்த வல்லாதிக்க நாடுகளே தூண்டும். மறுபுறம், பாதிக்கப்பட்ட அந்த இனம் நீதி கேட்டுப் போராடுவதற்கு எதுவாக அந்த நாடுகளே பின் கதவால் ஆயுதங்களைக் கொடுத்துப் போராட வைக்கின்றன.

பயங்கரவாதச் செயற்பாடுகளை நோக்கி அந்த அமைப்புக்களை நகர்த்திவிட்டு, அந்த அமைப்புக்கள் மீது பின்பு பயங்கரவாதிகள் என்ற முத்திரையைக் குத்துகின்றன. அந்த அடிப்படையில், அந்தப் பயங்கர வாத அமைப்புகள் எந்த இனத்தைச் சார்ந்தவையோ, அந்த இனம் பயங்க ரவாத இனமாகச் சித்திரிக்கப்படும். இதுதான் இன்று உலகில் முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கின்றது.

**பா.ஜ.கவின் நாடகங்கள்**

இந்த விடயத்தில் நாம் தெளிவைப் பெற வேண்டும் என்றால், நாம் இந்தியாவின் பக்கம் கவனத்தைச் செலுத்த வேண்டும். இந்து - முஸ்லிம் மக்களிடையே கலவரத்தை ஏற்படுத்தி அதன் மூலம் இந்து மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக பா.ஜ.க. நடத்தி வரும் நாடகங்களை ஆராய்ந்து பார்த்தால் இந்த உண்மை புரியும்.

இந்தக் கட்சி அதன் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ். உடன் இணைந்து திட்டமிட்ட அடிப்படையில் குஜராத் கலவரத்தையும், பாபர்மஸ்ஜித் இடிப்புச் சம்பவத்தையும் நடத்தி இந்து - முஸ்லிம் மக்களிடையே பிளவை ஏற்படுத்தியது. ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் குஜராத் கலவரத்தில் கொல்லப்பட்டமைக்குப் பழிவாங்கும் விதமாக, சில குண்டு வெடிப்புச் சம்பவங்களை முஸ்லிம் ஆயுததாரிகள் சிலர் இந்தியாவின் சில இடங்களில் நிகழ்த்தினர்.

குஜராத் கலவரத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட உயிர் மற்றும் பொருள் சேதங்களை விடவும், மிக மிகக் குறைந்த எண்ணிக்கையில்தான் இந்துக்களுக்கு சேதங்கள் ஏற்பட்டன. ஆனால், அந்தச் சம்பவங்களைத்தான் இந்த ஊடகங்கள் பெரிதுபடுத்தின. முஸ்லிம்கள் அனைவரையும் தீவிரவாதிகளாகவே காண்பித்து வந்தன; வருகின்றன. ஆனால், குஜராத் மற்றும் பாபர்மஸ் ஜித் இடிப்பு போன்ற முஸ்லிம்களுக்கு அதிக இழப்பைக் கொடுத்த சம்பவங்களை இந்த ஊடகங்கள் கண்டுகொள்ளவே இல்லை.

இவ்வாறுதான் ஊடகங்கள் முஸ்லிம்களை பயங்கரவாதிகளாகச் சித்திரித்து வருகின்றன. இந்த நிலைமை உலகம் முழுவதும் உள்ளது.

# எதிரிகளை நண்பர்களாக மதித்த பண்பாளர்

வ.இ.செல்வக்குமார்.

காலணா காசு புழக்கத்தில் இருந்த காலம் தொட்டே கால் தேய நடந்து கண் உறக்கமின்றி கடமையே கண்ணாகக் கொண்டு தன்னை உரமாக்கி உயர்ந்தவர் பொன்மனச் செம்மல். வள்ளலின் தோள்களில்- விழுந்த மாலைகள்போல் வேறு எவர் தோள்களில் விழுந்திருந்தாலும் விலா எலும்பு முறிந்தல்லவா விழுந்திருப்பார்கள். அதே நேரத்தில், கோடி மலர்களைத் தன் தோள்களில் சுமந்த புரட்சித் தலைவரின் பொற்பாதங்கள், எத்தனை முள்களால் ரணப்பட்டிருக்கும்.

**கதாநாயகனாக உயர்வு**

அடைப்பக் காரனாய், அடியாளாய், வெஞ்சாமரம் வீசும் சேவகனாய், கூட்டத்தில் காணாமற்போன குழந்தையாய் மெல்ல மெல்ல சினிமாவில் தலைகாட்டி கதாநாயகனாக உயர்வு பெற்ற வள்ளல் அந்தப் படத்தின் ஒரு காட்சியில் கதாநாயகி குமுதினி மடியில் தலைவைத்துக் கொண்டு பேசுவதுபோல் ஒரு காட்சி. இந்தக் காட்சியைப் பார்த்த குமுதினியின் கணவர் ராம்நாத், ஒரு சாதாரண துணை நடிகர் என்துணைவியின் மடியில் தலை வைப்பதா? என்று ஒத்துக்கொள்ள மறுத்து தன் மனைவியை படிப்பிடிப்பின்போதே அழைத்துச் சென்றுவிட்டார். இதை ஒரு தன்மானப் பிரச்சினையாக எடுத்துக்கொண்ட தயாரிப்பாளர், வள்ளலின் முதுகில் தட்டிக்கொடுத்து கவலைப்படாதே! இவர்களே உன் வாசல் தேடிவரும் காலம் வரும் என்று கூறி எடுத்த அவ்வளவு பிலிம் சுருள்களையும் அதே இடத்தில் தீயிட்டுக் கொளுத்தினார். பின்னாளில் அதே குமுதினியே எமது வள்ளலின் வாசல் தேடி வந்து ஏலம் போகவிருந்த தன் வீட்டை மீண்டும் பெற்ற கதை நாடறிந்தது.



இப்படித்தான் அமெரிக்க இயக்குநர் எல்லீஸ் டங்கன் தான் இயக்கிய சில படங்களில் துணை நடிகராக வந்து போன வள்ளலை, ஜபிடர் பிக்சர்ஸ் அதிபர் சோமு மந்திரி குமாரி படத்தில் கதாநாயகனாக ஒப்பந்தம் செய்தது அவருக்கு கௌரவக் குறைச்சலாகப் பட்டது.

**வள்ளலின் உயர்ந்த பண்பு**

எனவே படப்பிடிப்பை வேண்டா வெறுப்பாகவே தொடங்கி வள்ளலை எந்த அளவுக்குப் புண்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு புண்படுத்தி நடிக்கச் செய்திருக்கிறார். ஒருநாள் அவர் வள்ளலின் வீடுதேடிச் சென்றார். தன்னை வதைத்தவர் என்பதை மறந்துவிட்டு வானளாவிய புகழுடன் வாழ்வாங்கு வாழ்ந்த ஒரு மேதை என் வாசல் தேடி வந்து விட்டாரே, உள்ளே வரச்சொல்லுங்கள் என்று உத்தரவிட்ட வள்ளல், தானே அறையை விட்டு வெளியில் வந்து டங்கனைக் கட்டித் தழுவி உள்ளே அழைத்துச் செல்கிறார். உபசரிப்பை முடித்த வள்ளல், உங்களுக்கு என்ன வேண்டும்? என்னால் உங்களுக்கு ஏதாவது ஆக வேண்டுமா? வள்ளலின் வேத வார்த்தைகள் டங்கனின் காதில் பழுக்கக் காய்ச்சிய கம்பியாய் நுழைகிறது.

நான் தங்களுக்குச் செய்த கொடுமைகளை எல்லாம் மறந்து என்கது நீங்கள் இவ்வளவு உபசாரம் செய்வது எனக்கு வெட்கமாக இருக்கிறது. இருந்தும் வேறு வழியில்லாமல் தான், தங்கள் உதவியை நாடி வந்திருக்கிறேன் என்று கண்ணீர் மல்கக் கூறுகிறார். இப்பொழுது நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்? அதை மட்டும் சொல்லுங்கள் என்று வள்ளல் கேட்கிறார்.

லண்டனின் வசதியாய் வாழ்ந்த நான், இப்பொழுது வறுமை நிலைக்கு வந்துவிட்டேன்; மிகுதியாய் இருப்பது ஊட்டியில் இருக்கும் ஒரேஒரு தோட்டம் (எஸ்டேட்) தான். அதை யாவது விற்கலாம் என்றால் அதற்கும் வாய்ப்பில்லாமல் சிலசட்டச் சிக்கல் இருக்கின்றன. அதனால்தான் உங்களைத் தேடி வந்தேன்-என்றார் அவர். அரைமணி நேரம் பொறுத்திருங்கள். ஆவன செய்கிறேன் என்று வள்ளல் அவரை அருகில் இருந்த அறையில் அமர வைக்கிறார். அரைமணி நேரத்துக்குள் எல்லிஸ் டங்கன் மீண்டும் வள்ளலின் அறைக்கு அழைத்து வரப்படுகின்றார். இந்த சூட்கேசில் உங்களுக்குத் தேவையான பணம் இருக்கிறது. அத்தோடு உங்கள் எஸ்டேட்டையும் விற்பதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி மீண்டும் அறைவாசல் வரை வந்து வழியனுப்பி வைக்கிறார். வள்ளல். நான் செய்த தீமைகளுக்கு வள்ளல் என்னோடு பேசுவாரா? மதிப்பாரா? என்றெல்லாம் பயந்து வந்த டங்கனுக்கு, வள்ளல் வாரிக்கொடுத்து இன்னா செய்தவருக்கு இனியவை செய்து என்னை வெட்கப்பட வைத்து வரலாறு படைத்து விட்டாரே என்று வராந்தாவில் நடந்தவாறு வள்ளலின் அறையைத் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றார் எல்லீஸ் டங்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருடன்

# பித்த வாழ்வில் எம் சித்தம் தெளிய வித்தகமாய்ப் பிறந்து ச(ா)த்தியமாய் வருக


இறைவன் எந்த நோக்கத்துக்காக உலகத்தைப் படைத்தானோ, அந்த நோக்கம் ஏனோ நிறைவேறவில்லை. மனிதனைத் தவிர்ந்த ஏனைய உயிர் இனங்களும், தாவரங்களும் தத்தமது பாரம்பரியங்களை ஒருபோதுமே மீறியதில்லை. அவற்றுக் குரிய எல்லைகளைத் தாண்டியதில்லை. மனிதர்களாகிய நாமோ நடை, உடை, பாவனைகளையும் விட்டு, நாகரிகம் என்ற போர்வையில் – நோகாமல் கொள்ளாமல் இருந்த இடத்திலிருந்து கொண்டு வாழவும், நிர்வாகம் செய்யவும் பழகி விட்டோம். கடின உழைப்பு இல்லாமல், பணம் சம்பாதித்து வாழப் பலர் கங்கணம் கட்டி விட்டார்கள். விவசாயிகளும், தொழிலாளிகளும்வியர்வைசிந்திஉழைப்பதனாலன்றோ இந்த உலகம் உயிரோடு வாழ்ந்து வருகிறது. நில்லாதனவற்றை நிலையென்றுணரும் முடிவுதான். வாழ்க்கை என்று நம்புகின்ற போலியான வாழ்வில் சிக்கித் தவிக்கின்றோம். இத்தகு பித்த வாழ்வில் உழல்கின்ற நாம், சினிமாவைப் போன்று உடை, நடை, பாவனைகளில் விஞ்சி விட்டோம். இனி அவற்றிலிருந்து விடுபட முடியாதவர்களாகி விட்டோம். கவர்ச்சியானது காட்டக் காட்டப் போதை போன்று எல்லோரையும் தொடவும்-படவும்-விடவும் வைப்பது. 2015 ஆம் ஆண்டில் வித்தகமாய்ச் சிந்திக்க முடியாமல் போய்விட்டதே என்று கவலைப்பட்டு, என்னதான் செய்ய என்று யோசிக்காமல் 2016 இல் ஆவது சித்தம் தெளிந்து நாம் புதுவருடப்பிறப்பை முன்மாதிரியாக வாழத் தலைப்படுவோமாக. கொஞ்சமாவது ஆற அமர இருந்து சிந்திப்போமாக.

**வீடு**

ஒவ்வொரு வீட்டிலும் தினம்தினம் பல பொருள்களைப் பேறாக்கத் தெரியாமல், குப்பைக்குள் கூட்டித் தள்ளிவிட்டுக் கொண்டிருக்கின்றோம். உணவுப் பொருள்கள் தொடக்கம், அத்தனை பாவனைப் பொருள்கள் வரை அரை குறையாகப் போட்டுத் தள்ளிவிடுகின்றோம். ஆண்டவன் தந்த பிச்சையெல்லாவற்றையும் அநியாயமாக அவமாக்கி விடுகின்றோம். சிறு சிறு துளிகள்தான் பெருவெள்ளமாகப் பெருக்கெடுத்துப் பாய்கிறது. நாம் சின்னச் சின்ன விடயங்களிலேதான் தோற்றுவிடுகின்றோம். அவற்றைப் பேறாக்கினால் இந்த உலகம் தவமாகப் பயணிக்கும் என்பதில் சற்றேனும் ஐயமில்லை. நான் மாறினால் வீடுமாறும். வீடு மாறினால் வீதி மாறும். வீதி மாறினால் விதியே மாறிவிடும். விதி மாறினால் மீதியாயிருக் கின்ற மீடியாவே மாறிவிடும். மீடியாவே இந்த நாட்டையே மாற்றும். மாற்றியே தீரும்! மாற்ற வேண்டும்.

**நடை, உடை, பாவனை**

உடையும், எடையும், நடையும், படையும், கடையும், குடையும், கொடையும், இடையும், தொடையும், கிடையும், விடையுமாக, ஆள்பாதி ஆடைபாதி என்ற பழமொழிக்கு தவறுதலாக அர்த்தம் கற்பிக்கப்பட்டு, ஆளையும் பாதித்து ஆடையையும் பாதித்து விட்டது. இரண்டையும் குறைத்துக் குறைத்துக் கொண்டு, போவோமாக இருந்தால் நாம் எல்லோருக்கும் சொந்தக்காரராகி விடுவோம். பிறகென்ன? அவ்வளவுதான். இல்லறத்துக்கு வாய்ப்பே இல்லாமற் போய்விடும். ஆடைசோடை போகாதவாறு ஆளை முழுமையாக்க வேண்டும். ஆடையும் அரைகுறை, ஆளும் அரைகுறை, படிப்பும் அரைகுறை, பண்பும் அரைகுறை, பார்வையும் அரைகுறை என்றால் வீடு வாசல், வீதி கோயில், நாடு நகர் எல்லாமே துப்புரவு செய்யப்படவேண்டியிருக்கும். துப்புரவு என்பது வீட்டிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். அரைகுறை என்பது பித்தத்தின் தன்மையைக் குறிக்கும். பித்தம் ஏறினால், பித்தம் கலைந்தால் சித்தமும் கலங்கும். வித்தைகள் விலகும். சத்தியம் அசாத்தியமாகும். ஆதலால் பித்தம் சுவறிய இந்த உலகிலே சித்தத்தைத் தெளிவித்து வித்தகத்தோடு பிறந்து சத்தியமாய் நிறைந்து 2016 புத்தாண்டே சாத்தியமாய்ப் பிறந்து வரவேண்டும். சகமதில் இல்லையென்பது இல்லாதொழியவேண்டும். இருப்பதைப் பேறாக்கத் தெரிய வேண்டும். உன்கைகளில் சகல செல்வங்களையும் இறைவன் தந்துள்ளான். அதையெல்லாம் அவம் போகாமல் தவமாக்கும் வண்ணம் புதுவருடம் பிறப்பதாக.



> மனிதனைத் தவிர்ந்த ஏனைய உயிர் இனங்களும், தாவரங்களும் தத்தமது பாரம்பரியங்களை ஒருபோதுமே மீறியதில்லை. அவற்றுக்குரிய எல்லைகளைத் தாண்டியதில்லை.

**பிள்ளை**

உன்கையில் பிள்ளை, உனக்கே அடைக்கலம் என்று, ஒவ்வொரு வீட்டிலும் பெற்றோர்களிடம் பிள்ளைகள் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன. பிள்ளைகள் வரமாக்கப்பட்டிருக்கின்றன. இறைவன் தருகிறான் என்பதற்காகப் பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டிருத்தல் ஆகாது. எதுவும் அளவுதான். பெற்றபிள்ளைகளைக் கண்ணும் கருத்துமாய் வளர்த்தெடுப்பதும், வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதும் முக்கியமாகக் கல்வியறிவுடன் ஒழுக்கவிழுமியங்களைப் பேணச்செய்வதும் பெற்றோர்களது தவறாத கடமையாகும். இதை இனிமேலும் உணரவைப்பதாகப் புதுவருடம் 2016 ஆம் ஆண்டே, நீ உணர்ந்து பிறப்பாயாக. பெரும்பாலான குடும்பங்களில் அப்பா ஒரு பக்கம், அம்மா ஒரு பக்கம், பிள்ளைகள் ஒரு பக்கம், வீடு ஒரு பக்கம் என குடும்பம் வெவ்வேறு திசைகளில் பயணிக்கிறது. இந்த நிலைமாறியேயாக வேண்டும். இதனைப்புதுவருடமே நீ மாற்றுவாயாக. பிள்ளைகளில் (எல்லோருமல்ல) பெரும்பாலானவர்கள் வீட்டுவேலை செய்வதற்கு மனம் இரங்குகிறார்களில்லையே. அம்மாவே சகல வீட்டுவேலைகளையும் செய்வதாக நோ(க்)கப்படுகிறது. பிள்ளைகளில் ஒரு சிலரைத்தவிர ஏனையோர் தொ(ல்)லைபேசிகளோடும், அன்புவசப்பட்டோர் பலராலும் ஆட்கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். தங்கள் தங்கள் ஆணவ மலங்களைத் தவிர அனைத்து விடயங்களையும் கண்டு ஆனந்திக்கின்றார்கள். பிஞ்சிலே பழுத்து விடுகின்றார்கள். தாலிகட்டாமலே எல்லாம் செய்வதற்கு வீட்டுக்கு வெளி யிலே இடம்கண்டு பிடித்துவிடுகிறார்கள். பிறகென்ன? பிள்ளை தன்னாமம் கெட்டாள்(ன்) தலைப்பட்டாள்(ன்) நங்கை (நம்கை) தலைவன் (தலைவி) தாளே! பதம் கெட்டு, படிப்பு விட்டு, பணம் வயப்பட்டு, பால்வயப்பட்டு, பெற்றோர் கண்பட்டு, ஊரால் விடுபட்டு, இல்லறத்தில் அகப்பட்டு, தாய்மனமோ இரக்கப்பட்டு, வருமானமின்றி பிள்ளைகளும் பிரசவப்பட்டு, இதுதானோ வாழ்வென்று பிரிக்கப்பட்டு, விவாகரத்து வேண்டுமென்ற ஆசையால் உந்தப்பட்டு வாழ்க்கை ஓடிந்து போகும் நிலை இனியும் வேண்டாம் என்று பிறந்து வாராய்.

**ஆலயங்கள்**

தெய்வங்களையோ, தேவசம்பாத்தியங்களையோ, அந்தணப்பெருமக்களையோ, ஆலய தர்மகர்த்தாக்களையோ, ஆலய அடியார்களையோ, ஆலய நிதிகளையோ இறைவனின் பொக்கிஷங்களாகக் கருதி, வழக்கு - விசாரணை - தண்டனைகளுக்குள் வேதனைப்படுத்தாமல், நான் என்ற அகங்கார மமதையினர் விலகிட, ஒதுங்கிடப் புதுவருடமே பிறந்து வாராய். ஆலயங்களை நம்பியே நாம் பிணிதீர்க்க வருகின்றோம். அந்தணப் பெருமக்களை நோக வைக்காதீர்கள். விக்கிரகங்களையும் நோக வைக்காதீர்கள். பழைமைதரு அடியவர்களை அரவணைத்துச் செல்லவேண்டியதாகக் காலம்கனிந்திருக்கும்போது, அவர்களின் வேதனைகளைப் புரிந்து தெய்வ சம்பத்துக்களை விளைவிக்கப் புத்தாண்டே பிறப்பாயாக. சிவன் சொத்து குலநாசம். என்பதற்கேற்ப ஒரு சதம் கூட உன்னிடம் தவறாதபடி பார்த்துக் கொள்ள விழிப்பாகப் பிறப்பாயாக. மேலும், ஆலயங்களையும் அரசியல்போல் ஆட்சிசெய்யாதவாறு பார்த்துக்கொள்ள வருவாயாக. உலகமானது பல தலைமைகளை மாற்றிமாற்றித்தன்னைப் புதுப்பித்துக் கொள்வதுபோல ஆலயங்களிலும் தலைமைகள் மாறுவது காலத்தின் தேவையாகும். ஏனெனில் நான் என்பது ஆட்சிபெற்று உச்சம் பெற்று விடும் என்பதற்காகவேதான். இன்று உன்னுடையது நாளை இன்னுமொருவருடையது. நாளையை விடியவைக்க வேண்டியது ஒவ்வொருவருடைய பொறுப்பாகும். இவை எல்லாவற்றையும் உணர்ந்து பிறப்பாயாக. ஆலயங்களை இடிப்பதும், கட்டுவதும், நீட்டுவதும், பெருப்பிப்பதும், பொன்னாக்குவதும், பேறாக்குவதும், மகிமையைக் கூட்டுவதும், குறைப்பதும் பல பலமுறை யோசித்து, எல்லோரினதும் ஏகமனதான சம் மதத்தோடு செய்யப்பட வேண்டியதொன்றாகும். சுட்டங்கள் அல்ல சமயம். கடவுளைக் கீர்த்தி பெறச் செய்வதே பிரதானமெனக் கட்டியம் கூறிப் பிறப்பாயாக. வேள்விகளைக் கேள்விகளாக்கிப் பிறப்பாயாக. ஒதுக்கப்பட்டவர்களைச் செதுக்கிச் சித்திரமாக்கிப் பிறப்பாயாக.

**துஷ்பிரயோகம்**

சுத்தமில்லாத காமுகர்களினால் பெண்கள், குழந்தைகள், குஞ்சுகள், பிஞ்சுகள், இளசுகள் எனக் கொடூரமாகப் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படும் பாதகம் இனியும் வேண்டாமென (உரத்துச் சொல்லிப்) பிறந்து வா. மிருகங்களே செய்யமுடியாத இந்தச் செயலை வன்மையாகக் கண்டிக்கக் கூடிய சமூக, மத, புத்திஜீவிகள் தோன்ற வேண்டுமென்று சொல்லிச் சொல்லிப் பிறந்து வா.

**புலமைப் பரீட்சை**


ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையை முற்றாக நிறுத்தி எட்டாம் ஆண்டில் நடத்துவதே மெத்தச் சரியென்று உறைக்கச்சொல்லி பிறந்து வாராய். பத்துவயதில் மட்டும் அல்ல, ஒன்பது வயதிலேயே பிள்ளைகளை வறுத்து எடுக்கும் அவலநிலை வேண்டாமென்று ஓலமிட்டுப் பிறந்து வாராய். அந்தப் பிள்ளைகளுக்காகக் குரல்கொடுக்க எழுந்துவாராய்.

**ஆபாசம்**

எங்கு பார்த்தாலும், எதைப் பார்த்தாலும் எளிமையான அழகை மீறி, எழுச்சி பெறுகின்ற கவர்ச்சியானது ஆபத்தைக் கொண்டு வந்தே தீரும். அளவுக்கு அதிகமான எதுவென்றாலும் உலகும் ஏற்றுக் கொள்ளாது. உடலும் ஏற்றுக் கொள்ளாது. நாம் ஏற்றுக்கொள்ளாத அத்தனை காரியங்களையும் செய்கின்றோம் என்பதை ஒத்துக்கொள்ள நாம் தயாராக இல்லை. இறைவன் கூட அழகை ஆட்கொள்ளுமாறு முதன்மைப்படுத்துவது ஆகாதென விளம்பியே பிறந்துவாராய். ஏனையவர்கள் பார்வையால் அலையும்படியாக எவருமே நடந்து கொள்ளாதபடி ஆணையிட்டுப் பிறந்துவாராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானில் தென்பட்ட இராட்சதக் கணவாய்



டோக்கியோ,டிசெ.30

புராணக் கதைகளில் காணப்படும் இராட்சத உயிரினங்கள் போன்றதொன்று ஜப்பானியக் கடலில் தென்பட்டுள்ளது. இது அரியவகை இராட்சதக் கணவாய் என்று கடலியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

டொயோமோ வளைகுடா துறைமுகத்தில் மீன்பிடிப் படகுகளுக்கு அருகாக வந்து அது வெளிப்படையாகத் தென்பட்டது என்று நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். நீர் மூழ்கி வீரர் அதனைப் பின் தொடர்ந்து சென்று காணொலி கருவி மூலம் படம் எடுத்தார்.

சிவப்பு, வெள்ளை நிறத்தில் இராட்சத அளவில் அந்தக் கணவாய் காணப்பட்டது. பயத்தைவிட, ஆர்வம் பெரியளவில் மேலோங்கி நின்றதால் கமராவுடன் கடலுக்குள் பாய்ந்து விட்டேன். அதனை நெருங்கிச் சென்று பார்த்தேன். அது காயங்களுக்குள்ளாகி இருக்கவில்லை. பார்ப்பதற்கு அற்புதமாக இருந்தது. கறுப்பு மையைக் கக்கியது. தனது பரிசைக் கொம்புகளால் என்னைச் சுற்றிக் கொள்ள எத்தனித்தது. நான் அதனைச் சமுத்திரத்தை நோக்கி வழிநடத்தினேன். அது காணப்பட்ட இடத்திலிருந்து சில நுறு மீற்றர் தூரம்வரை சேர்ந்து நீந்தினோம். பின்பு ஆழ்கடலினுள் சென்று மறைந்து விட்டது எனத் தெரிவித்தார் கணவாயுடன் சேர்ந்து நீந்திய அகினோபு கிமுரா. நீரில் மூழ்கத் தேவையான உபகரணங்களை விற்கும் கடையை துறைமுகத்தில் நடத்தி வருகிறார் அவர்.

இப்படிப்பட்ட பெரிய கணவாய்கள் இந்தப் பகுதியில் புதியவை அல்ல என்கிறார் யூகி இசூசி. கடல் சார் அரும்பொருள் காட்சியகத்தின் பொறுப்பாளர் அவர். கடந்த பருவத்தின் போது 16 இத்தகைய பெரிய கணவாய்கள் மீன்பிடி வலைகளில் மாட்டியதாக அறிக்கையிடப்பட்டிருந்தது என்கிறார் அவர். இந்தப் பருவத்தில் அறியப்பட்ட முதலாவது கணவாய் இதுவே என்றும் அவர் தெரிவித்தார். நவம்பர் முதல் மார்ச் வரையான காலப் பகுதியை அவர்கள் பருவகாலம் என்கின்றனர்.

ஆனால் இது மிகவும் அரிதாகவே நடக்கும். அதிலும் படகுகளுக்கு அருகில் அவற்றைக் காண்பது மிக மிக அரிது. ஏனெனில் அவை ஆழ்கடல் வாசிகள். இந்தப் பருவத்தில் மேலும் சிலவற்றை நாம் பார்க்க முடியும் என்று மேலும் தெரிவித்தார் இசூசி.

டொயாமா துறையில் காணப்பட்ட கணவாய் 3.7 மீற்றர் அளவுக்குப் பெரியது. இளம் கணவாயாக இருக்கும். இந்த வகையான கணவாய்கள் 13 மீற்றர் (43அடி) நீளம்வரை வளரக் கூடியவை. ஆழ்கடலிலேயே வசிப்பவை. இந்த இளம் கணவாய் ஏன் துறைமுகப் பகுதிக்கு வந்தது என்பது தெளிவில்லை. (உ-ரி4)

## மோடி, ஷெரீப்புக்கு ஒபாமா அழைப்பு.

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு மார்ச் 31 மற்றும் ஏப்ரல் முதலாம் திகதி நடக்க உள்ள அணு சக்தி உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள வருமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் ஆகியோருக்கு அழைப்பு விடுத்துள்ளார் அதிபர் பராக் ஒபாமா.

இதுகுறித்த அதிகார பூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாகது 'எக்ஸ்பிரஸ் டிரிப்யூன்' தெரிவித்துள்ளது. இந்த நிகழ்வின்போது இந்தியா - பாகிஸ்தான் இடையேயான இருதரப்பு உறவுகளை மேம்படுத்த ஒபாமா திட்டமிடப்பட்டுள்ளார்என்றும் கூறப்படுகிறது. (உ)


## 3 குண்டு வெடிப்புகளில் சிரியாவில் 14 பேர் சாவு

சிரியாவில் அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதியில் திங்கட்கிழமை நிகழ்த்தப்பட்ட குண்டு வெடிப்புகளில் 14 பேர் உயிரிழுந்தனர் 132 பேர் காயமடைந்தனர்.

இது குறித்து அந்த நாட்டு அரசுத் தொலைக் காட்சி கூறியதாவது: ஹோம்ஸ் மாகாணம், அல்-ஜாஹ்ரா நகரின் மூன்று இடங்களில் குண்டு வெடிப்புகள் நிகழ்ந்துள்ளன.

இரு இடங்களில் கார் வெடிகுண்டுகள் மூலமும், ஓரிடத்தில் மனித வெடிகுண்டு மூலமும் தாக்குதல்கள்நிகழ்த்தப்பட்டன. இந்தத் தாக்குதல்களில் 14 பேர் உயிரிழந்தனர் 132 பேர் காயமடைந்தனர்.

குண்டு வெடிப்புகளில் 32 பேர் உயிரிழந்தனர் என்று சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு கூறியுள்ளது. (உ)



# இருவேறு தாக்குதல்களி நைஜீரியாவில் 80 பேர் சா

கானோ, டிசெ. 30

நைஜீரிய நகரங்களான மைடுகுரி, மடகலி ஆகிய நகரங்களில் இடம்பெற்ற தாக்குதல்களில் 80 பேர் உயிரிழந்தனர். மேலும் 114 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் போகோஹறம் அமைப்பினரால் நடத்தப்பட்டிருக்கலாம் என நைஜீரிய அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். போகோஹறம் அமைப்பு முறியடிக்கப்பட்டுவிட்டது என்றும் இனிமேல் அவர்களால் தாக்குதல்கள் நடத்த முடியாது என்றும் நைஜீரிய அதிபர் அறிவித்த சில தினங்களில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

திங்கட்கிழமை காலை இடம்பெற்ற இந்தத் தாக்குதல்களில் 3 பெண் தற்கொலையாளிகள் சன நடமாட்டம் மிக்க சந்தை ஒன்றிலும், சோதனைச் சாவடியிலும் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றனர்.

மைடுகுரி நகரினுள் ஞாயிற்றுக்கிழமை மாலை நைஜீரிய இராணுவத்துக்கும் போகோஹறம் ஆயுததாரிகளுக்கும் இடையில் சண்டை நடந்தது. நகருக்குள்

நுழைவதற்கு ஆயுததாரிக
குழு முயன்றதைக் கண்ட இர
னர் தாக்குதல் நடத்தினர் எ
மணி நேரம் நடந்த இந்தச் சம
குறைந்தது 30 பேர் உயிரி
மேலும் 91 பேர் காயமடைந்
றும் தேசிய அவசர முகாமை
காரி தெரிவித்தார்.

மறுநாள் திங்கட்கிழமை இர
னைச் சாவடி நோக்கி வந்
குண்டை வெடிக்க வைத்துத்
இதில் ஒருவர் உயிரிழந்த
டைந்தனர்.

டவுன் என்ற இடத்தில் மசூ
குண்டு ஒன்று வெடிக்க வைக்
பேர் உயிரிழந்தனர் என்றும்
அதிகாரி மொகம்மட் கனார்
போகோஹறம் அமைப்பி

# குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் சீனாவில் நிறைவேற்றம்

சீனாவில் முதன்முறையாக, குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தொடர் கோரிக்கைகளுக்குப் பிறகு இச்சட்டம் நிறைவேற்றப்பட்டாலும், பாதிக்கப்பட்டவர்களை இச்சட்டம் முழுமையாக பாதுகாக்கும்படியாக அமையவில்லை என்று மனித உரிமை அமைப்புகள் குற்றஞ் சாட்டுகின்றன.

தேசிய மக்கள் காங்கிரஸ் என் அழைக்கப்படும் நாடாளுமன்றத்தின் நிலைக்குழு கடந்த ஞாயிற்றுக் கிழமை, குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தை நிறைவேற்றியது.

இதற்கு முன்பு திருமணம், குழந்தைகள் பாதுகாப்பு என தனித்தனியாக விதிமுறைக்ள் இருந்தன. சீனாவில் திருமணமான பெண்களில் நான்கில் ஒருவர் குடும்ப வன்முறைக்கு ஆளாகிறார் என அனைத்து சீன மகளிர் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சட்டவரையறை ஏதுமில்லாததால், பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்தால் அவர்களை மகளிர் கூட்டமைப்புக்கு செல்ல பொலிஸார் அறிவுறுத்தி வந்தனர். பாதிக்கப்பட்டவர் கடுமையாகக் காயப்பட்டிருந்தால் தவிர, இப்பிரச்சினையில் அதிகாரிகள் தலையிடாமல் இருந்தனர்.

20 ஆண்டுகளுக்குமுன்புவரை, உடல் ரீதியாக துன்புறுத் துவது விவாகரத்துக்கான காரணமாக ஏற்கப்படாமல் இருந்தது.

2001ஆம் ஆண்டு திருமணச் சட்டம் இயற்றப்பட்ட பிறகே, குடும்ப வன்முறையை வெளிப்படையாக சட்டம்தடை செய்தது. தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள சட்டம் வரும் மார்ச் மாதம் முதல் நடைமுறைக்கு வரும். குடும்ப உறுப்பினர்களால், அடித்தல், வாய்மொழியாக அச்சுறுத்தல், கட்டுப்படுத்திவைத்திருத்தல், உடல், மன ரீதியாகவோ, ஏனைய வகைகளிலோ தாக்குதல் நடத்தப்பட்டால் அதனைகுடும்பவன்முறையாக இந்தச் சட்டம் கருதுகிறது.

இதன் அடிப்படையில் முறைப்பாடு பெறப்பட்ட உடனே, பொலிஸார் நடவடிக்கை எடுக்க வகை செய்யப் பட்டுள்ளது.

இந்தச் சட்டம் முழுமையாக இல்லை என அதிருப்தியாளர்கள் கூறுகின்றனர். பாலியல் அத்துமீறல், தன்பாலின உறவாளர்களிடையேயான குடும்ப வன்முறை போன்றவற்றை இந்தச் சட்டம் உள்ளடக்கவில்லை என மனித உரிமை அமைப்புகள் தெரிவிக்கின்றன. (உ)

# எபோலாவிலிருந்து மீண்டது கின

கொனாக்ரி, டிசெ.30

ஆபிரிக்க நாடான கினியா 'எபோலா' நோய்த் தாக்கத்தில் இருந்து விடுபட்டுள்ளது என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த உயிர் கொல்லி தொற்று நோயால் கினியா மக்கள் பாதிக்கப்பட்டு 2 வருடங்களின் பின்னர் இந்த அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. இந்த மகிழ்ச்சியான அறிவிப்யை கொண்டாட அந்த நாட்டு மக்கள் வாண வேடிக்கை, இசை நிகழ்வுகளை ஏற்பாடு செய்யவுள்ளனர்.

கினியா நாட்டில் 2 ஆயிரத்து 5 நூறு பேருக்கு மேற்பட்டோர் எபோலாவினால் உயிரிழந்தனர்.

கடந்த நவம்பர் மாதம் சியராலியோனிலிருந்தும், கடந்த செப்ரம்பர் மாதம் லைபீரியாவிலிருந்தும் எபோலா முற்றாக ஒழிக்கபட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் லைபீரியாவில் அதன் பின்னரும் எபோலாத் தொற்றுக்குள்ளானவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு வந்தனர்.

மனிதர்களிடையே பரவும் தொற்றுகள் தொடர்ந்து ஆராயப்பட்டு, கடைசியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட எபோலாவால் பாதிக்கப்பட்ட நோயாளியையும் 2 தடவைகள் பரிசோதித்து பின்பு உலக நிறுவனம் கினியாவிலும் எபோலா ஒழிந்தது என்று அறிவித்துள்ளது.


எபோலா நோய் கினியாவில் பெரும் சமூக, பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தியது. ஐ.நாவின் அறிக்கையின்படி 6 ஆயிரத்து 220 சிறுவர்கள் பெற்றோரில் ஒருவரையோ அல்லது இருவரையோ இழந்


துள்ளனர், நூறுக
பட்ட சுகாதார உ
தர்கள் எபோலாவு
நடவடிக்கையின்
ழந்துள்ளனர், எ
வித்துள்ளது.

அங்கு வாழும் மக்
இன்னமும் எபோல
டன் வாழ்கின்றனர்.
டின் சில சமூகத்தி
தொற்று ஏற்பட்ட
வில்லை அத்துடன்
கத்தைய நாடுகளை
யாவின் அதிகார
ரையும் குற்றஞ்
ளனர்.

நவம்பர் மாதம் ந
தேர்தலில் வெற்றி
போதைய ஜனா
அல்பா கொண்டே
துறைக்கான நி
மடங்கு அதிகரித்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## ...களில் ...ர் சாவு

...ஆயுததாரிகளின் ஒரு ...தக் கண்ட இராணுவத்தி... நடத்தினர் என்றும் 2 ...ந்த இந்தச் சண்டையில் ...0 பேர் உயிரிழந்தனர்; ...ர் காயமடைந்தனர் என் ...வசர முகாமைத்துவ அதி...தார்.

...கட்கிழமை இராணுவத்தினரின் சோத... நோக்கி வந்த இளம் பெண் ஒருவர் ...க்க வைத்துத் தாக்குதல் நடத்தினார். ...ர் உயிரிழந்ததுடன் மூவர் காயம...

...இடத்தில் மசூதி ஒன்றுக்கு வெளியே ...வெடிக்க வைக்கப்பட்டதில் மேலும் 20 ...தனர் என்றும் அவசர முகாமைத்துவ ...கம்மட் கனார் தெரிவித்தார்.

...ம் அமைப்பினர் மீது பயத்தை ஏற்படுத்துவதற்காக அவர்களால் இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மடகலி நகரில் 2 தற்கொலைக் குண்டுதாரிகள் தாக்குதல் நடத்தினர். இதிலும் 30 பேர் உயிரிழந்தனர், 16 பேர் காயமடைந்தனர். இரட்டைத் தாக்குதல் குறித்து உறுதி செய்யப்பட்டாலும், மேலதிக தகவல்கள் வெயியாகவில்லை. 2014ஆம் ஆண்டு போகோஹறம் அமைப்பினர் குறித்த நகரைக் கைபற்றினர். (உ-ரி4)

## அகதிச் சிறுவர்களின் கல்விக்காக ஜேர்மனியில் 8,500 ஆசிரியர்கள்

பெர்லின், டிசெ.30

ஜேர்மனியில் வாழும் அகதிச் சிறுவர்களுக்கு கற்பிப்பதற்காக 8 ஆயிரத்து 500 ஆசிரியர்களை அந்த நாடு பணியில் அமர்த்தியுள்ளது என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

புகலிடம் தேடிவரும் அகதிகளுக்கு தமது மொழியைக் கற்பிப்பதற்கு அந்த ஆசிரியர்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனர். 2015ஆம்ஆண்டு புகலிடம் கோரி வந்த ஒரு லட்சத்து 96 ஆயிரம் அகதிச் சிறுவர்களுக்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலைகளும் கல்வி முகாமைத்துவங்களும் இந்த ஏற்பாட்டால் எந்தச் சவால்களையும் எதிர்கொள்ளவில்லை என ஜேர்மனியக் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார். இந்த விதிவிலக்கான சூழ்நிலையை நாம் ஏற்றுக்கொள்கிறோம். சாதாரணநிலையை அடைய நீண்ட காலம் எடுக்கும் என மேலும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலை மிகவும் சவாலானதொன்று. அகதிச் சிறுவர்களின் வருகையை சமாளிப்போம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு என கல்வி மற்றும் கலாசார அமைச்சு அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போது 28 ஆயிரம் அகதி மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இதுவரையில் அவர்கள் இலட்சிய உணர்வுடன், ஒருங்கிணைந்து செயற்படத் தயாராக உள்ளனர். தற்போது வகுப்பறையில் குறுகிய காலத்தினுள் சிறந்த மாணவர்களாக அவர்கள் திகழ்கின்றனர் எனத் தெரிவித்தார்.

ஐரேப்பாவில் அகதிகளை வரவேற்பதில் ஜேர்மனி மும்மரமாக செயற்பட்டு வருகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தில் பொருளாதார ரீதியில் முதன்மையான நாடான ஜேர்மனி 10 லட்சத்துக்கும் அதிகமான அகதிகளை உள்வாங்கியுள்ளது. (உ-ரி4)

# ரமாடி நகரை மீட்டது ஈராக்கிய ராணுவம்

இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து ஈராக்கின் ரமாடி நகரை மீட்டதாக அந்த நாட்டு இராணுவம் திங்கட்கிழமை அறிவித்தது.

பயங்கரவாதிகளிடமிருந்து ரமாடி நகரம் முற்றிலுமாக மீட்கப்பட்டது- என்று இராணுவ படைப் பிரிவுத் தளபதி யாஹா ரசூல், அரசுத் தொலைக்காட்சியில் தெரிவித்தார்.

அரசு வளாகத்திலிருந்து அனைத்து எதிர்ப்புகளும் அடங்கிவிட்டன. அங்கிருந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் அனைவரும் தப்பிச் சென்றுவிட்டனர். எனினும், அந்த வளாகத்தைச் சுற்றிலும் சாலையோரங்களில் வெடிகுண்டுகள், கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதால் பாதுகாப்புப் படையினர் வளாகத்துக்குள் நுழைவது சிரமமாக இருந்தது என்று பயங்கரவாத தடுப்பு சிறப்புப் படைப்பிரிவின் பேச்சாளர் சாபா அல்-நுமன் தெரிவித்தார்.

ரமாடி நகரை பாதுகாப்புப் படையினர் முற்றிலுமாக மீட்டதற்கு அறிகுறியாக அரசு வளாகத்தில் ஈராக் கொடியை இராணுவம் ஏற்றியது.

ஈராக்கில் ஐ.எஸ். அமைப்பினால் கைப்பற்றப்பட்டிருந்த திக்ரித், பாய்ஜி போன்ற நகரங்களையும் ஷியா படையினரின் உதவியுடன் அந்த நாட்டு இராணுவம் அண்மையில் மீட்டது. எனினும், கடந்த மே மாதம் ஐ.எஸ். அமைப்பினால் கைப்பற்றப்பட்ட, சன்னி பிரிவினர் பெரும்பான்மையாக வசிக்கும் ரமாடி நகரை மீட்பதற்கு இராணுவம் திணறி வந்தது.

பலத்த முன்னேற்பாடுகளுடன் ரமாடி நகரை மீட்பதற்கான தாக்குதல் கடந்த வாரம் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. இராணுவம், பொலிஸார், ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான சன்னி பிரிவுப் படையினர் ஆகியோர் சிறப்புப் படையினருடன் இணைந்து போரிட்டனர். அவர்களுக்குப் பக்கபலமாக அமெரிக்கக் கூட்டுப் படை வான்வழித் தாக்குதலை நடத்தியது.

தொலைதூரத்தில் மறைந்திருந்து துப்பாக்கியால் சுடுதல், தற்கொலைத் தாக்குதல்கள், கண்ணிவெடித் தாக்குதல்கள் மூலம் ஐ.எஸ். அமைப்பினர் கடுமையான எதிர்ப்பைக் காட்டினர்.

ரமாடியின் மையப் பகுதியைப் பாதுகாக்க 400 ஐ.எஸ். படையினர் இருந்தனர் எனவும், அவர்களில் பெரும்பாலானவர்கள் அரசு வளாகத்தைப் பாதுகாத்து வந்தனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் எதிர்ப்புக்களைச் சமாளித்து, நகரில் அரசு தலைமையகம் அமைந்துள்ள ஹாஸ் பகுதியை அரசுப் படைகள் வெள்ளிக்கிழமை அடைந்தன. அங்கு தொடர்ந்து கடுமையான சண்டை இடம்பெற்றது. தற்கொலைத் தாக்குதலிலும் தமது தரப்பில் பலர் கொல்லப் பட்டனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொதுமக்களைக் கேடயமாகப் பயன்படுத்திக் கொண்டு ஐ.எஸ். அமைப்பினர் ரமாடி நகரின் புறப் பகுதிகளுக்குத் தப்பியோடியுள்ளனர் என்றும் அவர்கள் கூறினர். (உ)



## ...து கினியா

...ளனர், நூறுக்கும் மேற் ... சுகாதார உத்தியோகத் ...ள் எபோலாவுக்கு எதிரான ...டிக்கையின்போது உயிரி...துள்ளனர், என்று தெரி...துள்ளது.

...கு வாழும் மக்களில் பலர் ...னமும் எபோலா அச்சத்து... வாழ்கின்றனர். அந்த நாட்... சில சமூகத்தினர் நோய் ...ற்று ஏற்பட்டதை நம்ப...லை அத்துடன் சிலர் மேற் ...தைய நாடுகளையும், கினி...யின் அதிகாரத் தரப்பின...யும் குற்றஞ்சுமத்தியுள்...ர்.

...ம்பர் மாதம் நடைபெற்ற ...தலில் வெற்றியீட்டிய தற் ...தைய ஜனாதிபதியான ...பா கொண்டே சுகாதார ...றக்கான நிதியை இரு...ங்கு அதிகரித்திருக்கிறார். (உ-ரி4)

## டுவிட்டரில் இணைந்தது ஈபிள் தாஜ்மகால் அதற்கு வாழ்த்து

உலக அதிசயங்களில் ஒன்றான ஈபிள் கோபுரம் சமூக இணையத் தளமான டுவிட்டரில் இணைந்துள்ளது. இதற்கு தாஜ் மகால், சுதந்திரதேவி சிலை ஆகியவற்றின் சார்பில் வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'கஸ்டவ் ஈபிள்' என்ற கட்டடக் கலை வல்லுநரால் 126 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட ஈபிள் கோபுரம் சார்பில், @LaTourEiffel என்ற பெயரில் டுவிட்டரில் புதிய பக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

கடந்த 1889ஆம் ஆண்டில் பிறந்த, பிரான்ஸின் பாரீஸ் நகரவாசியான நான், இப்போது டுவிட்டரில் இணைந்துள்ளேன் என லா கிராண்ட் டேம் என்ற புனைப்பெயரால் அழைக்கப்படும் ஈபிள் கோபுரத்தின் முதல் பதிவில் கூறப்பட்டுள்ளது.

இதில் எனது சகோதரியை டுவிட்டருக்கு வரவேற்கிறேன் என அமெரிக்காவின் சுதந்திர தேவி சிலை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபோல இந்தியாவின் தாஜ்மகால், நியூயோர்க்கின் எம்பயர் ஸ்டேட் கட்டடம், உலகப் புகழ்பெற்ற அருங்காட்சியகமான லோவுர் ஆகியவை சார்பிலும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஈபிள் கோபுரம் தொடர்பான செய்திகள், வரலாற்று உண்மைகள் ஆகியவற்றை தெரிவிப்பதற்காக டுவிட்டரில் கணக்கு தொடங்கப்பட்டுள்ளது- என்றனர் அதிகாரிகள்.

1,063 அடி உயரம் கொண்ட இந்த கோபுரத்தைக் காண்பதற்காக ஆண்டு தோறும் உலகம் முழுவதிலுமிருந்து 70 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை பிரான்ஸுக்கு தருகின்றனர். (உ)

## ஒரு மாத மழை ஒரே நாளில் பெய்தது பிரிட்டனில்

### *நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன*

பிரிட்டனின் வடக்குப் பகுதியில் ஒரு மாதத்தில் பெய்ய வேண்டிய மழை ஒரே நாளில் பெய்தது. இதனால் அந்தப் பகுதி வீதிகள் அனைத்தும் நதிகளாக மாறின.

> **"சுமார் 800 ஆண்டுகள் பழமையான யார்க் நகரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப்பகுதிகள் என்பனவும் முழுமையாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன."**

பிரிட்டனின் வடக்குப் பகுதியில் யார்க்சயர், லங்காசயர் மாகாணங்கள் உள்ளன. கடந்த சில நாள்களாக அங்கு கன மழை பெய்து வருகிறது. அங்குள்ள கியூஸ், பாஸ் ஆகிய நதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு நகரங்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன.

சுமார் 800 ஆண்டுகள் பழைமையான யார்க் நகரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகள் என்பனவும் முழுமையாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. நதியோரத்தில் இருந்த கட்டடங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இரு மாகாணங்களிலும் சுமார் 350க்கும் மேற்பட்ட நகரங்கள், கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதாக அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆயிரக் கணக்கானோர் வீடுகளை விட்டு வெளியேறி உள்ளனர். மீட்புப் பணியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

சில பகுதிகளில் ஒரு மாதத்தில் பெய்ய வேண்டிய மழை கடந்த சனிக்கிழமை ஒரேநாளில் பெய்துள்ளது, இதுவே வெள்ளப் பெருக்குக்கு காரணம் என்று பிரிட்டன் வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கனமழையால் யார்க்ஸயர், லங்காஸயர் மாகாணங்களில் முக்கிய சாலைகள் நதிகளாக காட்சியளிக்கின்றன. இராணுவ வீரர்கள் படகுகளில் வீடு வீடாகச் சென்று வெள்ளத்தில் சிக்கித் தவிக்கும் பொதுமக்களை மீட்டு வருகின்றனர்.

வீதிகள், தொடருந்துப் போக்குவரத்து என்பவை முற்றிலுமாக முடங்கியுள்ளன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் வடக்கு பிரிட்டனில் இயல்பு வாழ்க்கை முழுவதுமாகத் தடைப்பட்டுள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல் பேசும் கவிதைக்காரன்



சி.ப. வேந்தன்

கிறுக்குக் கவிதைகள், சாரமற்ற கதைகள், குப்பைதனமான தன்னிலை விளக்கக் கட்டுரைகள், புரிதலற்ற பதிவிடல்கள் என (எல்லாம் அல்ல) பலர் தான்தோன்றித்தனமாக சமூக வலைத்தளங்களில் எழுதித்தள்ளிக்கொண்டிருக்கும்போது, இலக்கியத்துறையில் சத்தமில்லாமல் கவிதை வெளிகளில் தனது நான்கு தொகுப்புக்களை வெளியிட்டிருக்கிறார் வளர்ந்துவரும் இளம் படைப்பாளி முல்லைத்திவ்யன்.

எனது கவிதையின் பாடுபொருள் முழுவதும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியலைப் பேசுவனவாகவும், தாய்மொழி, மக்கள் விடுதலை, தாய்மண் என்பவைகள் சார்ந்துமே படைக்கப்பட்டிருக்கிறது. இது என் உணர்வு சார்ந்தும் என்அனுபவம் சார்ந்துமே நிகழ்கிறது. ஒரு வகையில் இது எனக்கு ஆத்ம திருப்தியை அளிக்கிறது எனக்கூறும் இவரை போரும் அது தந்துவிட்டுப்போன காயங்களின் ரணங்களும் நிறையவே வேதனைப்படுத்துகிறது.

இலக்கியத்துறையில் உங்களுடைய பின்னணி என்ன எனக்கேட்டதற்கு.. 'என்னுடைய அப்பா ஒரு எழுத்தாளர். நல்ல புலமையாளர். அவரிடம் தான் நான் இலக்கியம் கற்றேன். அவர் எப்போதுமே என்னுடன் இலக்கியம் சார்ந்துதான் உரையாடுவார். நல்ல நல்ல நூல்களை எனக்கு அறிமுகப்படுத்தினார். இலக்கியத்துறை சார்ந்த அனுபவங்களைக் கூறுவார். அதுவே நாளடைவில் இலக்கித் துறையில் என்னை இயங்கவைத்தது எனலாம் என்கிறார்.

'நல்லதோர் கனவும் அந்தரிப்போரும்' எனும் இவரது முதலாவது கவிதைத்தொகுப்பு 2011ஆம் ஆண்டு வெளிவந்தது. இதனைத்தொடர்ந்து 2012இல் 'கவியின் ஏக்கம்' 2013ல் 'அம்மா காத்திருக்கக்கூடும்' 2014இல் 'அக்காவுக்கு எழுதிய கடிதம்' என இதுவரை நான்கு கவிதைத்தொகுப்புகள் வெளிவந்திருக்கின்றன. தற்போது இவரது முதலாவது சிறுகதைத்தொகுப்பான 'தாய்நிலம்' வெளிவரக்காத்திருக்கிறது.

ஒரு தொகுப்பு வெளிவருவதே கடினமான காரியமாக இருக்கும்போதுஎப்படிஉங்களால்இதனைச்செயற்படுத்த முடிகிறது என்றதற்கு பெருமூச்செறிந்தவாறே 'ஓம் என்னைப்பொறுத்தவரைக்கும் இது மிகப்பெரிய சாதனை எண்டுதான் சொல்லுவன். வாசிப்புப் பழக்கம் என்பதே மிக மிக குறைந்துவரும் இந்த காலத்தில, ஒரு புத்தகம் வெளியிடுவதென்பது குதிரைக்கொம்பாகத்தான் இருக்கிறது. வங்கிக்கடன் பெற்றே வெளியிட்டேன். இது இலாபம் கருதியோ, தொழில் முறை கருதியோ செய்யும் தொழிலல்ல. பெரிய பெரிய எழுத்தாளர்களுக்கு அது கைவரப்பெற்றாலும் என்னைப்போன்ற இளம் படைப்பாளிகளுக்கு இது பெரிய சவாலான விடயம். என்னுடைய ஆர்வத்தினாலும், திருப்திக்காகவும், சமூகத்துக்கு என்னாலான ஏதாவதொன்றை செய்யவேண்டுமென்ற அவாவினாலுமே இன்று வரைக்கும் சாத்தியப்பட்டிருக்கு என்று சொல்லலாம் என்பவரது பேச்சில், அவர் கடந்து வந்துகொண்டிருக்கும் இலக்கிப்பயணத்தின் வலிகள் தெரிகின்றன.

பரிதவிப்பு எனும் கவிதையில் 'அடைகாத்த முட்டைகளை காணவில்லை என சப்திக்கிறதா அல்லது இருப்பிடமே தொலைந்து எரிந்துபோன மரத்தினை நினைத்து அழுகிறதா' என்ற வரிகளுக்கூடாக ஒரு இனத்தின் இழப்பைப் பற்றிப் பேசியிருக்கிறீர்கள். இது உங்கள் அனுபவ வரிகள் எனக்கொள்ளலாமா? என்றதற்கு 'இதில் மறுத்துப்பேச எதுவுமே இல்லை. எனது கவிதைகள் எல்லாமே எனது வலிகள்தான். இந்தத் தேசத்தின் ஒவ்வொரு அசைவையும் நான் அனுபவித்து கடந்து வந்துகொண்டிருக்கிறேன். இவைகள் வெறும் வார்த்தைகள் அல்ல; வலிகள். படைப்பாளன் என்பவன் காலம் சார்ந்து இயங்க வேண்டியவன். என்னுடைய காலம் போர்க்காலம். அதனால்தான் எனது படைப்புக்கள் எங்குமே போர்ச்சத்தமும், குருதிநெடிலும், அடித்துக்கொண்டிருக்கிறது என்ற வரிடம்,

> “மறுத்துப்பேச எதுவுமே இல்லை எனது கவி தைகள் எல்லாமே எனது வலிகள்தான் இந்த தேசத்தின் ஒவ்வொரு அசைவையும் நான் அனுபவித்து கடந்து வந்துகொண்டிருக்கிறேன்.”

இப்போது நிறையப்பேர் வெறும் கோர்ப்பு வார்த்தைகளைப் போட்டுவிட்டுக் கவிதை எனக் கூறித்திரிகிறார்கள். புதுக்கவிதை இப்படித்தான் இருக்குமென்று சொல்கிறார்கள். உங்கள் பார்வையில் இன்றைய கவிதை வரவுகள் எப்படி இருக்கின்றன எனும் கேள்விக்கு (சிறிது யோசித்துவிட்டு) நிறையப் படைப்புகள் வெளிவருவதென்பது ஒரு பக்கம் சந்தோசமாக இருந்தாலும், அவை காத்திர மாக வெளிவர வேண்டுமென்பதில் மிகவும் அக்கறையோடும் இருக்கவேண்டியிருக்கிறது. எளிய சொற்களைப் போட்டு எல்லோருக்கும் சட்டென்று புரியக்கூடிய விதத்தில் அழகியலோடு ஒரு விடயத்தை புதுக்கவிதை சொல்ல வேண்டும். புதுக்கவிதைக்கென்று வரைவிலக்கணம் கூறுவது கடினம். அழகியல் இருந்தாலே போதுமென்று நினைக்கிறேன், என்கிறார் முல்லைத்திவ்யன்.


உங்களைப்போன்றே திறமைகள் இருந்தும் எந்தவித ஏணியுமின்றி ஏதாவது ஒரு துறையில் தம்மை அடையாளப்படுத்தக் காத்துக்கொண்டிருக்கும் இளம் படைப்பாளிகளுக்கு நீங்கள் என்ன சொல்வீர்கள் எனக் கேட்டதற்கு; உற்சாகமாக,


'வாய்ப்புக்கள் என்பது தானாக வராது. நாங்கள்தான் உருவாக்க வேண்டும். முதலில் உங்களால் என்ன முடியும் என்பதை உலகுக்குக் காட்டுங்கள். அடுத்து, உங்கள் பயணம் தானாகக் கைவரும். என்னை ஓர் எழுத்தாளனாக அங்கீகரித்தது பத்திரிகைகளே. உதயன், வலம்புரி, தினக்குரல், சுடர்ஒளி, மித்திரன், தொடுவானம் என பல பத்திரிகைகள் தான் எனக்கு முதலில் அறிமுகம் கொடுத்தன. அதன் பின்னரே என்னாலும் முடியும் என்றதன்னம்பிக்கை வந்தது. ஆகவே சரியோ பிழையோ, முதலில் செயலைச் செய்யத் தொடங்குங்கள் எனும்போது அவரது வார்த்தைகளில் அனுபவத்தின் கனம் தெரிந்தது.

உங்களுடையபொலிகைமக்கள்முன்னேற்றக் கழகம் என்ற அமைப்புப் பற்றிச் சொல்லுங்கள் என்றதற்கு 'ஓம், வறுமையால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி நடவடிக்கைக்கு உதவுதல், போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுதல், தரிசு நிலங்களில் மரங்களை நடுதல் எனும் சின்னச்சின்ன வேலைகளை செய்து வருகிறோம்' என்றார்.

ஒரு படைப்பாளியாகவும், சமூக அக்கறையுள்ள சேவகனாகவும் தன்னை அடையாளப்படுத்தியிருக்கும் அந்த இளைஞன், அடுத்த இலக்கியத் தலைமுறையின் ஆரோக்கியத்தின் அடையாளமாகத் தெரிவதை மறுக்க முடியாது.









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறப்பாக இடம்பெற்ற நாவலர் விழா





தமிழினியன்

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் கரிகணன் அச்சக நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்திய நாவலர் விழா கடந்த 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவரும், யாழ்ப்பாணத் தமிழ்சங்கத்தின் ஆட்சிக் குழு உறுப்பினருமான பேரசிரியர் மா.வேதநாதன் தலைமையில் இடம் பெற்றது.

கரிகணன் அச்சக அதிபரின் துணைவியார் திருமதி யாழினி ராஜ்குமாரின் மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. தமிழ்தெய்வவணக்கம் மற்றும் நாவலர் வாழ்த்தை பருத்தித்துறை மக்கள் வங்கி உத்தியோகத்தர் சசீவனும், வரவேற்புரையை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் ந.ஜங்கரனும், தலைமையுரையை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவரும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினருமான பேரசிரியர் மா.வேதநாதனும் வழங்கினார். தொடக்கவுரையை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் தி.வேல்நம்பி ஆற்றினார். 'நாவலர் கனவு' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், யாழ்.பல்கலைக் கழகத்தின் சமூகவியல் துறை தலைவருமான நா.சண்முகலிங்கன் சிறப்புரையாற்றினார்

சிறப்பு நிகழ்வாக யாழ்ப்பாணத் தமிழ்சங்கத்தின் உப தலைவரும்; சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் 'நாவலர் வழியில் நாம்நடக்க பெரிதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியது' என்னும் தலைப்பில் கருத்தாடற் களம் இடம் பெற்றது. இதில் 'ஆன்மிகப்பணியே' என்னும் தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் கலாசார விரிவுரையாளர் கு.பாலசண்முகனும், 'கல்விப்பணியே' என்னும் தலைப்பில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஆசிரியர் மார்க்கண்டுவும், சமூகப்பணியே என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைகழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் சி.ரமணராஜவும். அரசியல் பணியே என்னும் தலைப்பில் உரும்பிராய் இந்துக்கல்லூரி ஆசிரியர் செல்வமனோகரனும் தமது வாதங்களை முன்வைத்தனர். இதனைத் தொடர்ந்து சிறுப்பிட்டியூர் கலைமாமணி க.சத்தியதாசன் குழுவினர் வழங்கும் காலத்தை வென்ற காவலன் என்னும் வில்லிசை நிகழ்வு இடம்பெற்றது. கு.பாலசண்முகனின் நன்றியுரையுடன் விழா இனிதே முடிவுற்றது.



# கவிதை நூல் வெளியீடு

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினரால் கவிஞர் செல்வி நந்தாவின் (நந்தீஸ்வரி துரைராசாவின்) 'நிலவே நீ சொல்' என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் வவுனியா சுத்தானந்த இளைஞர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வவுனியா பிரதேச செயலர் கா.உதயராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தெற்கு பிரதேச செயலர் இ.ஆனந், வவுனியா செயலக கணக்காளர் ஜெயபாஸ்கரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. தமிழ்மொழி வாழ்த்தை கிருத்திகாவும், வரவேற்புரையை வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் பொருளாளர் கலைச் சுடர் த.பிரதாபும், வாழ்த்துரையை வவுனியா தெற்கு வலயக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி நிறைமதியும், தலைமையுரையை வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கனும் வழங்கியதுடன்– நூலின் அறிமுக உரையை, வெளியீட்டு உரையை, வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் செயலாளரும், யாழ்.பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழிக் கற்பித்தல் இணைப்பாளரும், மொழிப் பெயர்ப்பு கற்கைகள் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசனும், நயப்புரையை, எழுத்தாளர் சமரபாகு சி உதயகுமார், வவுனியா மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் தமிழ் இனியன், எஸ்.என்.வாசனும் –விமர்சன உரையை வவுனியா பாவற்குளம் கணேஸ் வர மகா வித்தியாலய ஆசிரியர் வித்தியாரத்னா சி.வரதராஜனும் வழங்கினர். இதனைத் தொடர்ந்து நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. 'நிலவே நீ சொல்' என்னும் கவிதை நூலின் முதலாவது பிரதியை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வவுனியா பிரதேச செயலர் கா.உதயராஜாவிடமிருந்து கலாபூசணம் அருட்கலைவாரிதி சிற்பி சிரோமணி சண்முக வடிவேல் பெற்றுக்கொண்டார். ஏற்புரையை, நன்றியுரையை நூலாசிரியை நந்தீஸ்வரி துரைராசா ஆற்றினார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழில் நாடக வளர்ச்சி

# அன்றும் இன்றும்!



தேவி பரமலிங்கம்

சிறுகதைப் படைப்புத் தமிழுக்குப் புதியதா? புதுக்கவிதை தமிழ் இலக்கிய அணிக்கு நல்லதா? இந்தியாதிக் கேள்விகளால் எழுந்த பிரச்சினைகளை அந்தந்தக் கட்டுரைகளில் வாசித்துப் புரிந்து கொண்டுள்ள வாசகர் மத்தியில், அடுத்து வைக்கப்படும் இன்னொரு கேள்வி தமிழில் நாடகம் வளர்ந்துள்ளதா என்பதே!

இந்தக் கேள்விக்கு உரிய விவரங்களைப் பார்க்க முன்பாக இத்தகைய கேள்விகளால் ஏற்படும் பயன்பாடு குறித்துச் சிந்திப்பது நன்றல்லவா? கிரேக்க ஞானி சோக் கிரட்டீசை கிரேக்கம் மட்டும் அல்ல, உலகம் முழுவதுமே அறியும். அவர் தம்மை உலகுக்கு தெரிய வைக்கும் அளவுக்கு பெரும் புலவருமல்லர்; நாடக ஆசிரியரு மல்லர்; நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டவரும் அல்லர்.

அவர் மகத்தான ஒன்றைச் செய்ததுண்டு! அதுவே கேள்விகள் பலவற்றை படிகளைப் போன்று அடுக்கினார். அந்தக் கேள்விகளில் மறைந்து இருந்த உண்மைகளை தேடிப் புரிந்து கொள்ள வைத்தது அவரது கேள்விகளின் பயன். கேள்விகள் பலவாறு எழுவதும், அவற்றுக்குரிய விடைகளை அலசி ஆராய்வதும் மனித சமுதாயத்துக்கு பயனுள்ள ஒன்றே! இந்தச் சந்தர்ப்பத்தில் அத்தகு கட்டுரை பலவற்றை வாசிக்கக் கிடைத்தமை வரப் பிரசாதமென்றும் கொள்ள வேண்டும்.

**நாட்டுக்கூத்து நாடகங்கள்!**

தமிழில் ஆரம்பக் காலங்களில் எழுந்த நாடகங்கள் வசனநடை குறைவாகவும் முழுக்க முழுக்கப் பாடல்கள் மூலம் கருத்துக்களை வெளியிடுவன ஆகவும்தான் இருந்திருக்கின்றன. அவற்றையே வட மோடி, தென்மோடி எனக் குறிப்பிட்டனர். இன்னொரு சாரார் நாட்டுக்கூத்து என்பவற்றை வழங்கியதும் உண்டு.

நாட்டுக் கூத்துகளில் தோன்றும் பாத்திரங்கள் நேரடியாகக் கருத்தை வெளியிடாமல் நீண்ட நேரம் பாடல்கள் மூலம் சொல்லவரும் செய்திகளை வெளியிட்டே நடிப்பர். அவர்களது பாணியில் சொல்வதானால் கூத்தாடுவார்கள் எனலாம். பின்பே இடைஇடையே ஓரிரு சிறிய வசனங்களைக் கூறுவர். அதுவும் பாடல் மெட்டிலேயே அமையும்.

அத்தகைய கூத்துக்கள் அவற்றில் கைதேர்ந்த அண்ணாவிமாரால் இயற்றப்பட்டு அவர்களாலேயே நடிகர்களுக்குப் பயிற்றுவிக்கப்பட்டு மேடை ஏற்றப்படுவது அந்தக்கால முறை. பிற்காலங்களில் வந்த ஆண்ணாவிமார் முன்பே இயற்றப்பட்டிருந்த பழைய நாட்டுக் கூத்துக்களையே நடிகர்களைக் கொண்டு நடத்தியும் வந்தனர். இன்றும் சில இடங்களில் மேடை ஏற்றப்பட்டு வரும் நாட்டுக்கூத்துக்கள் பழைய அண்ணாவிமாரால் பாடப்பட்டவையே!

சொந்தக் கற்பனையில் கதையைச் சிருஷ்டித்து கூத்து வகையில் நாடகத்தை ஆக்குவது அந்தக் காலங்களில் மிகக் குறைவாகவே இடம்பெற்றுள்ளது. இன்றும் எமது மத்தியில் ஏட்டுப் பிரதிகளிலுள்ள நாட்டுக்கூத்துப் படிவங்கள் அவற்றுக்குச் சான்றாகத் திகழ்கின்றன. அரச கதைகளையும்அல்லது பிறநாடுகளில் பிரசித்தி பெற்ற கதைகளையுமே நாட்டுக்கூத்துகளாக்கி நடித்தும் வந்துள்ளனர். அவற்றில் சில, சுபத்திரா– ஜெனோவா–, போன்றவை. சொந்தக் கற்பனையில் தோன்றியவை என்றால் கருங்குயில் குன்றத்துத்துக் கொலை, நொண்டி, ஆகிய இன்னும் பல நாடகங்களைக் கூறலாம்.

**உருவத்தில் வளர்ச்சி உண்டு!**

நாட்டுக்கூத்து நாடகங்கள் பாடல் அமைப்பில் இருந்தது மட்டுமல்லாமல் மிக நீண்டவையாகவும் அமைந்தன. முதல்நாள் மாலை ஆரம்பித்தால் மறுநாள் காலை தான் கூத்து நிறைவு பெறும். குறைந்தது எட்டு அல்லது பத்து மணி நேரங்கள் நடிக்கக் கூடியனவாக அண்ணாவிமார் அமைத்துக் கொண்டனர்.

அந்த நாள்களில் பொதுவாக அனைவரும் இவ்விதம் நீண்ட நாடகங்களையே விரும்பினர். இரண்டு மூன்று இரவுகள் தொடர்ந்த கூத்துக்களும் நடிக்கப்பட்டதாய் அறியமுடிகிறது. கிராமத்திலோ அல்லது அண்மித்த நகரத்திலோ நாட்டுக் கூத்துகள் மேடை ஏறினால் பார்க்கச் செல்வோர் பாய், தலையணை,



வெற்றிலை, சுருட்டுப் போன்ற இத்தியாதிப் பொருள்களுடன் சென்றே வசதியாக இடம்பிடித்துக் கொள்வர். அப் படி இருந்து நாடகத்தைப் பார்த்து ரசித் தாற்றான் அவர்களுக்குத்திருப்திப்படும். இன்றைய ரசிகர்களின் நிலைமையே வேறு. அவசர யுகத்தில் பிறந்தவர்களல்லவா? எதையுமே நீண்டதாகவும், பெரிதாகவும் விரும்பும் நோக்கம் கொஞ்சமும் இல்லாதவர்கள். அத்துடன் பாடல்களில் முழு விடயங்களையும் வெளியிடுவதை வெறுப்பவர்கள். பொறுமையாக இருந்து பாடல்களில் இருக்கும் கருத்துக் களைப் புரிந்து கொள்ளமாட்டார்கள்.

சமுதாயத்தில் இவ்விதம் ரசிகத் தன்மையும், நாகரிகமும் மேலெழுந்தபோதே நாட்டுக் கூத்துக்களைக் கைவிட்டு வசன நடைகளில் இலகுவாகப் புரிந்து கொள்ளும் பாங்கில் புதிது புதிதாகப் பிற்காலங்களில் தோன்றிய நவீன நாடகங்களை நாடகாசிரியர் படைத்தனர்.

அவற்றைச் சினிமா போன்று மேடையில் நடித்துக் காண்பிக்க நெறிப்படுத்தியும், இடையிடையே பாடல்களைச் சிறிதாகப் புகுத்தியுமே நாடகங்களில் புதுமையைப் பேண முற்பட்டனர். இந்த உருவ மாற்றம் தமிழ் நாடக வளர்ச்சிக்கு இட்டுச் சென்றது என்பதை முழுதாய் ஒப்புக் கொள்ளாது விடினும், ஓரளவேனும் முன்பிருந்த நிலையில் இருந்து முன்னேறி உள்ளதென்பதை உணர்த்துகிறது.

**வளர்ச்சி தரத்தில் இல்லை!**

இந்த நாடக வளர்ச்சி நாட்டுக் கூத்துக்களை காலத்துக்கு ஏற்றாற்போல்–மூன்று மணி நேரங்களாக சுருக்கி மேடை ஏற்றும் அளவில் மட்டும்தான் மாற்றம் அடைந்துள்ளது. பழைய நாடகங்களின் நீளத்தைக் குறைத்ததாலும், பாடல்களை எடுத்துவிட்டு வசனங்களை அமைத்துப் புதுமையாக நடிகர்களைப் பேச வைத்ததாலும் வளர்ச்சி கண்ட தமிழ் நாடக உலகம் தரத்தில் உயர்ந்தவற்றை உருவாக்கத் தவறியமையே தமிழ் நாடகம் வளரவில்லை என்பதை அப்பட்டம் ஆக்குகிறது.

ஆங்கில மொழி நாடகாசிரியர் சேக்ஸ்பியர் இயற்றிய நாடகங்கள் சர்வதேச அரங்குகளில் இடம்பெற்ற அளவுக்கு கற்பனையில் மட்டுமே எம்மால் முடிவுறும். ஆனாலும், தமிழில் வளர்ந்த அரிச்சந்திரன், கண்டியரசன், மயான காண்டம் போன்ற கூத்துக்கள் பிரசித்திபெற்ற அளவுக் கேனும் பிற்கால நாடகங்கள் பெயர் பெறவில்லை.

ஆயினும் நினைவில் நிற்பது இரத்தக் கண்ணீர், இலங்கைவேந்தன் ஆகிய தமிழக நாடகங்கள் மட்டுமே! இந்தவகை நாடகங்களை நீண்ட வெளிகளுக்கு [illegible] உருவாக்கி அவற்றைத் திரும்பத் திரும்ப மேடை ஏற்றி வந்தால், தமிழ் நாடக உலகம் வளர்ந்திடுமா? வண்ணத் தமிழ்க் காவியங்களைப் படைத்து, தமிழுக்கு இலக்கணம்வகுத்த தமிழினம் நாடகத்துறையின் பின்தங்கி நிற்பது ஏன்?

திறமை வாய்ந்த நாடகாசிரியர்களும், நடிகர்களும் நாடக உலகைக் கைவிட்டதாலேயே இந்த நிலை ஏற்பட்டு இருக்கிறது. விளக்கமாகச் சொன்னால், நாடக உலகில் நிரந்தரமாகத் தங்கி நின்று நல்ல பல நாடகங்களைப் படைக்கவோ, நடிக்கவோ ஒருவரேனும் இல்லை எனலாம். சில நாடகங்களை எழுதி விட்டாலோ, நடித்து விட்டால் நாடக உலகத்துக்கு ஏராளமாக செய்து விட்டதாயும் வளர்ச்சிக்கு உழைத்துள்ளதாகவும் கருதுபவர்களே மிக அதிகம். இந்த நிலையாலே தமிழ் நாடக உலகம் பின்னோக்கிப் போய்க் கொண்டுள்ளது.

> “கூத்துக்களை அவற்றில் கைதேர்ந்த அண்ணாவிகளால் இயற்றப்பட்டு அவர்களாலே நடிகர்களுக்குப் பயிற்றுவிக்கப்பட்டு மேடை ஏற்றப்படுவது அந்தக் காலமுறை.”

**வளராமைக்கு என்ன காரணம்?**

ஏற்கனவே நாடகத்துறையில் சிறிதேனும் பரிச்சயம் இல்லாதவர்களால் முதன் முறையிலே நல்ல நாடகங்களைக் கொண்டுவர முடிவதில்லை. தொடர்ந்தும் நாடக உலகில் நின்று நிலைத்து பல நாடகங்களைப் படைத்துப் பக்குவப்பட்டிருப்பின் அவர்களாலும் நல்ல நாடகங்களைக் கொண்டு வரமுடியும்.

அந்த நிலைக்கு வளர்வதற்கு முன்பே அந்தத் துறையில் இருந்து விலகித் தம்மை வெவ்வேறு துறைகளுக்கு மாற்றிக் கொள்வதால், அந்தத் துறைகளிலும் அவர்களால் பிரகாசிக்க இயலாமல் போகின்றது. இந்தக் காரணங்களாலே தமிழில் நாடகமும், கலைஞர்களும் வளர முடியாமல் பின்தள்ளப்படுகின்றனர்.

ஆகவே தமிழில் நாடகம் வளர்ந்துள்ளதா என்பதை நாடகங்களின் உருமாற்றத்தாலும், எண்ணிக்கைகளாலும் எடை போடாமல் தரம் என்னும் தராசில் இட்டுப் பார்க்கையில் நாடகம், தமிழ் மொழியில் வளரவில்லை என்ற முடிவுக்கே வரலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










## நூல்களின் வெளியீட்டு விழா

மட்டக்களப்பு செ.குணரத்தினம் எழுதிய பூபாலி ( சிறுகதைத் தொகுப்பு ) கடலோரக் கிராமம் (நாவல்) ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா கடந்த 20 ஆம் திகதி மட்டக்களப்பு பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.

"மகுடம்" சஞ்சிகை ஆசிரியர் வி.மைக்கல் கொலின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரி கலந்து கொண்டார்.

நூல்கள் வெளியீட்டு சிறப்புரையை வட கிழக்கு மாகாண முன்னாள் கலாசார பணிப்பாளர் செ.எதிர்மன்னசிங்கம் நிகழ்த்தினார். நூல்களின் பிரதிகளை மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் மா.உதயகுமார், எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய இயக்குநர் ஓ.கே.குணநாதன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். (9)









## வைத்தீசுவரக்குருக்கள் நூற்றாண்டு மலர்


அமரர் கலாநிதி க.வைத்தீசுவரக்குருக்கள் நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய மண்டபத்தில் ஓய்வு நிலை வடமாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

கலைமாடக்கோன் சண்முகம் சிவஞானம் தம்பதியினர் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், மலர் ஆசிரியர் பா.துவாரகன்,பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண சபை முதல்வர் சி.வீ.கே.சிவஞானம் ஆகியோர் இணைந்து நூலை வெளியிட முதற் பிரதியை திருமதி ஈ.எஸ்.பி.நாகரட்ணம் பெற்றுக்கொள்வதையும். கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினரையும் காணலாம். (250)

## இயேசுவின் பிறப்பையும் கலைகளின் சிறப்புக்களையும் வெளிக்காட்டிய ஒளிவிழா





கடந்த 22 ஆம் திகதி வேலணைப் பிரதேச செயலக நலன்புரி சங்கத்தின் நத்தார் தினத்தை முன்னிட்ட ஒளிவிழா மிகவும் சிறப்பான முறையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இயேசுபாலனின் பிறப்பை நாங்கள் எதிர்கொள்ளுகின்றோம். ஆனால் இயேசுவின் பாதையில் நாங்கள் ஒளியாக மாறவேண்டும் எனக் குறிப்பிட்ட வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், சாட்டி பங்குத்தந்தை அருட்திரு ஜெரோம் லம்பேட், உதவிப் பிரதேச செயலர் திருமதி கிருஷாந்தி கமலராஜன் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மெழுகுவர்த்தி ஏந்தி விழா மண்டபத்துக்கு வருகை தந்து இயேசுபாலன் குடிலில் வைத்துப் பிரார்த்தனை செய்தனர். அதையடுத்து இடம்பெற்ற நத்தார் கிறிஸ்மஸ் பாடல்கள், கிறிஸ்துவின் நற்செய்திகளைத் தொடர்ந்து பிரதேச செயலர் தனது தலைமையுரையில் எல்லா மதங்களும் அன்பு அறநெறிகள் குறித்த போதனைகளையே எமக்கு வழங்குகின்றன. சூரியக்கதிர் ஏழு வகையான நிறங்களைக் கொண்டபோதும், அதன் ஒளி ஒரே தன்மையாகவே காணப்படுகின்றது. நம்பிக்கை என்ற ஒளியினூடாக வாழ்க்கையின் சிறப்பை எதிர்கொள்ள இதுபோன்ற விழாக்கள் உதவுகின்றன எனத் தெரிவித்தார்.

அந்தோனியாருக்குப் பின்னர் திருச் சபையால் புனிதராக்கப்பட்டவர் அன்னை திரேசா. அவர் துன்பப்பட்ட மக்களுக்கு ஆறுதலாக விளங்கியவர். ஒருதடவை இந்தியப் பிரதமர் அன்னை திரேசாவைச் சந்தித்து நீங்கள் துன்பப்பட்ட மக்களுக்குச் செய்யும் சேவைகள் மிகப்பெரியவை. இதற்கான மன உறுதியை உங்களுக்குத் தந்தது எது எனக்கேட்டார். அதற்கு, நான் தினமும் ஆறு மணிநேரம் வரை இயேசுநாதரைப் பிரார்த்திக்கின்றேன். அதனால் இந்த அன்புப் பணியைப் புரிய முடிகிறது என்று அன்னை திரேசா குறிப்பிட்டார். இறைவனுடன் வாழும்போது இந்த மகிழ்ச்சிகள் எமக்குக் கிடைக்கின்றன என ஜேரோம் லம்பேட் அடிகள் குறிப்பிட்டார்.

நாங்கள் எவ்வாறு வாழவேண்டும் என்பதை இயேசு கிறிஸ்து நடந்து வந்த பாதையும், அவரது நற்சிந்தனைகளும் நமக்கு எடுத்துக் காட்டியுள்ளன என உதவிப் பிரதேச செயலர் திருமதி கிருஷாந்தி கமலநாதன் தெரிவித்தார். நிகழ்வில் சிறுவர்களின் கிறிஸ்மஸ் பாடல்கள், இயேசு கிறிஸ்துவின் கருத்துக்களை விளக்கும் ஆடல்கள் மனப்பாங்குடன் கூடிய மட்டக்களப்பு வடமோடி நாட்டுக்



கூத்தான 'மன்னிப்பின் மகுடம் கூத்து' என்பவை இயேசுகிறிஸ்துவின் போதனைகளை உள்ளடக்கியதாக அரங்குக்கு மெருகூட்டின. அருகிவரும் நாட்டுக் கூத்தைப் பாதுகாக்கும் வகையில் சாட்டி பங்குச் சிறுவர்கள் இப்பொழுது அதில் ஆர்வம் காட்டுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புலம்பெயர்ந்து வாழும் தெல்லிப்பழையைச் சேர்ந்த ஓர் அன்பர், வேலணைப் பிரதேச செயலகப் பிரிவில் கஷ்டப்பட்ட பிள்ளைகளுக்கென வழங்கிய உதவிகள், சிறுவர்களுக்கான பரிசளிப்புக்கள் என்பவை ஒளிவிழா நிகழ்வின்போது வழங்கப்பட்டன. வேலணைப் பிரதேசசெயலகப் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், பங்கு மக்கள் எனப் பெருமளவானோர் நிகழ்வில் பங்கேற்றனர்.

**லக்ஸ்மன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



## தெரியாத காரியத்தில் ஈடுபடாதே

முன்னொரு காலத்தில் சித்திரன் என்ற தச்சன் ஒருவன் இருந்தான்.அவன் மரவேலைகளை நன்றாகச் செய்வான்.மரங்களை நூல் போட்டு அறுப்பதிலும் மிகுந்த கெட்டிக்காரன்.
ஒரு பணக்காரருக்கு வீடு கட்டுவதற்காக மரங்கள் நிறைய அறுக்க வேண்டியிருந்தது. ஒரு நாள் அந்த மரவேலைகளை மதியம்வரை செய்தான்.
பிறகு சாப்பிடுவதற்காக மரத்தை பிளந்த வரை ஒன்று கூடாதிருக்க,முளையடித்து வைத்துவிட்டு சென்றான். அப்பொழுது,குரங்குகள் சில கூட்டமாக அங்கு வந்தன.
மரக் கட்டைகள் மீது ஏறிய குரங்குகள் ஓடியாடி விளையாடின. வேண்டாத ஓர் இடத்தில் எவரோ இந்த ஆப்பை அடித்திருக்கின்றனர்என்று கூறிக் கொண்டே ஒரு குரங்கு அசைத்து அசைத்து அந்த ஆப்பை பிடுங்கலாயிற்று.
ஆப்பு விடுபட்டதும், பிளவு பட்ட மரம் ஒன்று சேரவே,அதன் வாலும் பின்பகுதியும் பிளவுக்குள் அகப்பட்டு நன்கு நசுக்கப்பட்டது.உடனே அது கீச் கீச் என்று ஓலமிட்டு அப்படியே இறந்து போயிற்று.
சிறுவர்களே! உங்களுக்குத் தெரியாத காரியங்களில் நீங்கள் ஈடுபடவே கூடாது.அப்படி ஈடுபட்டதால் அந்தக் குரங்குக்கு ஏற்பட்ட கெதியை நினைத்துப் பாருங்கள் சிறுவர்களே.எனவே, நீங்க இந்த மாதிரி காரியத்தில் ஈடுபடக்கூடாது.

## நகைச்சுவைத் துணுக்குகள்

துணுக்கு 1:-
கலைக்கூடமொன்றில் தன் ஓவியங்களைக் காட்சிக்கு வைத்திருந்தார் ஓவியன் ஒருவர்.
அந்தக் கலைக்கூடத்தின் உரிமையாளரிடம்,
"இன்று எவராவது என் ஓவியங்களை வாங்குவதில் ஆர்வம் செலுத்தினார்களா?" என்று கேட்டார் ஓவியர்.
"உங்களிடம் தெரிவிப்பதற்கு நல்ல செய்தி ஒன்றும், கெட்ட செய்தி ஒன்றும் உள்ளன"
அப்படியா? முதலில் நல்ல செய்தியைச் சொல்லுங்கள்
"உங்களது ஓவியங்களைப் பார்வையிட்ட ஒருவர், நீங்கள் இறந்த பிறகு இந்த ஓவியங்களுக்கு மதிப்புக் கூடுமா எனக்கேட்டார். ஆம். கூடும் என்று நான் சொன்னவுடன், 15 ஓவியங்களையும் அவரே வாங்கி விட்டார்"



"அப்படியா? மிகவும் நல்லது. சரி! அந்தக் கெட்ட செய்தி?"
"அந்த ஆள் வேறு ஒருவருமல்ல. உங்கள் குடும்ப வைத்தியர்தான்"

துணுக்கு 2 :-
குருவைச் சந்தித்த அறிஞரொருவர், ஞானோதயம் பெறுவது எப்படி என்ற தமது சந்தேகத்தைக் கேட்டார்.
"மழை பெய்யும் போது இரு கைகளையும் உயரத் தூக்கியவாறு நில்லுங்கள்; ஞானோதயம் கிடைக்கும் "என்றார் குரு.
"குருஜி! நீங்கள் சொன்னவாறே நேற்று மழையில் நின்றேன். தண்ணீர் என் கழுத்து வழியாக கீழே இறங்கி ஓடிய போது, நான் ஒரு முட்டாளைப் போல உணர்ந்தேன்" என்றார் அந்த நபர்.
முதல் நாள் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய ஞானோதயம் அது தான், - என்றார் குரு.


## கண்

நமக்குக் கண்கள் முக்கியம்
எதற்கும் அதுவே அவசியம்
கண்ணைக் காப்பது முக்கியம் – அது
உன்னைக் காக்கும் நிச்சயம்!

கண்ணில் லாமல் வாழ்க்கையிலே
கடமை ஆற்றும் செயல் இல்லை!
கண்ணில் உனக்கு ஒளியின்றேல் – உன்
காலம் முழுவதும் வரும்தொல்லை.

கண்ணில் தூசு விழுந்தாலும்
கண்டது கண்ணைக் குத்தினாலும்
கிடைத்த மருந்தை ஊற்றாதே!
கண்ணைக் கெடுத்துக் கொள்ளாதே!

தானத்தில் சிறந்தது கண் தானம்
தவறாமல் செய்யணும் அத்தானம்
காலத்தில் செய்யும் இவ்வுதவி
ஒருவர்க்கு தருமே கண்ணொளி!



## வரலாற்றில் இன்றைய தினம்

1896 - பிலிப்பைன்ஸ் தேசபக்தனும் சீர்திருந்த வாதியுமான 'யோஸ் நிஷால்' ஸ்பானிஷ் துப்பாக்கி வீரர்களால் சுடப்பட்டு பிலிப்பைன்ஸின் மணிலாவில் சாவு.
1903 - சிக்காக்கோ இழாக்குவோஸ் அரங்கில் தீ. 605 பேர் வரை சாவு.
1922 - ஐக்கிய சோஷலிஸ குடியரசான சோவியத் ஒன்றியம் U.S.S.R. அமைக்கப்பட்டது.
1927 - ஆசியாவிலேயே முதல் நிலக்கீழ் சுரங்க போக்கு வரத்துப் பாதை ஜப்பானில் திறந்து வைக்கப்பட்டது.
1943 - போட் பிளேயரில் சுபாஸ் சந்திரபோஸால் இந்திய சுதந்திரக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.
1958 - கௌதமாலா விமானப் படையால் மெக்ஸிக்கன் மீன்பிடிப்படகுகள் பல மூழ்கடிக்கப்பட்டன. மூவர் சாவடைந்ததுடன் கடல் எல்லை மீறல் இடம் பெற்ற தாகத் தெரிவித்து சர்வதேச பதற்றம் ஏற்பட்டது.
1965 - பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியானர் பேர்டினான்ட் மார்க்கோஸ்.
1972 - வட வியட்நாம் மீதான பலத்த குண்டு வீச்சை ஐக்கிய அமெரிக்கா நிறுத்தியது.
1993 - இஸ்ரேலும் - வத்திக்கான் நகரும் இராஜதந்திர உறவை ஸ்தாபித்தன.
1996 - இந்திய அசாம் மாநிலத்தில் போடோ பிரிவினை வாதிகளின் பயணிகள் புகையிரம் மீதான குண்டுத் தாக்குதலில் 26 பேர் சாவு.
1997 - அல்ஜீரியாவில் பயங்கரவாதத்தின் மிக மோசமான சம்பவமாக 4 கிராமங்களில் இடம்பெற்ற 'விலாயா றெலிஷேன் படுகாலையில்' 400 பேர் கொல்லப் பட்டனர்.
1999 - நிபந்தனையுடன் பேச்சு நடத்த பிரபாவுக்கு ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு.
1999 - புங்குடுதீவு இளம் பெண் படுகாலை தொடர்பில் புங்குடுதீவில் மறியல் போராட்டம்.
2004 - ஆர்ஜென்ரீனா றிபப்லிகா குரோமஞன் இரவு விடுதி யில் ஏற்பட்ட தீ விபத்தில் 194 பேர் சாவு.
2006 - இந்தோனேஷியா பயணிகள் கப்பல் எம். வி. செனோபதி நுசந்தாரா புயலில் சிக்கி கடலில் அமிழ்ந்ததால் 400 பேர் சாவு.
2006 - வாகரை நோக்கி விமான ஷெல் தாக்குதல்கள்.
2006 - கடத்தல், காணாமற் போதல் சம்பவங்கள் குடாநாட்டில் அதிகரிப்பு. கடந்த வாரம் மட்டும் 15பேர் பற்றிய தகவல் இல்லை.
2009 - குடா நாட்டில் ஊரடங்குச் சட்டம் முற்றாக நீக்கம்.
2009 - தென்னாசியாவில் இலங்கையிலேயே பத்திரிகை யாளர்களுக்கு அதிகம் பாதிப்பு என இந்த ஆண்டு நிலைமை குறித்து தென்னாசிய ஆணைக்குழு தகவல்.
2011 - தமிழகத்தில் 'தானே' என்கின்ற பெயரிலான சூறாவளி தாக்குதல். 19 பேர் உயிரிழந்தாக தமிழக செய்திகள் தெரிவிப்பு.
2013 - கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் பிரிவினைக்கு முயற்சியென்ன தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது கடமை மட்டுமல்ல என்ர பரம்பரைக்கான கடனும் கூட....

# சொல்கிறார் கூத்தாட்டக் கலைஞர் மீனேஸ்

சி.ப. வேந்தன்





“11 வயசில இருந்தே நான் இந்தக்கலையோட சேர்ந்து இயங் கத் தொடங்கிவிட்டன். அப்பா அவற்றை முன்னைய தலைமுறை எல்லாரும் சேர்ந்து மரம்நட்டுவளர்த்து காய்க்கும் வரைக்கும் இருந்து பாத்திட்டு போட்டினம்.”

“நான் இல்லாமற் போனாலும் எங்கட பரம்பரைக்கலை அழியக்கூடாது. இதை எப்பிடியாவது தொடர்ந்து செய்ய வேணும்' என்று அப்பா சொல்லிப் போட்டுப் போனதுக்காக, சரியான கஷ்டத்தின் மத்தியிலும் இந்தக் கலையை கொண்டு நடத்துறம். களத்தில ஆடும் போது பார்ப்பவர்களின் கண்களில் தோன்றும் அந்தச் சந்தோசம் ஒண்டு மட்டுமே எங்களுக்கு மிச்சம். வேற ஒண்டுமே இதில கிடைக்காது” என தனது ஆழ்மன வேதனைகளைக் கொட்டுகிறார் கூத்தாட்டக் கலைஞர் மினேஸ்.

ஒரு மதிய வேளை தனது சிறிய பலசரக்குக் கடையில் வியாபாரம் செய்துகொண்டிருந்தவரை உதயன் நாளிதழுக்காக சந்தித்தபோது மிகுந்த உற்சாகத்துடனும் வேதனையுடனும் பேசத்தொடங்கினார் அவர்.

இது பரம்பரை பரம்பரையா நாங்கள் செய்து கொண்டுவாற கலை. விநாயகர், வீமர், கந்தர், நாகர், கந்தையா, நாகப்பு, மீனேஸ் எண்டு இப்ப நான் ஏழாவது தலைமுறை. இப்பவே இந்தக் கலைகளுக்கு பெரியளவில வரவேற்பு இல்லாம கிடக்கு. அந்தக் காலத்தில கூத்தாடிகள் எண்டு கதைக்கவே மாட்டாத ஒரு நெருக்கடிகளுக்கு மத்தியிலையும் இத கட்டிக்காப்பாத்திக் கொண்டு வந்த எங்கட தலைமுறையை நினைக்க பெருமையாய்க் கிடக்கு. இப்ப பாடத்திட்டத்தில இதுகள சேத்ததால ஓரளவு இந்தக்கலைகளுக்கான மதிப்பும் வரவேற்பும் கிடைச்சிருக்கு. ஆனாலும் ஒப்பிட்டுப் பாக்கும்போது எங்கட கலை பின்தங்கி நிக்குது எண்டுறது வேதனை தான். என்றவரிடம், எவ்வளவு காலமா இந்தக்கலையில நீங்க முழு ஈடுபாடு காட்ட ஆரம்பித்தீர்கள் எனக்கேட்டபோது, பரம்பரைக் கலை எண்டதால சின்னவயசில இருந்தே இதில பரிச்சயம் இருந்தாலும் இதை முழுமையா பொறுப்பெடுத்து செய்ய வெளிக்கிட்டது 2012ல்தான். அப்பா இருக்கேக்க தான்போற இடமெல்லாம் என்னையும் கூட்டிக்கொண்டு திரிஞ்சு இந்தக்கலை பற்றிய அறிவையும் நுணுக்கங்களையும் சொல்லித்தந்தார். 11 வயசில இருந்தே நான் இந்தக்கலையோட சேர்ந்து இயங்கத்தொடங்கிவிட்டன். அப்பா அவற்றை முன்னைய தலைமுறை எல்லாரும் சேர்ந்து மரம் நட்டு வளர்த்து காய்க்கும் வரைக்கும் இருந்து பாத்திட்டு போட்டினம். இப்ப நாங்கள் பழத்தை அனுபவிக்கிறம். ஆனா இதை என்ர அடுத்ததலைமுறைக்குகொண்டு போகமுடியுமா? அது எவ்வளவு துூரம் சாத்தியப்படும் எண்டத நினைக்க கவலையாவும் பயமாவும் கிடக்குது, என்ற மீனேஸின் வார்த்தைகளில் பரம்பரைக் கலைஞனின் ஏக்கம் நிறைந்து கிடக்கிறது.

இந்தக்கலையை தொடர்ந்து செய்யும் போது எவ்வாறான சவால்களை எதிர் நோக்கவேண்டியிருக்கிறது? என்றதற்கு, ஒண்டா, ரெண்டா, நிறையச் சவால்கள் நாங்க 5 ஆண் சகோதரர்கள். அதில நாலு பேர் இதைச் செய்து கொண்டுவாறம் ஆனா வெறும் நாலுபேர் மட்டும் இதைச் செய்ய முடியாது இதுக்கு குறைந்தது பத்துப் பேராவது வேணும். அதால வெளியில இருந்தும் வேற ஆக்கள கூட்டிக்கொண்டு போகவேண்டி இருக்கும். அவைகளுக்கு கட்டாயம் ஒரு கொடுப்பனவு குடுக்கவேண்டி வரும். இனி குதிரை, அனுமன், மயில், கரகம் எண்டு பல உருவப் பொம்மைகளை செய்யவேணும். அது கஷ்டமானது மட்டுமில்ல செலவும் அதிகம் வரும். ஒரு ஆட்டத்துக்கு போட்டுவந்தா, சிலநேரம் அந்த பொருள்கள் சேதமாயிடும் அதுக்கான செலவினம், போக்குவரத்து, சாப்பாடு எண்டு பெரிய செலவுகள்தான். பல தடவைகள் எங்கட நாலுபேருக்கான வருமானம் எண்டு எதுவும் இல்லாம, திருப்திக்காகவும் சந்தோ சத்துக்காகவும் மட்டுமே செய்துபோட்டு வரவேண்டி இருக்கும். ஆனா எங்களுக்கும் குடும்பம் எண்டு ஒண்டு இருக்குதல்லோ அதால நாங்க இதில முழுநேரமும் மினக்கெடாம, வேற வேற தொழிலைச் செய்ய வேண்டிக் கிடக்கு. சில நேரம் இந்தக் கலையில உள்ள பிடிப்பால அக்கறையால வேற தொழில்ல சம்பாதிக்கும் காசையும் இதுக்குள்ள போட்டு ஏதோ எங்களால முடிஞ்ச வரைக்கும் இந்தக்கலையை அழியாமக் காப்பாத்திக்கொண்டு வாறம் என்றவர் தொடர்ந்து பேசும் போது,

தென்னிலங்கையைப் பொறுத்தவரைக்கும் இப்பிடியான கிராமியக் கலைகளுக்கு மிகப்பெரிய அளவில மதிப்பும் வரவேற்பும் நிறையக் கிடைக்குது, அங்க கலைஞர்களுக்கு ஓய்வூதியம் கலைகளுக்கான தகுந்த ஊதியம், அரச தொழில் வாய்ப்புக்கள் என்று நிறைய சலுகைகள் கிடைக்குது மற்றது, அங்க இந்தக்கலைகளை பரம்பரைக்காரர் எண்டு மட்டுமில்லாம எல்லாரும் பயிற்சிப்பட்டறைகளில வந்து பழகீனம். அதாலயும் இந்தக் கலைகள் அழியாமக் கிடக்கு எங்களுக்கு சலுகைகள் எதுவும் வேண்டாம் கலைஞர்களுக்கான தகுந்த ஊதியத்தையும் ஆதரவையும் தந்தாலே காணும். என்ன செய்வது வயிற்றுப்பசிக்கு ஒழுங்குபடுத்தாம ஆட்டக்கலையில மினக்கடலாமோ? எனகேள்வியையும் முன் வைக்கிறார் இந்தக் கலைஞர்.

இந்தக்கலையை வளர்க்கிறதுக்கு நீங்கவேறஎன்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறீங்க எனக் கேட்டபோது என்ன செய்யிறது? அழுதாலும் பிள்ளையை அவள் தானே பெறவேணும். அதால கூடிய வரையில நாங்களே (சகோதரர்கள் நால்வரும்) களத்தில இறங்கிச் செய்யிறம். எங்களுக்கும் ஆசை இத பரவலாக எல்லாருக்கும் கற்றுக் கொடுக்க வேணுமெண்டு. அதுக்கான வசதிவாய்ப்புக்கள் வந்தா கட்டாயம் செய்வம். ஏனெண்டா இந்தக் கலையில முறையான படிமுறைகள் கனக்க இருக்கு சும்மா கண்டபடி ஆடமுடியாது இப்ப சிலபேர் குதிரையைப்போட்டுக் கொண்டு 'பைலா' டான்ஸ்செல்லாம் ஆடீனம் இது எவ்வளவு ஆபத்தான விடயம். ஒரு பாடசாலையில நடுவராப்போயிருந்தன் அங்க எங்கட கிராமியக் கலைகளுக்கை பரதநாட்டியக்கலையையும் கலந்து ஏதோ புது வடிவத்தில குழப்பியடிச்சு செய்திருந்தினம். இதைப் பாடசாலை ஆசிரியர்மாரே அந்தப்பிள்ளைகளுக்கு கற்றுக்குடுத்திருக்கினம் எண்டது தான் வேதனை. இத ஆரோக்கியம் எண்டோ, புதிய மாற்றம் எண்டோ ஏற்க முடியாது. பரதநாட்டியம் ஒருதனிதுத்துவமான கலை கிராமியக்லை இன்னொரு ஒரு தனித்துவமான கலை. இவையிரண்டையும் கலந்து செய்வதென்பது இரண்டுகலைகளுக்குமே ஆபத்து. எனவே இதைத் தயவு செய்து செய்யாதீர்கள். உங்களுக்கு கலையில ஆர்வம், விருப்பம் இருந்தா, சரியான முறையான படிமுறைகளில் கற்றுக் கொள்ளுங்கள். அதற்கு என்ன உதவி செய்யவேணுமோ அதைச் செய்ய நாங்கள் காத்திருக்கிறம் என்பவரது கண்களில் நிஜமான கோபம் தெரிகிறது.

கலைஞராக இந்தக்கலைக்காக உங்களுக்கு எப்படியான அங்கீகாரம் கிடைச்சிருக்கு. எனும் கேள்விக்கு கிராமிய கலைக் காவலன் எண்ட விருது கிடைச்சிருக்கு ஆனாலும் இவைகளைவிட நாங்கள் கலையை நிகழ்த்திவிட்டு வெளியில் வரும்போது அந்தரசிகர்களின்கைதட்டலும் அந்த ஒட்டுதலான புன்கையையும் தவிர வேறென்ன அங்கீகாரம் பெரிதாகிவிடப் போகிறது. அதுக்குக் கூட ஆளில்லாம இப்ப சின்னத்திரையும் திரைப்படங்களும் நுழைந்துவிட்டனவே. முந்திமூண்டுநாளாப் போட்ட காத்தவராயன் கூத்து இப்ப முப்பது நிமிசமாயிட்டுது.



நாளடைவில மூண்டு செக்கனாகி இல்லாமலே போயிடும் பாப்பம். ஏதோ இருக்கு மட்டும் ரத்தத்திலேயும் சதையிலேயும் ஊறிப்போன இந்தக் கலையை விடாமல் செய்யவேணும் இது கடமை மட்டுமல்ல என்ர பரம்பரைக்கான கடனும் கூட, என வேதனையோடு பதில ளிக்கிறார் கலைஞர் மீனேஸ்.ஒரு இனத்தின் அடையாளம் என்பது அவ்வினத்தின் கலைகளும் இலக்கியங் களும் தான் என்பதை ஒவ்வாருவரும் புரிந்துகொள்ளும் வரையில் எமக்கான அடையாளங்கள் மெதுமெதுவாக அழிந்து கொண்டுதான் இருக்கும். என்று தனது செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

# சிறுகதை நூல் வெளியீடு



பசுந்திரா சசி, எழுதிய 'பாவு தளிர் தூவு வானம்' சிறுகதைத் தொகுப்பு நூலின் வெளியீட்டு விழா, வவுனியா, செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றபோது, வட மாகாண சபை உறுப்பினர் இ.இந்திர ராசா, தமிழருவி த. சிவகுமாரன் , கவிஞர் மேமன் கவி, பிரதம விருந்தினரான சாகித்திய ரத்னா தெளிவத்தை யோசப் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றினர். நூலாசிரியரின் தந்தையார் பசுபதிக்கு நூலின் முதற்பிரதி வழங்கப்பட்டது. விழாவில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவின் தமிழால் நல்வித்தை உவந்து ஜொலித்த பல்கலாசாரப் பெருவிழா 2015

கே.எஸ்.சிவஞானராஜா

பண்ணும், பரதமும், கல்வியும், தீஞ் சொற் பனுவலும், யாம் எண்ணும் பொழுது எளிதுற எய்த நல்கிய பல் கலாசாரப் பெருவிழா, கடந்த 6 ஆம் திகதி ஞாயிறன்று காலை, கொக்கு வில் இந்துக் கல்லூரியில் கனகச்சிதமாக அரங்கேறியது. வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் மன் மதவருடம் மகிழ்ந்த ஓர் அற்புதத் திரு விழாவாக, இந்தப் பல் கலாசாரப் பெருவிழா முத்திரை பதித்தது என்று துணிந்து கூறலாம். ஆசிரியர்களை வளமாக்கிய திருவிழா இதுவாகும்.

**ஆரம்பம்**

சங்கு வாத்தியம் முழங்க, பாரம்பரிய சம்பிரதாயங்களோடும், சர்வமத பிரார்த் தனையோடும், கலாசாரப் பெருவிழா குறிக்கப்பட்ட நேரத்தைக் காப்பாற்றிய வண்ணம் ஆரம்பமானது. வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரின் தலைமையில், பேராசிரியர் க.சிவ நாதனின் சிறப்பான பிரசன்னமும், இணைப்பாளர் திருமதி பி.செல்வின் இரேனியஸின் வரவேற்பும், பா.சுதா கரின் நிகழ்ச்சித் தொகுப்பும், திருமதி ம.விக்னராஜாவின் நிகழ்ச்சி ஒழுங் கமைப்பும், கொக்குவில் இந்துக் கல் லூரியின் பஞ்சலிங்கம் மண்டபத்தைக் கனதியாக்கிற்று. இந்து, கிறிஸ்தவ, இஸ் லாமிய, பௌத்தம் ஆகிய சமய ஆன் மிக வழிபாட்டு ஆராதனைகள் யாவரை யும் ஒருநிலைப்படுத்தியதெனலாம். இது எமது நாட்டுக்கு வழங்கப்பட்ட செய்தியாகும். ஆரம்பமே நல்லதோர் அனு கூலமாகும். இதுதானே தேவை! ஆம்.

**சேர்மானம்**

கர்நாடக இசையும், சினிமா இசையும் கலந்த ஒரு கலப்பிசை அனைவரையும் கவர்ந்த முதல் நிகழ்வாகக் களை கட்டியது. இராக தாளக் கதம்ப மாலை களைச் சபையோர் தத்தம் கழுத்துக் களை நீட்டித் தாமே போட்டுக் கொண் டனர். சாருகேசி, ஹிந்தோளம், காபி, ரீதிகௌளை, ஹம்சானந்தி, கல்யாணி, ஷண்முகப்பிரியா ஆகிய இராகங் களுக்கு உயிர் கொடுத்து இராக தாள லய சமர்ப்பணம் செய்தமை, சினிமா இசை கூடக் கர்நாடக சங்கீதத்தையே சேர்மானமாகக் கொண்டிருக்கிற முக்கியத்துவத்தை நிலைநாட்டியது.



நல்லதோர் நிகழ்ச்சி. வசந்த முல்லை போலே வந்து அசைந்து ஆடிய புறா சொன்ன செய்திகள், இராத்திரியில் பூத் திருக்கும் தாமரையின் கனவுகள், மறைந் திருந்து பார்க்கும் மர்மம், வினையாலே படும் பாட்டைச் சொல்லவரும்போது விளையாட இது நேரமா என்ற கேள்வியோடு ஒவ்வொரு நிமிடமும் இசையால் மண்டபம் மூழ் கியது. சும்மா சொல்லக்கூடாது. ஒலியமைப்பும், ஒருங்கிசைவும், பின்னணி இசையும்



மெல்லிசையாகி சேர்மானமா கிற்று. இந்த நிகழ்ச்சி இருபது நிமிடங்களுக்கு மேல்நீளாதவண்ணம்அமைந்திருந்தமை பாராட்டுதலுக்குரியது. அவ்வளவு நேரமும் ஆனந்தமே.

> வடக்கு மாகாணக் கல்வித் திணைக் களத்தால் மன் மதவருடம் மகிழ்ந்த ஓர் அற்புதத் திருவிழாவாக, இந்தப் பல் கலாசாரப் பெருவிழா முத்திரை பதித் தது என்று துணிந்து கூறலாம்.

**வாத்தியப் பிருந்தா**

வாத்தியங்களின் முழக்கம் (ORHE STRA) ஒலியமைப்பிலே மிளிர்ந்தது. நான்கு வீணைகள், நான்கு வயலின், தபேலா, புல்லாங்குழல், மிருதங்கம், கெஞ் சிரா, ஓகன் என மேடையை வீணையே ஆட்சி செய்தது. யாழ்ப் பாணத்தில்வீணை யின் தாற்பரியம் வலுவிழந்து நலி வடையும் வேளை யில், இந்த நிகழ்வு வீணையின் மகத் துவத்தை நிலை நிறுத்தியது என்று சொல்வதே சாலப் பொருத்தம். மேலைத் தேய இசையும், நாட்டுப் பாடலும், சபையின் கரகோசங் களைத் தனதாக்கியது. இந்த நிகழ்வுக்கு இந்த அங்கீகாரம் ஒன்றே வரவேற் பையும், வாழ்த்தையும் அளித்தது. தேவை யறிந்த நிகழ்ச்சியிது. நன்று. பத்தொன்பது நிமிடங்களில் பாலித்த நிகழ்வால், நரம் புகள் சிலிர்த்தன. லயம் மனோலயமாயிற்று. பதற்றம் உடம்பில் நிலை ஆயிற்று.

**உரை**

தலைமையுரையும், சிறப்புரையும், வெளியீட்டுரையும், நன்றியுரையும் கணக்காகவும், கணப்பாகவும், ஏற் புடையதாகவும், ஜீரணிக்கத்தக்கதாகவும் அமைந்திருந்தன. மனம் திறந்து பாராட் டலாம். எல்லோரும் படித்தவர்கள் என் பதால், நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, பேச்சுக்களைக் குறைத்துக் கொண்டமை நன்றியோடு குறிப்பிடத் தக்கதாகும்.

"முத்துப் பதித்த நித்திலம் தன்னில் முத்தமிழ் வடித்த கவின் தமிழ்" என்று வடமாகாணத் தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கௌரி முகுந்தன் கவின் தமிழ் மலரை வெளியிட்டு, நல் லதோர் தமிழ் மொழி ஊற்றை மடைதி றந்து பாய வழிகாட்டினார், நல்லதோர் உரை. இலைமறை காயாக உள்ளார். மேலும், 59 நிமிடங்கள் உரைகளாக அமைய, ஆகுதியாக 39 நிமிடங்கள் சேதார மாக அமைய, மிகுதியாகவுள்ள மூன்று மணித்தியாலம் காத்திரமான கலை நிகழ்ச் சிகள் மண்டபத்தை ஆக்கிரமித்தன. சபாஷ்.

**சிங்கள கலாசார நிகழ்ச்சி**

வவுனியா தெற்கு வலயப் பாடசாலை ஆசிரியர்களின் மேற்படி நிகழ்வு தத்துரூபமாகவும், கண்டிய நடன பாரம்பரிய வாய்ப்புக்களாகவும் கண் களைக் கொள்ளை கொண்டன.

**நாட்டார் இசை**

இலங்கையின் கடற்கரைப் பிரதேசப் பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்டு சந்நிதியிலிருந்து ஆரம்பித்து, முல்லைத்தீவு, திருகோணமலை, மட் டக்களப்பு, காலி முகத்திடலில் காதல் ஜோடி களைக் கண்டு பரவசமடைந்து, மாதோட் டத்தில் மகிழ்ந்து, மடுவுக்கும் சென்று வரம் வேண்டிய நாட்டுப் பாடல்களைத் தாட்சாயணி நிதானப்படுத்திய நளினம் இரசிக்கத்தக்கது.

**இஸ்லாமிய கலாசார நிகழ்ச்சி**

நியமம் தவறாத இஸ்லாமியப் பண் பாடுகளை அள்ளித்தந்த இந்த நிகழ்வை, மன்னார் அல் அஸ்கார் முஸ்லிம் மகா வித்தியாலய தேசியப் பாடசாலை ஆசிரியர் கள் விருப்பத்தோடு மனமுவந்து வழங் கியமை இனங்களுக்கிடையிலான நல் லுறவை வளர்த்தெடுத்து வலுச்சேர்க்கும் என்பதில் ஐயம் சற்றேனும் இருக்காது.

**சிகரம்**

கலாசாரப் பெருவிழாவுக்குச் சிகரம் வைத்தால்போல் அமைந்த நிகழ்வாகப் பெருமையும் பேறும் தந்த நிகழ்ச்சி, "தஸாவதாரம்" என்ற நாட்டிய நாடகமாகும். முழுக்க முழுக்க ஆசிரியர்களின் படைப்பாக வடிவமைக்கப்பட்ட இந்த நிகழ்வில் மட் டும் சுமார் தொண்ணூறு ஆசிரிய ஆசிரியைகள் தங்களை அர்ப் பணித்து, மனம் வைத்து, சலிப்பில் லாது, போதிய பயிற்சியோடு, அதைவிட அது அதற்குரிய உடை நடை பாவனை ஆடை அலங் காரங்களோடு, அழகு சொட்ட, நவரசம் ததும்ப, இசை ஆர்ப்பரிக்க, லய ஜதிகள் பிரவாகிக்க, நட்டு வாங்கமும், பாடியோரும் ஒவ்வொரு அவதாரத்துக்கும் அற்புதமாக உயிரூட்டினர். அல்லாமலும், அவதாரங்களை மிகத் துல்லியமா கவும், தூண்டுதலாகவும், லாவண் யமாகவும் பிரகாசிக்கச் செய்த ஆடலரசிகள் சுமார் தொண்ணூறு நடன ஆசிரிய ஆசிரியைகளுக்கும் தனித்தனியாக (Medal) பதக்கம் கொடுக்க வேண்டும். நாம் கடமையாற்றியபோது ஒவ்வொரு ஆசிரியரையும் தட்டிக் கொடுக் கக்கூடிய, அல்லது பாராட்டி யாவது வாழ் விக்க வல்ல இதயங்களைக் கிஞ்சித்தும் யாமறியோம். ஆசிரியர்களின் ஆளுமை யைப் பேறாக்குவதென்பது பாடக் குறிப் பையும், பாடத்திட்டத்தையும் மட்டும் எழுது வதனால் ஜொலிப்பதில்லை. மாறாக அவர்களை அரங்கத்துக்குக் கொண்டு வரவேண்டும். அந்தப் பொறுப்பினாலன்றோ, வடக்கு மாகாணம் இதனைப் பெரிய பொறுப்பாக எடுத்துக் கொண்டது போலும். உடை, உடல் அலங்காரங்களுக்கு மட் டும் பத்து லட்சம் ரூபா மொத்தமாகச் செல வழிக்கப்பட்டிருக்கலாம் என்பது எனது கண்களில் இழையோடியது. அற்புதமான படைப்பு. ஆனந்தமான பிரவாகிப்பு, ஆவலான பரபரப்பு. பாருங்கள் இவ்வளவு கையிருப்பு இருந்தும் நாம் காலத்தை வீணாக்கி விட்டோமே என்று எண்ணத் தோன்றிற்று. அடடா! பத்து அவதாரங்கள்: 1. மச்ச அவதாரம் (மீன்) 2. கூர்ம அவதாரம் (ஆமை) 3. வராக அவதாரம் (பன்றி) 4. நரசிம்ம அவதாரம் 5. வாம னம்(ன்) அவதாரம் 6. பரசுராம(ன்) அவதாரம் 7. இராம(ன்) அவதாரம் 8. பலராம (ன்)அவதாரம் 9. கிருஷ்ண(ன்) அவதாரம் 10. கல்கி அவதாரம் யாவற்றையும் ஒருங்கேயிருந்து பார்த்துப் பார்த்து அனுபவித்து, அந்தப் பரந்தாமனிடம், நாமும் வரம் கேட்டோம். கலியுகத்தில் கல்கியவதாரமாகவந்து, எம்கண்ணீருக்கு மனமிரங்கி அருள் செய்ய வேண்டும். அடாவடிகளும், ஆணவ அக்கிரமங் களும், பலாத்காரமும், பலவீனங்களும், பாலியல் தொல்லைகளும் நீக்கியருள வேண்டும். இந்த மண் மீண்டும் பசுமை பெறவேண்டும் என்றவாறு கல்கியவதாரம் ஈற்றில் மண்டபத்துக்கும் மண்ணுக்கும் மங் கலம் தந்தது. எது நடக்க வேண்டுமோ அது நன்றாகவே நடந்தது.

**நாட்டுக்கூத்து**

பலே! பாரம்பரியம் சிதையாமல், பரபரப் பாக மண்டபத்தை உலுப்பி எடுத்தது. நாட்டுக்கூத்து. பாட்டும் ஆட்டமும் அடே யப்பா! பிரம்மாதம். "ஆசிரியம்" என்ற நாமம் ஜொலித்த இந்தப் பெருவிழா 2016 இல் எப்படி இருக்கும் என்று நான் கற்பனை செய்துகொண்டு விடை பெற்றேன்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமையலில் இவை தெரியுமா?



❖ காய்கறிகளைக் கொதிக்க வைக்கும் நீரில் ஒரு சிட்டிகை உப்பைச் சேர்த்தால், காய்கறிகளின் நிறம் குறைவதைத் தடுக்கலாம். வேர்க் காய்கறிகளை மூடிய பாத்திரங்களில் குறைந்த சூட்டில் வைத்தும், பச்சைக் காய்கறிகளை திறந்த பாத்திரங்களிலும் சமைக்க வேண்டும்.

❖ பச்சை மாவில் சிறிதளவு அரிசிமாவைக் கலந்தால் மொறுமொறுப்புக் கொடுப்பதுடன் எண்ணெய்ப் பசையையும் குறைக்கலாம்.

❖ பாகற்காய் நீண்ட நாள்களுக்கு கெடாமல் இருக்க, அதனை நறுக்கி சிறிதளவு உப்புச் சேர்த்து எவர். சில்வர் பாத்திரத்தில் வைத்து குளிர் சாதனப்பெட்டியில் வைக்கவும்.

❖ காய்கறிகளில் உப்பு அதிகமாகச் சேர்த்து விட்டால், கோதுமை மாவை உருட்டி அதில் தோய்த்து எடுக்கவும், அதேபோல் எதோ ஒன்றில் காரம் அதிகமாகச் சேர்த்து விட்டால் காரத்தை குறைக்க எலுமிச்சைச் சாற்றை சில சொட்டுகள் விடவும்.

❖ சமைக்கப்படாத பச்சை இறைச்சியை மிருதுவாக்க எலுமிச்சையைத் தேய்க்கலாம் அல்லது வாழையிலையில் சுற்றி வைக்கலாம்.

## சமைப்போம் வாங்க



### மில்க் அல்வா

**தேவையான பொருள்கள்:**

பால் - 1 கப்
சீனி - 2கப்
நெய் - 1கப்
ரவை - 1 கப்
பாதம் - 1 கரண்டி
மஞ்சள் கலர் - கால் கரண்டி


**செய்முறை:**

ஒரு தாச்சியில் ஒரு கரண்டி நெய் ஊற்றி பாதாம் பருப்பை வறுத்து வைக்கவும். பால், சீனி, நெய் , ரவை, மஞ்சள் கலர் எல்லாம் ஒன்றாகச் சேர்த்து கலந்து கனமான பாத்திரத்தில் போட்டுக் கிளறவும்

இவை எல்லாம் வெந்து ஒன்றாக சேர்ந்து வரும்போது நெய் மேலே மிதக்கும். உடனே அடுப்பைக் குறைத்து வைத்து நன்கு சுண்டும்வரை நன்கு கிளறி வறுத்த பாதம் பருப்பைச் சேர்த்து கிளறி இறக்கவும்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 120 | 140 | 120 | 200 |
| கத்தரி | 250 | 250 | 250 | 200 | 220 | 160 | 160 |
| கரட் | 180 | 240 | 200–300 | 180 | 300 | 300 | 370 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40 | 30 | 30 |
| பயிற்றை | 150 | 200 | 240 | 200 | 260 | 300 | 150 |
| பாகல் | 280 | 260 | 300 | 300 | 300 | 380 | 300 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 100 | 90 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 150 | 120 | 140 | 140 | 180 | 120 |
| பூசணி | 50 | 60 | 60 | 60 | 60 | 80 | 40 |
| தக்காளி | 150 | 140 | 140 | 140 | 140 | 140 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 | 60 | 60 | 60 | 40 |
| கீரை | 20 | 20 | 50 | 20 | 40 | 50 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 30 | 50 | 30 | 40 | 15 |
| பச்சை மிளகாய் | 800 | 800 | 800 | 700 | 700 | 1000 | 800 |
| புடோல் | 100 | 100 | 100 | 120 | 120 | 160 | 100 |
| கோவா | 120 | 160 | 160 | 200 | 160 | 160 | 150 |
| வெண்டி | 120 | 140 | 160 | 140 | 140 | 120 | 150 |
| போஞ்சி | 300 | 280 | 300 | 280 | 280 | 320 | 180 |
| லீக்ஸ் | 180 | 180 | 160 | 180 | 160 | 200 | 160 |
| தேங்காய் | 50 | 38 | 50 | 60 | 60 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 | 80 | 90 | 100 | 120 |
| தேசிக்காய் | 250 | 160 | 150 | 120 | 180 | 120 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20 | 20 | 20 |
| கறிமிளகாய் | 500 | 300 | 300 | 340 | 400 | – | 300 |
| இராசவள்ளி | 250 | 150 | 150 | 180 | 180 | 160 | 130 |



## இது புதுசு





### பிரின்ரட் சேட்

ஆண்களுக்கான ஆடை வகைகளில் பிரின்ரட் சேட் அறிமுகமாகியுள்ளது. இந்தச்சேட் மென்மையான துணியில் வர்ண வேலைப்பாடுகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது 800 ரூபா முதல் 1,800 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 600 | 800 | 700 | 600 | 600 |
| நண்டு | 300 | 400 | 300 | 400 | 250 | - |
| கணவாய் | 500 | 600 | 500 | 600 | 650 | - |
| பாரை | 400 | 500 | 500 | 600 | 500 | 400 |
| சுறா | 450 | 600 | - | 600 | - | - |
| சீலா | 250 | 400 | 250 | 500 | 400 | 350 |
| விளை | 400 | 500 | 300 | 450 | 500 | 400 |
| முரல் | 300 | 350 | 300 | 400 | 300 | - |
| கும்பிளா | 350 | 300 | 400 | 400 | 500 | - |
| விளாக்கன் | 450 | 800 | - | 400 | 400 | - |
| ஒரா | 300 | 450 | 300 | 450 | - | 350 |
| திரளி | 200 | 300 | 200 | 350 | - | 300 |
| நகரை | 150 | 250 | - | 300 | 100 | 350 |
| சூடை | 150 | 150 | 120 | 120 | 150 | - |
| ஓட்டி | 200 | 150 | 150 | 300 | 200 | 300 |
| திருக்கை | 150 | 350 | 250 | 300 | - | - |
| மதனம் | 150 | 200 | 200 | 270 | - | - |
| கொய் | 100 | 150 | 70 | 100 | 100 | 250 |
| பாலை | 350 | 150 | 250 | 400 | 200 | - |
| வளையா | 100 | 200 | - | 300 | - | 250 |

**நாளை**
மார்கழி -15
வியாழக்கிழமை 31.12.2015
திதி: ஷஷ்டி மு.இ.08.35
நட்சத்திரம்: [illegible]
ராகுகாலம்: [illegible]
சுபநேரம்: 07.59- 09.29 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | 6 |
| 2 | 7 | | | 8 | 4 | | 5 | |
| 4 | | 3 | 5 | 7 | | | | |
| | 2 | | 1 | | | | | 5 |
| | | 1 | | | | 8 | | |
| 8 | | | | | 6 | | 3 | |
| | | | | 4 | 5 | 9 | | 8 |
| | 4 | | 2 | 6 | | | 1 | 7 |
| 9 | | | | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 6 | 8 | 5 | 4 | 7 | 2 | 9 |
| 7 | 5 | 2 | 9 | 3 | 6 | 8 | 1 | 4 |
| 9 | 4 | 8 | 7 | 2 | 1 | 5 | 6 | 3 |
| 5 | 1 | 7 | 6 | 8 | 3 | 9 | 4 | 2 |
| 6 | 8 | 4 | 2 | 7 | 9 | 1 | 3 | 5 |
| 3 | 2 | 9 | 1 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 2 | 9 | 3 | 5 | 6 | 7 | 4 | 8 | 1 |
| 8 | 7 | 1 | 4 | 9 | 2 | 3 | 5 | 6 |
| 4 | 6 | 5 | 3 | 1 | 8 | 2 | 9 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட் டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டி யதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.










அன்று விடுமுறை நாள்.
விடுமுறை நாள் என்றாலே வீட்டில் அவ்வப்போது செல்லச் சண்டைகள் நடக்கும். குடும்பம் ஒன்று இருந்தால் சண்டைகள் நடப்பது சகஜம்தானே?
இன்று அந்தச் செல்லச் சண்டை நடந்தது, மகளுக்கும் தாய்க்கும் இடையே.
எவரின் தந்தை அதிக பாசக்காரர் என்ற சண்டை தான் தாய்க்கும், மகளுக்கும் நடுவே நடந்தது.
நான் எதைக்கேட்டாலும்வாங்கித்தருவார்என் தந்தை என்றாள் தாய்.
நான் கேட்காமலேயே அனைத்தையும் வாங்கித்தருவார்என் தந்தை என்றாள் மகள்.
என்னை தங்கத் தட்டில் தாங்கியவர் என் தந்தை என்றாள் தாய்.
என்னை தன் நெஞ்சில் போட்டு தாங்கியவர் என்றாள் மகள்.
செல்லச் சண்டை தொடர்ந்து கொண்டே இருந்தது.
என் தந்தை தான் பாசக்காரர். என்னை அடிக்கவே மாட்டார் என்றாள் தாய்.
இல்லை இல்லை... என் தந்தை தான் பாசக்காரர். மற்றவர்கள் என்னை அதட்டக் கூட விடமாட்டார். என் தந்தை உங்களை அடிப்பது தெரிந்து மௌனமாக இருக்கிறாரே என் தாத்தா..
அப்போ என் தந்தை தானே பாசக்காரர் என்றாள் மகள் விளையாட்டாக.
இதை கேட்டுக் கொண்டிருந்த தந்தைக்கு தூக்கி வாரிப் போட்டது.
தான் தன் மகளை நேசிப்பதுபோலத் தானே, தன் மனைவியும் அவரின் தந்தை நேசித்திருப்பார் என்று உணர்ந்தார்.
மகளின் செல்லச் சண்டை தந்தைக்கு ஒரு பாடத்தைப் புகட்டியது...

WhatsApp

படித்ததில் பிடித்தது

மீனம்மா

குழந்தைகள் எப்போதும் சந்தோசமாகவே இருப்பதின் காரணம்.. அவர்கள் எதைச் சொன்னாலும் நம்பிவிடுவார்கள். உண்மையா பொய்யாவென ஆராய மாட்டார்கள்...!

ஆபாசமாக உடையணிவதை 'நாகரிகமென' நினைக்கும் பெண்களும், பொறுக்கித்தனத்தை 'வீரமென' நினைக்கும் ஆண்களும் இருக்கும் வரை குற்றங்கள் குறையப்போவதில்லை.

# தெலுங்கு பசங்க-2 வெளியாகாதது ஏன்?



சூர்யாவின் 2டி நிறுவனத்தின் தயாரிப்பில் பாண்டிராஜ் இயக்கத்தில் உருவான பசங்க-2 வெளியாகியுள்ளது. இந்தப்படத்தைத் தமிழில் வெளியிடும் போதே தெலுங்கிலும் வெளியிடத் திட்டமிட்டிருந்தார்களாம்.

படத்தின் கருத்து எல்லா மொழிகளுக்கும் பொருந்தும் என்பது மட்டுமின்றி தெலுங்கு ரசிகர்களுக்கும் பிடித்த சூர்யா மட்டுமன்றி அவர்களுக்குப் பரிச்சயமான அமலாபால், பிந்துமாதவி ஆகியோரும் நடித்திருப்பதால் படத்தைத் தெலுங்கில் வெளியிட முடிவு செய்தனர். தெலுங்கில் மேமு என்று பெயரிட்டிருந்தனர். தெலுங்கில் சூர்யாவின் படங்களுக்கு பெரிய அளவில் வரவேற்பு இருக்கிறது. இந்தப் படத்தில் அவர் சிறப்புத்தோற்றத்தில் நடித்திருப்பதால் அதற்கேற்ப வியாபாரம் செய்து படத்தை வெளியிடத் திட்டமிட்டிருந்தனர்.

[illegible] வேலைகள் [illegible] முடியவில்லையாம். இதனால் அந்தப் படத்தை தாமதமாக வெளியிட முடிவு செய்தார்களாம்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிலும் விழிப்புடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப்பாடுபடுவர். மாணவர்கள் கண்ணும், கருத்துமாகப் படிப்பர்.

**இடபம்:** நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்களுக்கு தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** நண்பர் மீது அதிருப்தி எண்ணம் ஏற்படலாம். முக்கியமான செயல் ஒன்று நிறைவேறுவதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராகும். மாணவர்கள் ஆர்வத்துடன் படித்து முன்னேறுவர்.

**கடகம்:** அன்றாடப் பணியில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். போட்டி, பந்தயத்தில் வெற்றி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஆர்வம் உண்டாகும்.

**சிங்கம்:** நண்பர்களுடன் கருத்து வேறுபாடு உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாரான அளவில் இருக்கும். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவீர்கள். மாணவர்கள் சாகச விளையாட்டில் ஈடுபட வேண்டாம்.

**கன்னி:** கடின உழைப்பால், இலட்சியத்தை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். மாணவர்கள் கண்ணும், கருத்துமாகப் படிப்பர்.

**துலாம்:** உங்கள் செயலில் நேர்த்தி நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். உறவினர்களின் சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** பணி நிறைவேற தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்கள் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பர். மாணவர்கள் கவனக்குறைவுடன் இருப்பது கூடாது.

**தனுசு:** உங்களின் நற்செயலைச் சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் பணவரவை விடச் செலவு அதிகரிக்கும். பெண்கள் விலை மதிப்புள்ள பொருளைக் கவனமாகக் கையாளவும்.

**மகரம்:** நற்குணம் உள்ளவர்களின் நட்புக் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியைத் தரும். பெண்கள் சலுகை விலை யில் பொருள் வாங்குவர். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

**கும்பம்:** குடும்பத்தில் நிம்மதி நிலைத்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் திருப்திகரமாகும். மாமன், மைத்துனருக்கு உதவுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு, அதிகாரிகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**மீனம்:** நண்பருடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் சிறு அளவில் கடன் வாங்குவர். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொன்னதை

- என்ற தலைப்புடன் இன்றைய (29.12.2015) 'சுடர்ஒளி', 'உதயன்' பத்திரிகைகளிலும், இணையத்தளங்களிலும் வெளிவந்த செய்திகளைக் கண்டு அதிர்ச்சியும், கவலையும் அடைகின்றேன்.

அந்தச் செய்தியில் நானும், எமது கட்சியின் உப தலைவரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரமும் (ஜனா) கூறியதாக வெளிவந்த செய்தி எம்மால் குறிப்பிடப்படவில்லை. அது உண்மைக்குப் புறம்பானது. இந்தச் செய்தியானது தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினதோ அல்லது பெயர் குறிப் பிடப்பட்டுள்ள எமது கருத்தோ அல்ல என்பதையும் மிகவும் தெளிவாகக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

கடந்த 27.12.2015 இல் கூடிய எமது கட்சியின் தலைமைக்குழுக் கூட்டத்தில் தமிழ் மக்கள் பேரவை சம்பந்தமாக கட்சியின் நிலைப்பாட்டை (கட்சியின் செயலாளர் நாயகத்தினால்) ஊடக அறிக்கை மூலமாக தெளிவுபடுத்தி இருந்தோம். தமிழ் மக்களின் ஒற்றுமை என்ற பலத்தின் ஊடாகவே எமது அரசியல் உரிமைகளையும், இனப்பிரச்சினைக்கான தீர்வையும் வென்றெடுக்க முடியும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாக உள்ளோம். இந்த நிலையில் எப்படி இந்த வார்த்தையை நாம் பிரயோகித்திருக்க முடியும். இந்தக் கருத்தை நாம் ஒருபோதும் கொண்டிருக்கவுமில்லை.

இதேவேளை, தமிழ் மக்கள் பேரவைக்கு கருணா, டக்ளஸ் போன்றவர்களின் ஒத்துழைப்புக் கிடைப்பது நல்லது என வடக்கு முதலமைச்சரும் பேரவையின் இணைத் தலைவருமான க.வி.விக்னேஸ்வரன் ஐயா விடுத்த கோரிக்கை எமக்குக் கவலை தருகின்றது - என்றுள்ளது.

ஆனால் நேற்று முன் தினம் எமது செய்தியாளருக்குச் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட் ஆகிய மூன்று பங்காளிக் கட்சிகளும் தமிழ் மக்கள் பேரவையில் இணைந்து செயற்படவுள்ளன என்று சில உள்ளூர் தமிழ் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று அவரிடம் எமது செய்தியாளர் கேட்டபோது.

இந்தச் செய்திகளை நம்பவேண்டாம். இது கருணா, பிள்ளையான் என்று அணி. கூட்டமைப்பிலிருந்து வெளியேறியவர்களும், அதிருப்தியாளர்களும் இணைந்துவிட்டார்கள். இது சந்தர்ப்பவாத அரசியல்.அதில் நாங்கள் இணையமாட்டோம். எதிரிகள் - துரோகிகள்கூட்டுடன் இதுஉருவாகியுள்ளது. வவுனியாவில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற ரெலோவின் தலைமைக் குழுக் கூட்டத்தில் நாங்கள் அதில் இணையப்போவதில்லை என்று முடிவு எடுத்துவிட்டோம். அறிக்கையை எமது செயலளார் ஹென்றி உங்களுக்கு இப்போது அனுப்பிவைப்பார். கூட்டமைப்பை மேலும் பலப்படுத்தப் பாடுபடுவோம். சம்பந்தன் ஐயாவின் தலைமையில் ஜனநாயக வழியில் போராடி மக்களுக்கான தீர்வை வெல்வோம் என்று பதிலைக் கூறினார்.

இந்தச் சம்பாசணையைத் தொடர்ந்தே நேற்று உதயனில் பிரசுரமாகிய குறித்த செய்தி எழுதப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட் ஆகிய மூன்று பங்காளிக் கட்சிகளும் தமிழ் மக்கள் பேரவையில் இணைந்து செயற்படவுள்ளன என்று நேற்றுமுன்தினம் ஊடகங்களில்செய்திகள்வெளியாகியிருந்தன. இது தொடர்பில் ரெலோவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் வினவியபோதே அவர், தமிழ் மக்கள் பேரவையில் எதிரிகள், துரோகிகள் என்று தெரிவித்தார் என்ற தலைப்புடன் 'உதயன்' நேற்று செய்தியைப் பிரசுரித்திருந்தது.

இந்நிலையில், அந்தச் செய்தியில் எதிரிகள் - துரோகிகளுடன் தமிழ் மக்கள் பேரவை- என்ற சொற்பதம் கடுமையான பதம் என்றும், தமிழ் மக்கள் பேரவையில் ரெலோ இணையாது என்று ஒரு நம்பிக்கையின் அடிப்படையில்தான் கூறினேன் என்றும், இந்த இரு கருத்துக்களையும் செய்தியில் உள்ளடக்குவீர்கள் என்று தான் எதிர்பார்க்கவில்லை என்றும் நேற்றுக் காலை எமது செய்தியாளரைத் தொடர்பு கொண்ட செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அத்துடன் இந்தச் செய்தியால் எதிரிகள் - துரோகிகள் என்ற சொற்பதம் கஜேந்திரகுமார் அணியினர் மற்றும் தமிழ் மக்கள் பேரவையில் இணையவுள்ள கருணா, டக்ளஸ் ஆகியோருக்கே பொருத்தமானது என்றும் அவர் கூறினார்.

இந்தச் செய்தியில் எதிரிகள் - துரோகிகள் என்ற சொற்பதத்தை தலைப்பிலே காட்டியுள்ளதால் தமிழ் மக்கள் பேரவையில் இணைந்துள்ள சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். அணியினரும், சித்தார்த்தன் தலைமையிலான புளொட் அணியினரும் மற்றும் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவரான வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனும் ரெலோ மீது கடும் கோபம் கொள்வார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, எதிரிகள் - துரோகிகள் என்ற சொற்பதம் கஜேந்திரகுமார் அணியினர் மற்றும் தமிழ் மக்கள் பேரவையில் இணையவுள்ள கருணா, டக்ளஸ் ஆகியோருக்கே பொருத்தம் என்று தான் விளக்க அறிக்கை ஒன்றை அனுப்பவுள்ளேன் என்றும், அதனைப் பத்திரிகையில் தவறாமல் பிரசுரிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

ஆனால், நேற்று மதியம் மறுப்பறிக்கை ஒன்றையே அவர் தொலைநகல் மூலமும், மின்னஞ்சல் ஊடாகவும் அனுப்பிவைத்துள்ளார்.

இந்த நிலையில், தமிழ் மக்கள் பேரவை தொடர்பில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்த ரெலோவின் உப தலைவரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரனிடம் (ஜனா) கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அனுப்பிவைத்துள்ள மறுப்பறிக்கை தொடர்பில் நேற்று வினவிய போது, கட்சியின் தலைவரிடமே இது தொடர்பில் கேட்க வேண்டும் என்று பதிலளித்தார்.

(த-சி)

## வடக்கு

வடக்கு மாகாண சபைக்கு அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக 2 ஆயிரத்து 758 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. நாளைய தினத்துக்குள் குறித்த நிதி முழுவதும் செலவு செய்யப்படவேண்டும் என்ற நிலை இருப்பினும், தற்போது எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் அவற்றை செலவு செய்து முடிப்பதற்கான கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்தக் காலப் பகுதிக்குள்ளும் செலவு செய்யப்படாத நிதி மீளவும் கொழும்பு அரசுக்கு திரும்பிச் செல்லும் நிலை காணப்படுகின்றது.

கடந்த ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி வரையில் ஒதுக்கப்பட்ட நிதியில் ஆயிரத்து 45 மில்லியன் ரூபா மாத்திரமே செலவு செய்யப்பட்டுள்ளது. இது மொத்த நிதியில் 38 சதவீதம் மாத்திரமே. இதேவேளை, ஒக்ரோபர் மாதத்தின் பின்னரான, நிதிக் கூற்று அறிக்கை பிரதம செயலாளர் அலுவலகத்தினால் இன்னமும் வெளியிடப்படவில்லை. டிசெம்பர் மாதமும் முடிவடையும் நிலையில், நவம்பர் மாதத்துக்குரிய நிதிக் கூற்று அறிக்கை பகிரங்கப்படுத்தப்படவில்லை.

வடக்கு மாகாண சபையினால் இதுவரையில் எவ்வளவு நிதி செலவு செய்யப்பட்டுள்ளது மற்றும் திரும்பிச் செல்லவுள்ள நிதி தொடர்பான விவரங்கள், நிதிக் கூற்று அறிக்கை வெளியிடப்படாமையினால் தெரியவரவில்லை. இருப்பினும், 58 சதவீதமான நிதியே எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் செலவு செய்யப்பட்டு முடிக்கப்படக் கூடும் என்று, பிரதம செயலக வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

எஞ்சிய 42 சதவீதமான நிதியும், கொழும்பு அரசின் திறைசேரிக்கு திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-5)

## ஜனவரி

அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. இதில் கடந்த 9 ஆண்டுகளாக ஜனாதிபதியாகப் பதவி வகித்த மகிந்த ராஜபக்சவை வீழ்த்தி, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதியுடன் பதவியேற்று ஓர் ஆண்டு நிறைவடையவுள்ளது. இதனை முன்னிட்டே, அரசினால் தேசிய வெற்றி வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வாரத்தில், நாட்டிலுள்ள சகலரும் தங்களது வீடுகளில் தேசியக் கொடியை பறக்க விட வேண்டும். அத்துடன், அரச நிறுவனங்கள் அனைத்திலும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சர் ராஜித குறிப்பிட்டார். (த-5)

## படகு விபத்தில்

பின்னர் நேற்றுக் கரை ஒதுங்கிய நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ப்ருத்தித்துறை முனைப் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் படகில் தொழிலுக்குச் சென்ற மூன்று மீனவர்களின் படகை அலை பந்தாடியதில் மீனவர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். அவரது சடலம் நேற்று முன்தினம் மதியம் கரையொதுங்கிய நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தது. அவரோடு பயணித்த மேலும் இருவரில் ஒரு மீனவர் அலையில் அடித்துச் செல்லப்பட்டுக் காணாமல் போயிருந்தார். மற்றையவர் நீந்திக் கரை சேர்ந்திருந்தார்.

இந்த நிலையில் காணாமற்போனவரைத் தேடி நேற்று முன்தினம் முதல் அப்பகுதி மீனவர்களும் கடற்படையினரும் பொலிஸாரும் கடலில் தீவிர தேடுதலை நடத்தியிருந்தனர். இந்த நிலையில் காணாமற்போயிருந்த மற்றைய மீனவரின் சடலம் நீண்ட தேடுதலின் பின்னர் நேற்று அதிகாலை கரையொதுங்கிய நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் தும்பளையைச் சேர்ந்த அலோசியஸ் அன்ரன் ஜோர்ச் சந்திரசேகரம் (வயது-38) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

(த-109)

## மார்ச்

அரசு அழைப்பு விடுத்துப் பத்து மாதங்களுக்கு மேலாகியும், ஐ.நா மனித உரிமை ஆணையாளர் கொழும்பு வரவில்லை.

இந்த நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அடுத்த கூட்டத்தொடருக்கு முன்னதாக அவர் இலங்கை வருவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அடுத்த கூட்டத் தொடர், வரும் பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி தொடங்கி, மார்ச் 24ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

எனவே, வரும் பெப்ரவரி மாத இறுதிக்குள் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை வருவார் என்றும், இந்தப் பயணத்தின் போது அவர், வடக்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட பகுதிகளுக்கும் செல்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(த-வ)

## ஜூன் முதல்

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் மார்ச் மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல், எல்லை நிர்ணயமுரண்பாடுகளால் பிற்போடப்பட்டது. அத்துடன்,கொழும்பு மாநாகர சபை உள்ளிட்ட 23 உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிக் காலம் நாளையுடன் முடிவடையும் நிலையில் மேலும் 6 மாதங்களுக்கு அவற்றின் பதவிக்காலம் நீடிக்கப்பட் டுள்ளது.

இந்த நிலையிலேயே உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் எதிர்வரும் ஜூன் முதல் வாரத்தில் நடத்தப்படுமென நேற்று அரசு அறிவித்துள்ளது.

(த-வ)

## ஈ.பி.ஆர்.எல்.எவ்

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை இணைத் தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் பேரவை, தமிழ் மக்கள் நலன்சார்ந்து செயற்படுவது தமது நோக்கம் என்று தெரிவித்துள்ளது. இவ்வாறு உருவாக்கப்பட்ட அமைப்பில், கடந்த காலங்களில் அரசுடன் - அரச படைகளுடன் சேர்ந்தியங்கிய - ஒட்டுக்குழுக்களான ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் புளொட் அமைப்புகள் என்பனவும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்த ஒட்டுக்குழுக்களால் கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைக்ள் குறிப்பாக ஆட்கடத்தல் - கொலைகள் தொடர்பில் இதுவரை விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். புதிதாக உருவாகியுள்ள பேரவையில் முன்னாள் நீதியரசராக இருந்த முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உள்ளார். எனவே அவர் தலைமையில் குறித்த பேரவை இந்த விசாரணைகளை முன்னெடுப்பதற்கு தனியான ஒரு உபகுழுவை அமைக்கவேண்டும். அவ்வாறு அமைக்கப்பட்ட உபகுழுவின் விவரங்கள் பகிரங்கப்படுத்தப்படுவது அவசியமாகும்.

இப்போதாவது, இந்தப் பேரவையின் ஊடாகப் பாதிக்கப்பட்ட எங்களுக்கு நியாயம் கிடைக்குமா என்பதை எதிர்பார்த்திருப்பதாக, மக்கள் தெரிவித்துள்ளனர்.

(த-5)

## தரம் 1

கொள்ளப்படவுள்ள புதிய மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.


இதேவேளை, ஒரு வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை 40 ஆக மட்டுப்படுத்துவதற்கான பேச்சு கல்வி அமைச்சுக்கும் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் இடையில் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-வ)

## மரண அறிவித்தல்

# சண்முகம் நாகலிங்கம்

பிறப்பு 13 . 10 . 1942



இறப்பு 27 . 12 . 2015

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் நாகலிங்கம் 27.12.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - பொன்னு தம்பதியரின் அன்பு மகனும்,காலஞ்சென்ற மகேஸ்வரியின் பாசமிகு கணவரும்,காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் -இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் இராஜேஸ்வரி (கனடா), செல்வேஸ்வரி,கிருஸ்ணமூர்த்தி (இந்தியா), தில்லையம்பலம் தங்கேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதர னும்,வைரவசிவமூர்த்தி (ஜேர்மனி),பாஸ்கரன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமனும்,சிவனேஸ்வரி, ஸ்ரீரஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சாமினி, சாமிலா, விரிட்சனா,வினோசனா, வினோஜன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2015) புதன் கிழமை நண்பகல்12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| சுழிபுரம் வடக்கு, சுழிபுரம். | தகவல்: மைத்துனர் (கங்காணியார்) | தொடர்பு: 021 790 0178 |

(67091)(13,15,)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணஅறிவித்தல்

## வல்லிபுரம் வேலாயுதம்



பிறப்பு 12.07.1932 — இறப்பு 29.12.2015

அல்வாய் தெற்கு, லீலாகோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் வேலாயுதம் நேற்று (29.12.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்ற வல்லிபுரம் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சின்னமணியின் அன்புக் கணவரும், சின்னத்தம்பி பசுபதி தம்பதியரின் அன்பு மருமகனும், லீலாதேவி, ஜெகதீஸ்வரன் (பிரான்ஸ்), வதனி (லண்டன்), ரமணி (பிரான்ஸ்), சர்வேஸ்வரன் (ஆய்வுகூட உதவியாளர், யா/ஹட்லிக் கல்லூரி), கிருஷ்ணேஸ்வரன் (லண்டன்), விமலேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணா (முகாமையாளர், இலங்கை வங்கி, மந்திகைக் கிளை), வஞ்ஜீஸ்வரன் (லண்டன்), குணேந்திரன் (பிரான்ஸ்), பிரகதீஸ்வரி (பிரபா), கிருஜா, விஜிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், அனித்தா, அர்ச்சனா, தனுசன், கேதுசன், விதுசன், நிதுசன், நிந்துஷா, வருண்யா, சோபிகா (லண்டன்), சௌம்மியா, மிதுளன் (பிரான்ஸ்), கிருசன், சயனிகா, கிருஷ்ணிகா, சமீரன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், ஆஸ்மிதா, ஆஸ்மிதன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2015) புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லீலாகோட்டம்,
அல்வாய்.
021 226 4573

தகவல்:
குடும்பத்தினர்.


### மக்கள்

என்று மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் தலைவர் எஸ்.மாமாங்கராஜா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு சிவில் சமூக அமைப்பிடம், தமிழ் மக்கள் பேரவையில் இணையுமாறு கோரிக்கை விடுக்கப்படவில்லை. இந்த விடயத்தில், முறையான வழிமுறைகள் பின்பற்றப்படவில்லை. எமது ஆலோசகராக ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை உள்ளார். அவருடனும் இது தொடர்பில் கலந்துரையாடவில்லை.

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் செயலாளர் உட்பட மூவர் தமிழ் மக்கள் பேரவையில் இணைந்துள்ளனர். அவர்கள் மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பு என்று தங்களை வெளிப்படுத்தியுள்ளனர். இது தொடர்பில் ஊடகங்களிலும்வெளிப்படுத்தப்பட் டுள்ளது.

தமிழ் மக்கள் பேரவையை விமர்சித்து வருவோர்எங்களிடம் தொடுக்கும் வினாக்களுக்குவிடையளிக்க வேண்டியநிலையில் நாங்கள் உள்ளோம். இந்த நிலையில் நேற்றுமுன்தினம்திங்கட்கிழமை, மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர்பொன்னையா ஜோசப் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இது தொடர்பாக ஆராய்ந்து மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பில் இருந்து சென்றவர்களிடம் விளக்கம் கோரவுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து அவர்கள் தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாமாங்கராஜா தெரிவித்தார்.

(கு-5)


# மரண அறிவித்தல்

## திருமதி சகுந்தலாதேவி சுந்தரலிங்கம்



பிறப்பு 1959.08.23 — இறப்பு 2015.12.26

கிளிநொச்சி நாலாம் வாய்க்காலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலாதேவி(கௌரி) சுந்தரலிங்கம் 26.12.2015 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராசா நாகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற நடராசா தெய்வநாயகி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம்(ஐயாண்ணை) அவர்களின் அன்பு மனைவியும் ஷர்மிலா(UK), கமிலா(UK), மயூலா ஆகியோரின் அன்புத் தாயாரும் சுதாகரன்(UK), ரமேஷ் (UK) ஆகியோரின் அன்பு மாமியாரும் அனர்ஷன், அகன்விகா ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் தர்மராஜா(ராசா -UK), சரோஜாதேவி(அம்மன்), சிவானந்தன்(ஆனந்தன் - கனடா), பாலசரஸ்வதி (பாலா - கனடா), விஜயலட்சுமி(விசியா -UK), கலைவாணி(கலா - கனடா ), ஜெயவாணி (ஜெயா - UK), ஜெயசங்கர்(காந்தி - UK) ஆகியோரின் சகோதரியும் தர்மதேவா, சரோஜாதேவி(UK), விஜியா(கனடா), மூர்த்தி (கனடா), ஜெயராஜன் (கனடா), மகேந்திரன்(கனடா), பாலசிங்கம்(UK), கௌரி(UK), காலஞ்சென்ற தவராஜா காலஞ்சென்ற யோகராஜா, சிவராஜா, மனோரஞ்சிதமலர், தவமணி தேவி, ரூபாவதி, வசந்தகுமாரி, வசந்தராஜன், வசந்தயோகினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 29.12.2015 செவ்வாய்க்கிழமை கொழும்பு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 30.12.2015 புதன்கிழமை கிளிநொச்சியில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 31.12.2015 வியாழக்கிழமை பிற்பகல் 1மணிக்கு இறுதிக் கிரியைகள் நடத்தப்பட்டு கிளிநொச்சி பொதுமயானத்தில் அன்னா ரின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:
077 711 0977 (பாலா)



# மரண அறிவித்தல்

## காசிப்பிள்ளை அருளம்பலம்

(உரிமையாளர் - அருள் ஆனந்த பிடைவை நிலையம், சங்கானை)



அராலி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை அருளம்பலம் நேற்று (29.12.2015) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை- அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் இராசம்மா தம்பதியரின் மருமகனும், புஸ்பா தேவியின் அருமைக் கணவரும், விஜிதா (பிரதேச சபை, காரைநகர்), கீர்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமானந்தம், பரஞ்சோதி, மகேஸ்வரன், மனோன்மணி, ஜெகதேவி, ராஜேஸ்வரி, கலோஜினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தனலக்சுமி, அன்னபூரணம், வசந்தாதேவி, சிவசுப்பிரமணியம் (பாபா வெதுப்பகம்-சங்கானை), சோதி லிங்கம் (ஓய்வுநிலை தபால் அலுவலர், சங்கானை), இரட் னேஸ்வரன் (ஓய்வுநிலை அதிபர்), குணசிங்கம் (முகாமை யாளர்- வர்த்தக வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சிறிஸ்கந்தராசா (லண்டன்), யோகேஸ்வரன் (சுந்தரலிங்கம் கடை, வல்லை வீதி, சங்கானை), நிர்மலாதேவி, புஸ்பமலர் ஆகியோரின் மைத்துனரும், பாலகருணா (கருணா பான்ஸி, சங்கானை), மகேந்திரராசா (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வலிமேற்கு பிரதேச சபை, சுளிபுரம்) ஆகியோரின் அன்பு மாமனும், கஜந்திகா, மதுரங்கா, பிரவீனா, புவிதர்ஷன், தனுதர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2015) புதன்கிழமை பி.ப 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை இந்து கரைச்சி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலிவீதி, சங்கானை.
T.P. No:077 978 9437

(67192)(10.17)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 700 ஏக்கர்

முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த காணிகள் கடந்த ஜனவரி மாதம் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் பின்னர் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றன. பெப்ரவரி - மார்ச் மாதங்களில் வலி.வடக்கு – வலி.கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 8 கிராம சேவையாளர் பிரிவுகள் மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்பட்டன. இதில் ஆயிரத்து 18 ஏக்கர் உள்ளடங்குகின்றது.

இதன் பின்னர் புதிய காணி விடுவிப்புக்கள் எவையும் மேற்கொள்ளப்படாமல் இழுபறி நிலை நீடித்து வந்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே நேற்றைய தினம் திடீரென காணிகள் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளன.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட, பளைவீமன்காமம் வடக்கு (ஜே/236), காங்கேசன்துறை தெற்கு (ஜே/235), தையிட்டி தெற்கு (ஜே/250), பலாலி தெற்கு (ஜே/252), பலாலி கிழக்கு (ஜே/253), பலாலி வடக்கு (ஜே/254)ஆகிய ஆறு கிராம சேவகர் பிரிவுகளும், கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் வருகின்ற வளலாய் (ஜே/284) கிராம சேவகர் பிரிவும் விடுவிக்கப்பட்டுள்ளன.

பளை வீமன்காமம் வடக்கு, காங்கேசன்துறை தெற்கு, தையிட்டி தெற்கு உள்ளடங்கலான 213.5 ஏக்கர் நிலப்பரப்பும் பலாலி தெற்கு, பலாலிகிழக்கு, பலாலிவடக்கு உள்ளடங்கலான 255 ஏக்கர் நிலப் பரப்பும் வளலாய் பிரதேசத்தின் 233 ஏக்கர் நிலப்பரப்புமே நேற்றைய தினம் விடுவிக்கப்பட்டுள்ளன.

இந்தக் காணிகளைப் பொதுமக்கள் நேற்று முதல் பார்வையிட்டு வருகின்றனர். இருப்பினும் இன்று முதலே உத்தியோகபூர்வமாக பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று விடுவிக்கப்பட்ட 7 கிராம சேவையாளர் பிரிவுகளில் 2 கிராம சேவையாளர் பிரிவுகள் மாத்திரமே புதிதாக விடுவிக்கப்பட்ட இடங்களாகும். ஏனைய 5 கிராம சேவையாளர் பிரிவுகளும் பகுதியாக ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-5-21-101-ரி2)

## கூட்டமைப்பு - மு.கா. இன்று சந்திப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் இன்று கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் விசேட சந்திப்பு இடம்பெறவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் .

விரைவில் வரவுள்ள அரசியல் தீர்வில் தமிழ், முஸ்லிம்களின் ஒருங்கிணைந்த பங்களிப்புத் தொடர்பாகவும் , தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் உள்ளூராட்சிச் சபைகளின் எல்லை நிர்ணயம் தொடர்பில் உள்ள நடைமுறைப் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படும்.

இதேவேளை தமிழ் , முஸ்லிம் மக்களிடையே நிலவும் காணிப்பிரச்சினை தொடர்பாகவும் விசேடமாகப்பேசப்படும். -என்றார்.

(வ-10)




விழிநீர் துளிகள்

மலர்வு 25.08.1946 — உதிர்வு 28.12.2015

திரு. வைத்தி நவரத்தினம்

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் பாசநிழல் தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்

அன்னாரின் பிரிவால் துயரும் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்
திரு. க.அன்னலிங்கம் குடும்பம்
திரு. அ.பிரதீபன் குடும்பம்

கட்டப்பிராய்.

மரண அறிவித்தல்

தளையசிங்கம் தசரதகுமாரன்

பிறப்பு 25 . 08 . 1969



இறப்பு 28 . 12 . 2015

ஆத்திசூடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தளையசிங்கம் தசரதகுமாரன் 28.12.2015 காலமானார்.

அன்னார் தளையசிங்கம் காலஞ்சென்ற பவளராணி தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி- சின்னத்தங்கச்சி தம்பதியரின் மருமகனும், சியாமளாவின் கணவரும் சில்சியா, தரங்கினி, பிரியந்தி,குகேசன், கபிலாணி ஆகியோரின் தந்தையும் தர்மகுலசிங்கம், தர்மசீலன், ரூபகாந்தி ஆகியோரின் சகோதரனும், விஜிதா, விஜயகுமார், யாழினி, திருப்பதி, கோமதி, தயாபரன், சக்தியாதி, சத்தியசீலன், சத்தியதாஸன், குகதாஸன், கண்ணதாஸன், றமணதாஸன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| 56/12, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். | தகவல்: தளையசிங்கம் குடும்பம். | தொடர்பு: 077 254 4923 |
|---|---|---|

மரண அறிவித்தல்கள்

திருமதி சரஸ்வதி சடாச்சரம்



காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும் தங்கோடையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சடாச்சரம் 28.12.2015 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.சிவசுப்பிரமணியம் சடாச்சரம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், மதிவதனன் (லண்டன்), மதிவதனா (கனடா), மதிரூபன் (கனடா), ரஞ்சிதமதி (கனடா), சாந்திமதி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மனோன்மணி, இராசமலர் (கனடா), இராசலட்சுமி, காலஞ்சென்ற புண்ணியமூர்த்தி ஆகி யோரின் அன்புச் சகோதரியும், சிவரஞ்சினி (லண்டன்), தாரணி (கனடா), சிவபாதம் (கனடா), சாரதி (இந்தியா) ஆகியோரின் மாமியாரும், ஆதினா, ஆருயன், ஐங்கரன், சஞ்சயன், கபிலன், சனாளன், சயித்ரா, காலஞ்சென்ற அபிராமி மற்றும் விசால், அபிநயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் காரைநகர் வேம்படியில் அவரது இல்லத்தில் நாளை (31.12.2015) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| வேம்படி, காரைநகர். | (சி/28206)(10,17) தகவல்: குடும்பத்தினர். |
|---|---|

மரண அறிவித்தல்கள்

வைத்தி நவரத்தினம்



மானிப்பாய், சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் நாவற்காடு, அச்சுவேலி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட வைத்தி நவரத்தினம் கடந்த (28.12.2015) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தி சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் நாகரத்தினத்தின் பாசமிகு கணவரும் தயாபரன்(லண்டன்), சுபாஜினி (லண்டன்) காலஞ்சென்ற கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயந்தி (லண்டன்), பிரகாஷ்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சரசு, அன்னம், தருமு மற்றும் நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் தங்கரத் தினம், சிவசுப்பிரமணியம்(சோபாலு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் டிலான் (லண் டன்), டிலானி(லண்டன்), டர்சிகா(லண்டன்) மற்றும் றோயிசன் (லண் டன்) ஆகியோ ரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சு வேலி முழக் கன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவற்காடு, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
076 537 9246
077 651 8563
தகவல்: குடும்பத்தினர்.

கதிரவேலு கந்தையா

(மாம்பழ வாத்தியார் -ஓய்வுபெற்ற அதிபர்)



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு கந்தையா கடந்த (27.12.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும், கோபாலகிருஷ்ணன்-பரமேஸ்வரி,நந்தகுமார்-கோதைநாயகி, பத்மநாதன்-இராஜேஸ்வரி, சோதிமலர்-சிவானந்தம், பேரின்பநாதன்-ஜெயகுமாரி, இன்பராணி- இரமணதாஸ், கலாராணி-முகிந்தன், வண்ணநாதன்-சிவதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், மாமனும், நிருபா, நிரஞ்சினி, நிரஞ்சன், குலதீபா,கயல்வேந்தன், தனுசிகா, ரகுராம், வினோதன், விஜிதா, விஜிதரன், வினோதினி, விஜிறதன், விதுசன், சேரலாதன், சேந்தன், உமைவாணன், இராம்சுதன், சஞ்சுதன், தனுசன், சரணியா, கஜங்கன், கீர்த்தனா, கீர்த்திகா,தாட்சாயினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. 2.00மணியளவில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோப்பு ஒழுங்கை, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
077 633 3235
தகவல்: குடும்பத்தினர்.

சிதம்பரநாதன் சாம்பசிவம்

(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)

மலர்வு 24 . 02 . 1956



உதிர்வு 29 . 12 . 2015

தும்பளை, நெல்லண்டையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு களுபோவில விஜயபாமாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சிதம்பரநாதன் சாம்பசிவம் 29.12.2015 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரநாதன் - உமையாத்தப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கமலாச்சி, இராமலிங்கம், விஜயலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 31.12.2015 வியாழக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் காலை 9.00 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12.00 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று கல்கிசை பொது மயானத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு தகனம் செய்யப்படும்.

| தகவல்: குடும்பத்தினர். | தொடர்பு:011 236 3368 (சி.28082)(13.15.16.17) |
|---|---|


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது டெஸ்ட்டில் ஸ்ரெயின் சந்தேகம்

தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளரான ஸ்ரெயினுக்கு தோள்பட்டையில் ஏற்பட்ட வலியால் அவர் அடுத்த டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடுவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.
தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் நடைபெற்று வருகிறது. இரண்டாவது இன்னிங்ஸின் 7 ஆவது பந்துப்பரிமாற்றத்தை வீசும் பொழுது ஸ்ரெயினுக்குவலிஏற்பட்டது. இதனால் உடனடியாக பவிலியன்திரும்பினார். பின்னர்



20ஆவது பந்துப்பரிமாற்றத்தில் திரும்பி வந்தார். அந்த பந்துப்பரிமாற்றத்தில் மூன்று பந்துகள் வீசிய பின்னர் மீண்டும் வலி ஏற்பட்டதால் மீண்டும் பவிலியன் திரும்பினார். இதனால் ஜனவரி இரண்டாம் திகதி ஆரம்பமாகும் இரண்டாவது டெஸ்ட்டில் ஸ்ரெயின் விளையாடுவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. (ம)


## இரண்டாவது டெஸ்டில் ஆஸி. வெற்றி தொடரையும் 2:0 எனக் கைப்பற்றியது



மேற்கிந்தியத் தீவுகளுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் 177 ஓட்டங்களால் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் 2:0 என்று முன்னிலையில் உள்ளது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தீர்மானிக்க ஆஸ்திரேலியா 551-3 என்ற நிலையில் இருந்த பொழுது ஆட்டத்தை இடைநிறுத்தியது. கவாயா 144 ஓட்டங்களையும் சிமித் 134 ஓட்டங்களையும் பேர்ண்ஸ் 128 ஓட்டங்களையும்வோக்ஸ்106ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தீவுகள் சார்பாக ரெய்லர் இரு இலக்குகளையும் பிரீத்வைட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் 271 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக பிராவோ 81 ஓட்டங்க ளையும் பிரீத்வைட் 59 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆஸியின் சார்பாக லையன், பற்றின்சன் இருவரும் தலா 4 இலக்குகளையும், சிடில் இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.
இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் மேற்கிந்தியத் தீவுகள் 351 ஓட்டங்களைப் பெற்றிருக்க வேண்டும். எனவே பொலோ ஒன் கொடுக்கக்கூடிய தகுதியில் ஆஸ்திரேலியா இருந்தாலும் அதற்கு உடன்படாது தொடர்ந்து துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தார் சிமித். மூன்றாம் நாள் முடிவில் ஆஸ்திரேலியா 179-3 என்றிருந்தது. சிமித் 70 ஓட்டங்களுடனும் மார்ஷ் 18 ஓட்டங்களுடனும் களத்தில் ஆட்டமிழக்காதிருந்தனர். நான்காம் நாளான நேற்று ஒருபந்தையேனும் எதிர்கொள்ளாமல் ஆட்டத்தை இடைநிறுத்தியது ஆஸ்திரேலியா. பந்துவீச்சில் தீவுகள் சார்பாக கோல்டர் 2 இலக்குகளையும் பிரீத்வைட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
460 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகளுக்கு இம்முறை ஆரம்பம் ஓரளவு பரவாயில்லை. இருப்பினும் இலக்கை எட்டுப்படியாக அமையவில்லை. 31 ஓட்டங்களுடன் வெளியேறினார் பிரீத்வைட். சண்டிகா, பிராவோ இணை சிறிது தாக்குப்பிடிக்க 80-1 என்ற நிலையில் தீவுகள் இருந்தது. இப்படியே சென்றிருந்தால் ஆஸியை வீழ்த்திவிட முடியும். ஆனால் இருவரும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க 91-3 என்றானது. ரம்டின், கோல்டர் இருவரும் இணைந்து ஆஸியை ஆட்டிப்படைத்தனர். ஆளுக்கொரு அரைச்சதமும் கடந்து தீவுகளுக்கு நம்பிக்கை கொடுத்தனர். இணைப்பாட்டமாக சரியாக 100 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் 59 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரம்டின். கோல்டரின் இன்னிங்ஸும் 68 ஓட்டங்களுடன் முடிவுக்கு வர தீவுகள் 282 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. ஆட்டநாயகனாக லையன் தெரிவானார். (ம)

## பலமான நிலையில் இங்கிலாந்து

தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்றுமுன்தினம் தென்னாபிரிக்கா முதல் இன்னிங்ஸுக்காக 214 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. 89 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து நாள் முடிவில் 172-3 என்றுள்ளது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்ய இங்கிலாந்தின் இன்னிங்ஸ் 303 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. பந்துவீச்சில் ஸ்ரெயின், மோர்கல் இருவரும் தலா 4 இலக்குகளையும் அப்பொட், பியட் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்காவுக்கும் ஆரம்பம் மோசமாகவே அமைந்தது. மூன்றாம் நாள் முடிவில் அந்த அணி 4 இலக்குகள் இழப்புக்கு 137 ஓட்டங்களை எடுத்திருந்தது. எல்கர் 67 ஓட்டங்களுடனும் பவுமா 10 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக களமிறங்கினர். மேலதிகமாக ஓர் ஓட்டத்தையேனும் பெறாமல் போல்ட் ஆனார் பவுமா. எல்கர் ஒருமுனையில் நிலைத்து நிற்க மறுமுனையில் டுமினி, அப்பொட் இருவரும் முறையே 2 ஓட்டங்களுடனும் ஓட்டங்களைப் பெறாமலும் ஆட்டமிழந்தனர். சதத்தை நிறைவுசெய்தார் எல்கர். ஸ்ரெயின், பியட், மொர்கல் மூவரும் பெரிதாக சாதிக்க இல்லை.



முடிவில் 214 ஓட்டங்களில் சுருண்டது தென்னாபிரிக்கா. ஆரம்ப வீரராக களமிறங்கி இறுதிவரை ஆட்டமிழக்காது நின்ற எல்கர் 118 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் புரோட், மொயின் அலி இருவரும் தலா நான்கு இலக்குகளையும் பின் இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.
89 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்தை ஏழே ஓட்டத்துடன் ஆட்டமிழந்து மீண்டும் ஏமாற்றினார் குக். கேல்ஸ், கொம்டன் இணை சிறிது தாக்குப்பிடித்தது. ஓர் ஓட்டத்தால் அரைச்சதத்தை தவறவிட்டார் கொம்டன். பியட்டின் சுழலில் கேல்ஸ் சிக்க இங்கிலாந்து 119-3. ரெய்லரும் ரூட்டும் இணைந்து நாள் முடிவுவரை சமாளிக்க மூன்றாம் நாள் முடிவில் இங்கிலாந்து 172-3 என்றுள்ளது. ரூட் 60 ஓட்டங்களுடனும் ரெய்லர் 24 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)



## இசை நிகழ்ச்சிக்காக மன்னிப்பு கேட்கும் குமார் சங்கக்கார, மகேல ஜெயவர்தனா

பலரது எதிர்ப்புக்கு உள்ளாகியுள்ள "என்றிக் லைவ்" இசை நிகழ்ச்சிக்கு மன்னிப்பு கோருவதாக இலங்கை அணியின் முன்னாள் தலைவர்களான சங்கக்காராவும், மகேலவும் அறிவித்துள்ளனர்.
கடந்த 20 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற "என்றிக் லைவ்" இசை நிகழ்ச்சியின் பொழுது இடம்பெற்ற சில சம்பவங்கள் பொதுமக்களை மிகவும் முகம் சுழிக்க வைத்தன. இந்த நிகழ்வை ஏற்பாடுசெய்த நிறுவனத்தின் உரிமையாளர்களாக சங்காவும் மகேலவும் உள்ளனர். இலங்கையின் கலாசாரத்துக்கு பங்கம் விளைவிக்கும் அளவுக்கு நிகழ்வு அமைந்தமைக்கு பொது மக்களிடம் மன்னிப்பு கோருவதாக சங்காவும், மகேலவும் கூட்டாக அறிவித்துள்ளனர். இசை நிகழ்ச்சியைக் காண வருகை தந்திருந்தவர்களின் பணத்தை திருப்பி வழங்க தீர்மானித்துள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.
நிகழ்ச்சி தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளதோடு, இவ்வாறான நிகழ்ச்சிகள் இனிமேல் இலங்கையில் நடத்துவதற்கும் தடைவிதிப்பதாக அறிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சல்வடோர் கால்பந்தாட்ட வீரர் துப்பாக்கிச் சூட்டில் சாவு



எல் சல்வடோர் தேசிய அணியின் முன்னாள் கால் பந்தாட்ட வீரரான அல் பிரடோ துப்பாக்கிப் பிரயோகத்தில் சாவடைந்துள்ளார்.
எல் சல்வடோரின் தலை நகரான சன் சல்வடோரிலேயே அல்பிரடோ கொலை செய்யப்பட்டுள்ளார். எல்சல்வடோர் சார்பாக அதிக ஆட்டங்களில் பங்கேற்ற அல்பிரடோ, 2013ஆம் ஆண்டு ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டமையால் ஆயுள்காலத் தடை பெற்றிருந்தார். (ம)



# நடப்பு வருடத்தின் சிறந்த கழகமாக சென்றலைட்ஸ் வி.கழகம் தெரிவானது


ஜோர்ஜ் வெப்ஸ்ரர் கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தின் சிறந்த அணியாக சென்றலைட்ஸ் அணி தெரிவுசெய்யப்பட்டுள்ளது.
நடப்பு வருடத்தில் தான் எதிர்கொண்ட 19 ஆட்டங்களில் 15 ஆட்டங்களில் வெற்றி பெற்று 100.49 புள்ளிகளுடன் சென்றலைட்ஸ் முதலிடத்தில் உள்ளது. 19 ஆட்டங்களை எதிர்கொண்டு 10 ஆட்டங்களில் வெற்றிபெற்ற கே.சீ.சீ.சீ. 77.74 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. ஜொனியன்ஸ் அணி 16 ஆட்டங்களில், பத்தில் வெற்றிபெற்று 75.38 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தில் உள்ளது. காட்லி யைற்ஸ் நான்காம் இடத்திலும் சிறி காமாட்சி ஐந்தாம் இடத்திலும் உள்ளன. ஆறு முதல்பத்து இடங்களுக்குள் முறையே ஜொலி ஸ்ரார்ஸ், திருநெல்வேலி சீ.சீ., யாழ். சென்றல், ஸ்கந்தா ஸ்ரார்ஸ், யூனியன்ஸ் ஆகிய அணிகள் உள்ளன. (ம)

## ஆமிர் விளையாடத் தடையல்ல இம்ரான் கான் பச்சைக்கொடி

சூதாட்டத்தில் ஈடுபட்டதால் தடை விதிக்கப்பட்டு மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ள பாகிஸ்தான் வீரரான ஆமிர் அணியில் விளையாட எந்தத் தடையுமில்லை என்று தெரிவித்துள்ளார் முன்னாள் தலைவரான இம்ரான் கான்.
இங்கிலாந்துடனான தொடரின் பொழுது சூதாட்டத்தில் ஈடுபட்ட காரணத்தினால் ஆமிருக்கு 4 வருடத் தடை விதிக்கப்பட்டது. தனது 19ஆவது வயதில் தடைபெற்ற அவர் 23ஆவது வயதில் தற்பொழுது மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளார். ஆனால் சூதாட்டத்தில் ஈடுபட்ட வீரர் ஒருவர் அணியில் விளையாடக்கூடாது என்று வலியுறுத்திய சிலர் ஆமிரை அணியில் வைத்திருக்கக்கூடாது என்று கருத்துத் தெரிவித்தனர். பாகிஸ்தான் வீரர்களான அசார் அலியும் ஹபீஸும் ஆமிர் அணியில் இருந்து தூக்கப்படவேண்டும்என்றேதெரிவித்தனர்.
குறித்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இம்ரான் கான் ஆமிர் அணியில் தொடர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் - நாட்டின் ஆட்சி சில கயவர்களின் கையில் தங்கியுள்ளது. இவ்வாறு இருக்கையில் ஆமிர் அணியில் தொடர்வதில் தடை ஒன்றும் இல்லை. அவர் ஒரு சிறந்த வேகப்பந்து வீச்சாளர். அவரது திறமை அணிக்குத் தேவை. தனது தடைக்காலத்தின் பொழுது குற்றத்துக்கான தண்டனையை அவர் அனுபவித்துவிட்டார். அவர் அணியில் தொடரக்கூடாது என்று தடை விதிக்க எவருக்கும் உரிமை இல்லை- என்றார். (ம)




## டோனியின் வாழ்க்கை செப்ரெம்பரில் ரிலீஸ்




டோனியின் வாழ்க்கை வரலாறு குறித்த திரைப்படம் வெளியாகவுள்ள திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய கிரிக்கெட் அணியின் சாதனைத் தலைவரான டோனி, அணிக்கு 2 உலகக்கிண்ணங்களை வென்று கொடுத்தவர். கடந்த ஆண்டு அவர் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்று விட்டநிலையில், தற்போது ரி-20 மற்றும் ஒருநாள் ஆட்டங்களின் தலைவராக உள்ளார்.கடந்த வருடத்தின் இறுதிப் பகுதி முதல் அவரது வாழ்க்கை வர லாறு பற்றி 'சொல்ல மறந்த கதை' என்றபெயரில்திரைப்படம் ஒன்று தயாராகிறது. நீரஜ் பாண்டே இயக்கத்தில் தயாராகியுள்ள இந்தப் படத்தில் சுவாந்த் சிங் ராஜ்புத் (டோனி), கயாரா அத்வானி (சாக்சி), அனுபம் கெர் (டோனியின் தந்தை) ஆகியோர் நடிக்கின்றனர். ரயில்வேதிணைக்களத்தில் நுழைவுச்சீட்டுக் கிளிப்பவராக இருந்த டோனி இன்று இந்திய அணியின் தலைவராக வளர்ந்தது வரை அவரது வாழ்க்கையில் நடைபெற்ற சுவாரசியமான சம்பவங்கள் இந்தத் திரைப்படத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. ரசிகர்கள் மத்தியில் அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்த திரைப்படம் இந்த வருடத்தின் இறுதியில் அல்லது அடுத்த வருடத்தின் தொடக்கத்தில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் படப்பிடிப்பு முழுமையடையாத காரணத்தால் அடுத்தவருடம் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி வெளியாகும் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம)

## வர்ண விருது வழங்கும் விழா

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்தும் வர்ண விருது வழங்கும் விழா இன்று நடைபெறவுள்ளது.
வடமாகாண கல்வி, கலாசார, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவிந்திரன் தலைமையில் நெல்லியடி மத்திய கல்லூரி மண்டபத்தில் மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானமும், கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)

# கராத்தேத் தொடரில் பருத்தித்துறை தற்காப்பு கலையகம் பதக்க வேட்டை

யாழ்ப்பாணம், டிசெ. 30
தேசிய மட்ட கராத்தேத் தொடரில் பருத்தித்துறை தற்காப்பு கலை யக மாணவர்கள் 1தங்கம், 2வெள்ளி, 6 வெண்கலங்கள் உட்பட மொத்தமாக 9 பதக்கங்களைக் கைப்பற்றியுள்ளனர்.
இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட தேசிய மட்ட கராத்தேத் தொடர் கொழும்பு கராத்தே சம்மேளனத்தின் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பருத்தித்துறைதற்காப்புகலையகமாணவர்கள் 1தங்கம், 2வெள்ளி, 6வெண்கலங்கள் உட்பட மொத்தமாக 9 பதக்கங்களைக் கைப்பற்றியுள்ளனர்.
பி.துவாரகா 13வயதுப்பிரிவுப் பெண்களுக்கான குமித்தேப் போட்டியில் தங்கப் பதக்கத்தினையும், 55கிலோ எடைப் பிரிவினரின் காட்டாப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தினையும் பி.மிதுசான காட்டாப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தினையும் கைப்பற்றினர்.
ஆர்.குணதீப் 15வயதுப் பிரிவினரின் குமித்தேப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தினையும், இ.ஆழிக்குமாரன், கே.சஜீகரன் இருவரும் 17வயதுப் பிரிவின் குமித்தேப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தினையும், எம்.சயந்தன் 19வயதுப்பிரிவு ஆண்களுக்கான 55 கிலோ எடை பிரிவில் குமித்தேப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தினையும், ஜே.பார்த்தீபன் 21வயதுப்பிரிவினருக்கான 92 கிலோ எடைப் பிரிவில் குமித்தேப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தினையும், எ.அஜந்தன் அதே வயதின் 87 கிலோ எடைப் பிரிவில் குமித்தேப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தினையும் கைப்பற்றினர். (ம-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜ்கோட்டின் பயிற்சியாளராக கேரி கிறிஸ்டன் நியமனம்?



ஐ.பி.எல். தொடரில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட அணிகளில் ராஜ்கோட் அணி கேரி கிறிஸ்டனை தனது பயிற்சியாளராக்கத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கேரி கிறிஸ்டன் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் ஆரம்ப வீரராவார். இவர் இந்திய அணிக்குப் பயிற்சியாளராக இருந்த போதுதான் இந்தியா உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றியது. அத்துடன் பல்வேறு வெற்றிகளையும் பெற்றது. அவரது பதவிக்காலம் முடிந்த பின்னரும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அவரைப் பதவியில் நீடிக்க விரும்பியது.

ஆனால், கிறிஸ்டன் பயிற்சியாளர் பதவியில் நீடிக்க விரும்பவில்லை. அதன்பின் டெல்லி ஐ.பி.எல். அணிக்கு இரண்டு ஆண்டுகள் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் புதிதாக 2016-17 ஆம் ஆண்டுகளுக்கு ராஜ்கோட் அணி அவரை தலைமைப் பயிற்சியாளராக நியமிக்க விரும்புகிறது. மற்றொரு புதிய அணியான புனே ஏற்கனவே சென்னை அணியின் பயிற்சியாளராக இருந்த நியூசிலாந்தின் முன்னாள் வீரர் பிளமிங்கை நியமிக்க விரும்புவதாகக் கூறப்படுகிறது. (ம)



காயம் காரணமாக ரியல் மட்ரிட் கழகத்தில் இருந்து விலகியிருந்த டானி கார்வயல் நீண்ட இடைவேளைக்குப் பின்னர் மீண்டும் பயிற்சிக்குத் திரும்பியுள்ளார். (ம)

# நெருக்கடியான நிலையில் இலங்கை அணி நாளையும் தோற்றால் கிண்ணம் நியூசியிடம்

இலங்கை நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் ஒருநாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றேயாக வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்குகிறது இலங்கை.

தொடரில் மொத்தமாக ஐந்து ஆட்டங்கள். ஏதேனும் மூன்று ஆட்டங்களில் ஒரு அணி வெற்றிபெற்றால் அந்த அணி கிண்ணத்தைக் கைப்பற்றும். முடிவடைந்த முதல் இரண்டு ஆட்டங்களிலும் நியூசிலாந்து அபார வெற்றி பெற்றுள்ளது. இதனால் நாளைய ஆட்டத்திலும் வெற்றி பெற்றால் நியூசிலாந்து கிண்ணத்தைக் கைப்பற்றும். எனவே தொடரில் தனது இருப்பைத் தக்கவைக்க வேண்டுமாயின் நாளைய ஆட்டத்தில் வெற்றிபெற்றேயாகவேண்டும் என்ற கட்டாயத்தில் இலங்கை களமிறங்குகிறது. (ம)




# கைகுலுக்கல் விவகாரம் கௌதம் கம்பீர் காட்டம்

இந்தியாவின் உள்ளூர் ஆட்டத்தில் (விஜய் ஹசாரே கிண்ணம்) டெல்லி அணியின் தலைவர் கம்பீர், ஜார்கன்ட் அணியின் வீரரான டோனிக்கு கைகுலுக்க மறுத்ததாக வீடியோ ஒன்று பரவியது. இந்த வீடியோவில் டோனி அனைவருக்கும் கைகுலுக்கும் போது கம்பீர் மட்டும் கைகுலுக்காமல் போவது போன்ற காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில் இதற்கு கம்பீர், டோனியுடன் கைலுக்குவது போன்ற புகைப்படத்தைப் பதிவிட்டு முகப்புத்தகத்தில் விளக்கம் அளித்துள்ளார். 'விஜய் ஹசாரே தொடரின் காலிறுதி ஆட்டத்தில் நானும், டோனியும் கைகுலுக்கிக் கொண்ட புகைப்படம் இது தான். இந்த கைகுலுக்கல் விவகாரம் மோடி - பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரிப் பேச்சுவார்த்தையை விட பெரிதாக பேசப்படுகிறது. உண்மை என்னவென முதலில் தெரிந்து கொள்ளுங்கள்' என்று பதிவிட்டுள்ளார். கம்பீரின் இந்தப் பதிவை இந்திய அணித்தலைவர் டோனியும் தனது முகப்புத்தகத்தில் பகிர்ந்துள்ளார். (ம)



# தடுமாறும் வில்லியர்ஸ்

தென்னாபிரிக்க ஒருநாள் ஆட்டங்களின் அணிக்கான தலைவரும், முக்கியமான துடுப்பாட்ட வீரருமான வில்லியர்ஸ், தனது எதிர்காலம் குறித்து முரண்பாடான சமிக்ஞைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

வில்லியர்ஸும் டேல் ஸ்ரெயினும் பிலாந்தரும் சர்வதேச ஆட்டங்களிலிருந்து விலகவுள்ளதாக சில செய்திகள் வெளியாகியிருந்தன. இந்தச் செய்திகளை வதந்திகள் எனத் தெரிவித்த வில்லியர்ஸ் தனக்கு ஓய்வு பெறும் எண்ணம் இல்லை என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் தற்பொழுது அவர் முரண்பாடான கருத்தைத் தெரிவித்துள்ளார். அதாவது அடுத்தாண்டு மே மாதத்தில் தென்னாபிரிக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையுடன் டெஸ்ட் ஆட்டங்களில் தொடருவது தொடர்பாக கலந்துரையாடவுள்ளதாக வில்லியர்ஸ் அறிவித்துள்ளார். டேல் ஸ்ரெயின், வேர்ணன் பிலாந்தர் தொடர்பாக, உறுதியான தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. (ம)

# ஐ.சி.சி.யின் சர்வதேச தரப்படுத்தலில் ஆப்கானிஸ்தான் வரலாற்றுச் சாதனை

சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் ஒருநாள் ஆட்டங்களுக்கான தரவரிசைப் பட்டியலில் முதற்தடவையாக பத்து இடங்களுக்குள் ஆப்கானிஸ்தான் அணி நுழைந்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை சிம்பாப்வேக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் வெற்றியடைந்ததைத் தொடர்ந்தே, பத்தாவது இடத்திலுள்ள சிம்பாப்வேயை ஆப்கானிஸ்தான் பிரதீயீடு செய்துள்ளது. எனினும் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சிம்பாப்வேக்கு எதிரான ஒருநாள் தொடரைக் கைப்பற்றினால் மட்டுமே ஆப்கானிஸ்தான் பத்தாவது இடத்தில் நீடிக்க முடியும். இந்தத் தொடரில் தோல்வியடையும் சந்தர்ப்பத்தில், சிம்பாப்வேக்கும் அயர்லாந்துக்கும் அடுத்ததாக, அவர்களின் வழமையான ஒருநாள் சர்வதேசப் ஆட்டங்களுக்கான தரவரிசை நிலையான 12ஆவது இடத்துக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படும். (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.